வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1995 சித்திரை திங்கள் 28-ம் நாள் (10—5—1964) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 27 | இதழ் 50




# கட்டாய ஓய்வு நிறுத்த வழக்கு

## தாக்கல் செய்ய ஏற்பாடு

ஆட்சிமொழியில் தேர்ச்சி பெறவில்லையென்ற காரணம் காட்டி தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களைக் கட்டாயமாக மூன்று மாதத்திற்குள் பதவியிலிருந்து ஓய்வு பெறும்படி அரசாங்கம் விதித்துள்ள உத்தரவை எதிர்த்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்ய விருப்பதாக அறியப்படுகிறது.

இந்த வழக்கு அடுத்த வாரம் கொழும்புமாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமென அ. எ. வி. ச. முக்கிய பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

இதுவரை ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ் அரசாங்க ஊழியர்கள் கட்டாய ஓய்வு உத்தரவை பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

## திருமலையில் சிலை உடைப்பு

## பௌத்த சிங்களவர் ஆதிக்கம் தலைதூக்குகிறது

திருமலை மாவட்டத்திலுள்ள பழம் பெரும் இந்து வழிபாட்டு விக்கிரகங்கள் அடித்து நொறுக்கப்படுகின்றன. திரியாய், பெரியகுளம் போன்ற இடங்களிலுள்ள காளி, பிள்ளையார் விக்கிரகங்கள் கை, கால் அற்ற முடங்களாகவும், தலையற்ற முண்டங்களாகவும் காட்சி கொடுக்கின்றன. ஆண்டு ஆண்டு காலமாகத் தமிழர் வாழ்ந்து வந்த திரியாயில் தமிழர்கள் நிரந்தர வசிப்பிடங்கள் நிறுவ அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள திரியாய், பெரியகுளம் போன்ற தமிழர் வாழ்ந்த பிரதேசங்களில் சிங்கள பௌத்த ஆதிக்கம் தலைதூக்கியுள்ளது. பெரியகுளத்திலுள்ள ஒரு நந்தனார் கோவிலுக்குத் தமிழ் மூதாட்டி ஒருவர் பல காலமாக விளக்கேற்றி வந்துள்ளார். அவ்விடத்திற்கு வாழ்விடம் இன்றிவந்த பௌத்த பிக்கு ஒருவர், அத்திருப்பணியைத்தான் செய்வதாகக் கூறி விளக்கேற்றுவதுடன் அங்கு வாழ்ந்தும் வந்தார். இன்று அப்பகுதிகளில் உள்ள காடுகளில் சிங்களப் பௌத்தர்கள் அனுமதியின்றிக் குடியேறியவுடன்; அப்பிக்கு அக்கோயிலை புத்தர் ஆலயமாக்கியதுடன் அவ்வாலயத்தின் மணி ஒலி கேட்கும் இடம் அனைத்தும் பௌத்தர்களுக்கு உரியது என்றும் உரிமை கொண்டாடத் தொடங்கியுள்ளாராம்.

திரியாய் என்ற கிராமத்தில் அத்துமீறிக் குடியேறிய சிங்கள பௌத்தர்கள், இன்று திரியாய்க் கிராமம் சிங்களவர்களுக்கே சொந்தம் என்று உரிமை கொண்டாடுகிறார்களாம். அப்பகுதியில் நிரந்தரமாக வாழ்ந்து வரும் தமிழர்கள் இன்று நிரந்தரமான வீடு கட்ட அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாம்.

இப்பகுதிகளைச் சுற்றியுள்ள காடுகளில் காணப்படும் இந்து மத விக்கிரகங்களும் ஆலயங்களும் உடைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் இப்பகுதியிலுள்ள 15 அடி உயரமுள்ள காளி விக்கிரகம் ஒன்றின் கால், கை, தலை ஆகியன உடைக்கப்பட்டு முண்டமாகக் காட்சி கொடுக்கிறது. இந்து விக்கிரகங்களில் முருகன் (சுத்தரகம தெய்யோ) விக்கிரகம் மட்டும் இவர்களின் சிலை உடைப்பு வேலையிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளதாம்.

### கோடுள்ள கொடியும் கோடில்லாக் கொடியும்

இடதுசாரிகள் ஐக்கிய முன்னணியின் சார்பில் கொழும்பு காலிமுகத்தில் நடைபெற்ற மேதின விழாவில் முதல் முறையாக சிங்கக் கொடி காணப்பட்டது. இதுகாலவரை அரிவாள் சம்மட்டியுடன் கூடிய சிவப்புக் கொடியும் வெறும் சிவப்புக் கொடிகளும் தொங்கவிடும் இடதுசாரியினர் இம்முறை திடீரென சிங்கக் கொடியை தொங்கவிட்டது பொது மக்களுக்கு ஆச்சரியத்தை ஊட்டியது.

சிறுபான்மையினர்களுக்காக கொடியில் பொறிக்கப்பட்ட இரு கோடுகளுள்ள—தேசியக் கொடியாகப் பெரும்பான்மை சமூகம் ஏற்றுக் கொண்ட கொடியையே இடதுசாரிகள் பாவித்துள்ளனர். ஆளும் ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சிக்காரர்கள் மேதினத்தன்று பாவித்த சிங்கக் கொடியில் உத்தியோக பூர்வமான, அங்கீகாரம் பெற்ற இரு கோடுகளுடைய கொடியை மருந்துக்கும் காணக் கிடைக்கவில்லை.

## வலைகள் நாசம்: மீனவர் தொழிலின்றி தவிப்பு

## திருமலையில் பொலிஸ் அட்டகாசம்

திருமலை பத்தாம் குறிச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழ்பேசும் மக்களை, குறிப்பாக மீனவர்களைத் திடீரென போலீஸார் தாக்கினார்களென்றும், சுமார் ரூ. 20,000 பெறுமதியான மீன்பிடி வலைகள் தீக்கிரையாக்கப்பட்டதால், அவர்கள் கடற்றொழிலுக்குச் செல்லமுடியாமல் தவிக்கின்றனரென்றும் செய்தி கிடைத்துள்ளது.

இத்தாக்குதலுக்கு அனுசரணையாக சிங்கள மீனவர்கள் வாடகைக் கார்களிலும், லொறிகளிலும் வந்து கலந்துகொண்டனராம்.

ஒரு போலிஸ்காரர் தாக்கப்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து போலிஸார் கண்டோர் நின்றோர் அனைவரையும் தாக்கினார்களென்றும் கூறப்படுகிறது. ஒருவர் படுகாயமடைந்து அபாயகரமான நிலைமையில் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

தென்னிலங்கையிலிருந்து வந்து இந்தப்பகுதியில் மீன்பிடிக்கும் சிங்கள மீனவர்களால் அங்குள்ள தமிழ்பேசும் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்கனவே பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இப்பொழுது போலிஸ் அட்டகாசத்தையொட்டி, அவர்களின் வலைகளும் தீக்கிரையாக்கப்பட்டுவிட்டதால், அவர்கள் தொழிலுக்குச் செல்லமுடியாமல் தவிக்கின்றனர்.

இதுசம்பந்தமாக திருமலை எம். பி. திரு. மாணிக்கராசா நடவடிக்கை எடுத்து வருவதாக அறியப்படுகிறது.

### பாடசாலை அகற்றும் முயற்சியா?

பட்டிருப்புத் தொகுதியில் பாடசாலைகள் தரம்பிரிப்பது சம்பந்தமாக தப்பபிப்பிராயங்களைப் பரப்புவதில் சில விஷமிகள் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது. பட்டிருப்புத் தொகுதியில் களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு, களுதாவளை, பழுகாமம், முதலைக்குடா ஆகிய இடங்களில் ஆக 5 மாவித்தியாலயங்களே உள்ளன. இவற்றில் களுதாவளை மாவித்தியாலயத்தை அகற்றிவிடப் போவதாக வதந்திகள் அடிபடுகின்றன. மட்டக்களப்பு கல்வி இலாகா அதிகாரிகளை நமது நிருபர் விசாரித்தபோது இது உண்மையல்ல என்று கூறினர்.

பாடசாலைகள் தரம் பிரிக்கப்படும் போது தலைமை ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் அனைவரையும் கலந்தாலோசித்தே முடிவு தீர்மானிக்கப்படும் என்று திரு. சி. மூ. இராசமாணிக்கத்திடம் கிழக்கு மாகாண கல்வி அதிகாரி வாக்களித்துள்ளாராம்.

சில பத்திரிகைகளில் களுதாவளை மாவித்தியாலயம் எடுபட்டுவிடும் என்று வெளியான செய்தியை ஆட்சேபிக்குமுகமாக திரு. இராசமாணிக்கம் கிழக்கு மாகாண கல்வி அதிகாரிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

### நயினாதீவு கிராமசபை தேர்தல்

நயினாதீவு கிராம சபைத் தேர்தல் இம்மாதம் 22-ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. 9 வட்டாரங்களைக் கொண்ட மேற்படி கிராமசபையில் 5-ம் வட்டாரத்துக்கு, தமிழ் அரசுக் கட்சி நயினாதீவு கிளைச் செயலாளர் திரு. அ. நல்லையா போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார். ஏனைய எட்டு வட்டாரங்களிலும் 22 பேர் போட்டியிடுகின்றார்கள்.

### கப்பித்தாவத்தையில் சங்காபிஷேகம்

மருதானை கப்பித்தாவத்தை செல்வ விநாயக மூர்த்தி கோயில் மகா சங்காபிஷேகம் 13-ம் திகதி புதன்கிழமை பகல் 10-30 மணிக்கு நடக்கிறது. அன்று மாலை பிரதான வீதிகளுக்கூடாக செல்வ விநாயக மூர்த்தி திருவீதி உலாவும் நடைபெறும்.

## சிங்களத் தேர்வுக்கு தோற்ற வேண்டாம்

கொழும்பு, மே. 7

"இனியும் சிங்களத் தேர்வுப் பரீட்சையா? நீதி தேவியின் கரத்தில் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் எதிர்காலம் ஒப்படைக்கப்பட்டு இன்று நல்ல தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இனியும் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் தவறு செய்யக் கூடாது.

இம்மாதம் 9ம்திகதி நடைபெறும் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சைக்கு யாரும் தோன்றக் கூடாது. அப்பொழுது தான் நாம் எடுத்த முயற்சியின் பலனை அனுபவித்தவர்களாவோம்.

அரசாங்க எழுதுவினைஞர்கள் மாத்திரமல்ல பிற சேவையாளர்களாகிய ஆசிரியர் சேவை, வைத்திய சேவை இன்னும் உள்ள ஏனைய அரசாங்க சேவைகளில் உள்ளவர்களும் இத்தேர்வுப் பரீட்சைக்குத் தோன்றுகிறார்கள். எல்லோரையும் தமிழ்த் தாயின் பெயரால் கரம் குவித்து வேண்டுவது, இனியாவது இந்த வேண்டாத சிங்களத் தேர்வுப் பரீட்சையைப் புறக்கணியுங்கள். இதனால் நீங்களும் தன்மானத்தோடு வாழ்ந்து உங்கள் பிற்காலச் சந்ததியையும் தன்மானத்தோடு வாழவைத்தவர்களாவீர்கள்" என்று அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை தந்த ஆற்றல் என்னை எழுதத் தூண்டியது

எழுதுவினைஞராகக் கடமையாற்றும் இவர் சிறுகதை, கவிதை, நகைச்சுவைக் கட்டுரை போன்ற பல துறைகளிலும் தனது பேனாவை ஓடவிட்டுள்ளார். ஆனால், சிறு கதையே அவருக்கு எழுத்துலகில் ஓர் நிலையான இடத்தை அமைத்துக்கொடுத்தது. கல்கிப் பத்திரிகை நடாத்திய ஈழத்துச் சிறுகதைப்போட்டியில் மூன்றாவது இடம் இவருக்குக் கிடைத்தது. ஈழத்தில் நடைபெற்ற சிறுகதை, கவிதை, நகைச்சுவைக் கட்டுரைப் போட்டிகளில் அனேக பரிசில்களைத் தனதாக்கிக்கொண்டுள்ளார். சுதந்திரன் வாசகர்களுக்கு தனது எழுத்தோவியங்கள் பலவற்றை அவ்வப்போது வழங்கிவந்த இவர், இப்பொழுது எழுத்துலகிலிருந்து சற்று ஒதுங்கி வாழ்கின்றார். இவர் எழுத ஆரம்பித்த முறையைத் தனக்கே உரித்தான நடையில் கூறுகிறார்:

ஒரு கேள்விக்கு முதலில் விடை தெரிய வேண்டும். நான் ஏன் எழுத ஆரம்பித்தேன்? எழுத வேண்டும் என்று எனக்கு ஏன் தோன்றியது? சூழல் எழுதத் தூண்டியதா? இல்லை, சூழலுக்கும் ஒரு சிறு பங்கு இருக்கலாம்; அவ்வளவுதான். கதைகள், கட்டுரைகளை நிறையப் படித்ததால் நெஞ்சில் நிறைந்து வழிந்த ஆர்வமும் ஊக்கமும் பேனாவைத் தூக்கிக் கையில் தந்ததா? சே, இதுவும் ஒரு பக்கக் காரணமாக இருக்கலாம்; அவ்வளவுதான். அப்படிப் பார்த்தால் ரிக்‌ஷாக்கார ரங்கனும், மீன்கார மாணிக்கமும், பண்டிதர் பால்வண்ணனும், பரசுராமன் பீ. எஸ். ஸி. ஆனர்ஸும் நிறைய எழுதிக் கொட்டவேண்டுமே! ஆதலால் சூழலும் ஆர்வமும் மட்டும் இருந்து போதாது. எனவே இயற்கை தந்த ஆற்றலுக்கு மூலத்தைத் தேடுவது வீண் பிரயாசையாகும்.

பாடசாலைக் காலத்தில் எனக்கு வாய்த்த இரண்டொரு ஆசிரியர்களும் சில நண்பர்களும் நல்லவர்கள். அவர்களுடைய சகவாசத்தால் எனது இதயம் கொஞ்சம் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்தது. இந்தச் சமயத்தில் வகுப்பில் எப்போதும் என்னருகே இருந்த நண்பர் சபாரத்தினத்திற்குச் சில வார்த்தைகள்: "பேரன்பு நண்ப, ஜல்சாராணியிலிருந்து ஜம்புலிங்கம் வரையில் பல கதைகளை என் காதுகளில்—வகுப்புகள் நடைபெறும்போது கூட—உபதேசித்து, 'நானும் எழுதப் போகிறேன், நானும் எழுதப் போகிறேன்' என்று சொல்லிச் சொல்லி என்னை எழுதத் தூண்டிவிட்டு, ஜனத் திரளுக்குள் மறைந்து போய்விட்ட நீர் இன்றைக்கு எங்கே இருக்கின்றீர்?"

## எப்படி முடிந்தது?

ஏதாவது எழுது வேண்டும். எப்படியாவது எழுத வேண்டும். எதற்காவது எழுத வேண்டும்......... எதை எழுதப் போகிறேன்?

## உதயணன்

......எப்படி எழுதப் போகிறேன்?.........எதற்கு எழுதப் போகிறேன்?.........

எமது கல்லூரியில் (பரமேஸ்வரா, யாழ்ப்பாணம்) வருடம் ஒரு முறை ஒரு சஞ்சிகை வெளிவருவது வழக்கம். அதில் மாணவர்களுக்கும் கணிசமான ஒரு பகுதி இருக்கும். அதில் எப்படியாவது ஒரு கதை எழுதிவிட வேண்டும் என்று தலைகீழாக நின்றேன். என்ன பாடு பட்டாலும் எப்படிச் சிரமப்பட்டாலும் இந்த விசித்திர உலகத்தின் போக்கே தனி. எந்தக் காரியத்தையும் செய்யத் துடிக்கும்போது நந்தி மாதிரிக் குறுக்கே நிற்கும். பேசாமல் இருக்கும்போது கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு வந்து நாலு பேருக்கு நடுவே விட்டுவிடும்.

## எப்படி எழுத ஆரம்பித்தேன்

ஒரு கதை எழுத வேண்டும்.

கதைக்குத்தானா பஞ்சம்? நம் வாழ்வில் அன்றாடம் சிதறித் தெறிக்கும் ஒவ்வொரு துளியும் ஒவ்வொரு சிறு கதையாகாதா? மகா சிவ ராத்திரி தினத்து இரவு நித்திரை விழிக்க வென்று கல்லூரிக் கோவிலுக்கு வந்த சில மாணவர்கள், மாணவத் தலைவர்கள் கொஞ்சம் கவனக் குறைவாக இருக்கும் அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கம்பி வேலிக்கு ஊடாக நுழைந்து



கட்டுரையாசிரியர்

ஓட்டமும் நடையுமாக யாழ்ப்பாண நகரத்திற்கு ஓடிப்போனால்.........! இவர்கள் பட்ட சிரமத்தை அறியாத சினிமாக்காரர் இவர்கள் போய்ச் சேர்வதற்கு முன்பே இரண்டாவது காட்சியைத் தொடங்கி விடுவதால் இருளோடு இருளாக உள்ளே போய் உட்கார்ந்து விட்டு இடைவேளையின் போது பக்கத்து ஆசனத்தில் மாமாவோ மச்சானோ இருக்கக் கண்டு பதறியடித்துக் கொண்டு பாதியிலே வெளியேறி வீட்டுக்குப் போனால்......! பக்கத்தில் இருந்து இரண்டாவது காட்சியைப் பார்த்த மாமாவோ மச்சானோ திரும்பிவந்து இவர்களுடைய முதுகில் மூன்றாவது காட்சியைத் தொடங்கியதிலிருந்து மறுநாள் காலை நான்காம் காட்சிக்காக நானூற்றிச் சொச்ச நரம்புகளில் நடுக்கம் கண்டு கல்லூரி அதிபரின் அறையில் பிரம்படி வாங்கத் தயாராகக் காத்திருப்பது வரை எழுதினால் எப்படியிருக்கும்?

அதுதான் போகட்டும்.

இந்த மாதவன் போயும் போயும் இப்படி அசட்டையாக நடந்திருக்க வேண்டாம். அவனுக்கும் கனகத்திற்கும் நீண்ட காலமாகவே தொடர்பு இருக்கும் போலிருக்கிறது. ஒரு நாள் அவன் அவளுக்கு எழுதிய கடிதத்தை புத்தகமொன்றில் வைத்து வழக்கம்போல அந்தச் சிறுமியிடம் கொடுத்தனுப்ப—விஷயம் தெரியாத சிறுமி புத்தகத்தை என்னிடம் தந்துவிட்டுப் போக—ஒன்றும் புரியாமல், எல்லாம் புரிந்து நான் தடுமாற—நாயகன் நாயகி விஷயமறிந்து துடிக்க—மூன்று நெஞ்சங்களில் தீப் பிடித்தது!

மூவரும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொள்ள வாய்ப்பில்லாததால்—தைரியமில்லாததால் தீ சுவாலைவிட்டுக் கிளம்பிப் பரவி—பூ! காதல் என்றால் இதுதானா?......திடீரென்று புஸ் என்று அணைந்து போய் விட்டது. ஆமாம், மாதவன் கொழும்புக்குப் போனான். கனகம் யாரை [illegible] ஒன்றுமே நடக்காதது [illegible]

(15-ம் பக்கம் பார்க்க)




# ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்.

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்துவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண்சை சால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனாம்

**15 நாள் டின் ரூபா 3-00**

**30 நாள் டின் ரூபா 5-75**

தபால் செலவு /-95

ஞானசுந்தர வைத்தியசாலை.

137, செட்டியார் தெரு, கொழும்பு.


## கவிதைப் பூங்கா

# மணிச்சுடரே மறைந்தனையோ

—மண்டூர் சோதி—

"இன்தமிழன் எங்கிருந்தும் இனத்தாலொன்றே!
இனிக்குமவன் மொழிக்கு நிகரிநிலையீங்கு
வன்பகைமை நமதுள்ளே வேண்டாமிந்த
வையகத்துள் முதன்மையுற வாழ்வோ"மென்று
அன்பொழுக அழகுதமிழ்க் கவிதைமூலம்"
ஐக்கியத்தை நிலைநாட்டி ஆண்மைதந்த
பண்புறுநற் பாரதி தாசன் எம்மை
பரதவிக்க விட்டகன்றாய் என்றுகாண்போம்?

"கன்னியெந்தன் தமிழன்னை காலத்தாலும்
கரையாத கட்டழகி கரும்பின்சாறு
முன்னையிலும் பின்னையிலும் முடிவேகாணா
முத்தமிழாள் முச்சங்க முததாள் ஞானக்
கன்னியவள் காலனுக்கு மஞ்சா"ளென்று
கவிமாலை புனைந்துதமிழ் காத்தவீர
மன்னவனே! மறத்தமிழர் மாண்புதந்த
மணிச்சுடரே! மறைந்தனையே எம்மைவிட்டு.

அலையலையாய் அழகுதமி ழமுதஊற்றை
அருங்கவிதை மதுவாக்கி அள்ளித்தந்து
புலமையிலே புதுமையெனும் புரட்சிசெய்து
புல்லர்களின் மமதையெலாம் பொசுக்கிவீசி
"நிலவுலகில் நிகரில்லாத் தமிழாளெந்தன்
நெஞ்சினுக்கே உரமான நிறைவா"ளென்று
கலகலத்துக் கவிமாரி சொரிந்துகாலன்
கைப்பட்டு மறைந்தனையே காண்பதெப்போ?

கற்பனைக்கே ஒவ்வாத கருத்தையெல்லாம்
கலங்காது கவிதையினாற் களைந்து வீசி
அற்புதமாய் அழகழகாய் அறிவுசொல்லி
அமைதிக்கும் அன்பினுக்கும் மார்க்கங்காட்டி
கர்ச்சிக்கும் கடல்மீது கலங்குகின்ற
கப்பலுக்குத் திசைகாட்டும் விளக்கம்போல
அற்புதமாய் அறப்பாதை காட்டிநின்ற
அழகுதமிழ் மலையேநீ! அகன்றதெங்கே?

———— : : : ————

# விழியெனும் தமிழே!

—வழுத்தூர்-ஒலியேந்தி—

விழியெனும் மொழியே! எங்கள்
வீடுறைத் தமிழே! உம்மை
இழிசனர் எம்மில் சில்லோர்
இழிபறிச் செய்தற் கண்டும்
மழிபட மழுப்பி வாழும்
மறுகலால் மறம்பி ணைக்கும்
பழிபடு வாழ்வு கண்டும்
பதுங்கினோம்; மௌனி யானோம்!


"கண்ணினைப் பிடுங்கி விற்று
களிப்புற வடிவம் வேண்டும்
புண்ணுறை வழியோ கொண்டீர்;
புலைமலி புளுதப் பேச்சின்
திண்ணைவாழ் திருகுத் தூள
'திரரின்' 'நிமில' நோக்கில்
*பண்டியை வளர்க்கும் போக்கே
பணிவிடைப் பண்ணும்; பாவும்!"

என்றுநீ வடித்துக் கொட்டும்
எ·கமாம் செந்நீர்ப் பட்டு
குன்றிய வன்மை யெல்லாம்
குழுறிட, குன்ற மாகி
நிறிண்ட, *நிகழ்ச்சி வெள்ளம்
நிரம்பிட நிகழ்கா லத்தும்
பொன்றுத லில்லை நீயே!
போதனு மொழியே ஆவாய்!

அமுதமே! தமிழே! எங்கள்
ஆவியில் கூவி நிற்கும்
குமுதஇஸ் லாத்தின் கொள்கைக்
கூடமே! கோடி கால
சுமுகனே! சுகந்தம் வீசும்
சுத்தனே! ஈழ மூஸ்லிம்
சமுகத்துச் சாந்தி தோழா!
போதனு மொழியும் நீயே!

*பண்டி-வயிறு
*நிகழ்ச்சி-ஒளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரா. வெ. அழகர்சாமி, பண்டாரவளை.

கே: நாட்டில், சிக்கல்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றனவே, தோன்றிய சிக்கல்கள் மறைய வழி என்ன?

ப: புதிய சிக்கல்களைத் தோற்றுவிப்பதுதான் அதற்கு வழி என்பது ஆட்சியாளரின் சித்தாந்தம். சிக்கலைச் சிக்கலால்தான் தீர்க்க முடியுமென்று அவர்கள் கூறுகின்றனர்.

ஃ

மாலதி, தெல்லிப்பளை.

கே: எனது சினேகிதி பிழையான வழிகளில் சென்றால் எப்படித் திருத்துவது?

ப: பல வழிகளுண்டு அதில் ஒருவழி நீங்கள் சரியான வழியிற் சென்று அவருக்கு ஆதர்சமாக விளங்குவதுதான்.

கே: ஏன் இப்போதைய பெண்மணிகள் வெங்காயச் சருகுச் சேலைகளை அணிகிறார்கள்?

ப: துணிச் சேலைக்குப் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால்.

கே: ஆண்கள் ஏன் பெண்களைக் கண்டதும் அவர்கள் பின்னாலேயே செல்கிறார்கள்?

ப: அவர்கள் ஆண்களுக்கு முன்னாலே செல்வதால்.

ஃ

சி. கனகரத்தினம், சித்தங்கேணி.

கே: எனக்கு ஐந்து சகோதரர்கள் இருக்கிறார்கள், அவர்கள் எல்லோரும் வீரர்கள் அவர்கள் உங்களுக்குத் தேவையா?

ப: மண்ணை கயிறாகத் திரிப்பவர்கள்தான் எனக்குத் தேவை. ஆனால் புதிய மந்திரிசபையில் பதவி வகிக்கத் "தங்க" மூளையுள்ள சில வீரர்கள் தேவையாம். உங்களின் வீரர்களுக்கு அந்த மூளையிருந்தால் மனுச் செய்து பாருங்கள்.

கே: என்னை ஒருத்தி காதலிக்கிறாள் நானும் அவளைக் காதலிக்கிறேன் இனி என்ன செய்யலாம்?

ப: அடுத்த நடவடிக்கை காதலை முறித்துக் கொள்வது. அதற்கடுத்தது சாதல்.

ஃ

எஸ். ஓ. காளிமுத்து, வறக்காப்பொலை.

கே: இன்றைய அரசியல் உலகில் கதாநாயகராக யாரை ஒப்பிடலாம்? கதாநாயகியாக யாரை ஒப்பிடலாம் எனக் கூறுவீர்களா?

ப: என்னெம்—சிறிமா.

ஃ

ஆ.ச. நடராசா, காரைநகர்.

கே: கோடீசுவரன் வழக்கில், வெற்றியுற்றமை எதனைக் குறிக்கின்றது?

ப: தமிழ் அரசாங்க ஊழியர்களின் கோரிக்கை நியாயமானது மட்டுமின்றி, சட்ட சம்மதமானதும் கூட என்பதே.

கே: இடதுசாரிகள் சிறிமாவோ அரசாங்கத்துடன் ஒன்று சேர்வதில் தமிழ் மொழியைப் பொறுத்தமட்டில் ஏதாவது நன்மை தமிழுக்கும் கிடைக்குமா?

ப: எப்படி நம்புவது? மே தினக் கூட்டங்களில் இடதுசாரித் தலைவர்களோ அரசாங்கத் தலைவர்களோ சிறுபான்மையோரின் உரிமைகள் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லையே!

ஃ

ஆ. சுப்பையா, ராசாகொல்லை தோட்டம்.

கே: மாமி மருமகனைக் கண்டவுடன் வெட்கப்படுவது ஏன்?

ப: தாய் யார், மகள் யார் என்பதைக் கண்டு பிடிப்பதில் சில மருமகன்களுக்கு தடுமாற்றம் ஏற்படுவதுதான் காரணம்.

கே: உங்களுடைய வாய் எப்போதும் பத்திரிகையில் சிரிப்போடு இருப்பதற்குக் காரணம் என்ன?

ப: அழ முடியாததுதான் காரணம்.

ஃ

மு. கருணாநிதி, ஏழாலை மேற்கு.

கே: திரு தொண்டமான் தற்பொழுது என்ன செய்துகொண்டு இருக்கிறார்?

ப: 21 கோரிக்கைகளை அரசாங்கத்துக்குச் சமர்ப்பிப்பதில் அவருக்கும் அஸீஸுக்கும் லடாயாம்.

கே: அம்மாவின் அரசாங்கம் இன்னும் எவ்வளவு காலத்திற்கு ஆட்சி புரியும்?

ப: 15 ஆண்டுகள் என்கிறார் நிதி மந்திரி. தேர்தல் வராவிட்டால் நிதி மந்திரி கூற்று சரியாக இருக்கும்.

கே: என். எம். பெரேரா தற்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

ப: கூட்டி கழித்து, பிரித்து, பெருக்கிக் கொண்டிருக்கிறார் புதிய மந்திரி சபையில் மந்திரிகளின் எண்ணிக்கையைக் கண்டுபிடிக்க. இன்னும் விடை கிடைக்கவில்லையாம்.

ஃ

க. சின்னையா, அக்கரைப்[illegible].

கே: "படித்த முட்டாள்" எப்படிப்பட்டவன்?

ப: பட்டதாரியான நாத்தூராம் கொட்லேயைப் போன்றவன்.

ஃ

நஸீரா, கம்பளை.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளும் என்னைக் காதலிக்கிறாள். ஆனால்! அவள் என்னை உண்மையாகக் காதலிக்கிறாளா என்பதை எப்படி அறிவது?

ப: உள்ளத்தைக் குடைந்து உண்மையைக் கண்டு பிடிக்க அமெரிக்காவில் ஒரு இயந்திரம் செய்கிறார்களாம். அது இங்கு வரும் வரை சற்று காத்திருங்கள் அவள் காதல் உண்மையா, போலியா என்பதைக் கண்டு பிடிக்க.

ஃ

எம். சிவமணி, உன்னஸ்கிரிய.

கே: தாய்க்கும் காதலிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அன்புக்கும் காதலுக்குமுள்ள வித்தியாசம்.

ஃ

எஸ். எஸ். நாதன், சங்கானை.

கே: 1964-ல் ஜனப்பெருக்கம் குறைந்துவிட்டதாமே?

ப: உற்பத்தியைப் (உணவு உற்பத்தியை அல்ல) பெருக்குவதில் நாம் முன்னணியிலிருப்பதால் ஜனத் தொகை எப்படிக் குறைய முடியும்?

ஃ

அருளழகன், ஏழாலை மேற்கு.

கே: "சிங்களச் சட்டம் முரணானது" என்று தமிழரசுக் கட்சி ஏன் இன்னும் வழக்குத் தாக்கல் செய்யவில்லை?

ப: நீதிமன்றத்தில் வாதடியே உரிமைகளையெல்லாம் பெற்றுவிடலாம் என்று எண்ணுகிறீர் போலும்.

ஃ

க. சுப்பிரமணியம், காத்தான்குடி.

கே: குயுக்தியாரே! ஆசிரியர்கள் மது அருந்தும்போது, ஒளித்துக்கொண்டு அருந்துவதற்கு காரணம்?......

ப: மாணவர்களுக்கும் கொடுக்கவேண்டுமே என்ற பயந்தான்.

கே: உங்களிடம் கேட்கும் கேள்விகளைச் சிலர் என்னிடம் கேட்கிறார்கள் இதற்கு நான் என்ன செய்யவேண்டும்?

ப: உங்களின் கேள்விகளைப் பார்த்தாலே தெரிகிறது. ஆள் மாறாட்டம் செய்தவையென்று.

ஃ

எம். ராமமூர்த்தி, மாத்தளை.

கே: அம்மையார் அமெரிக்காவில் பிறந்திருந்தால் என்ன செய்திருப்பார்?

ப: அமெரிக்காவின் அரசாங்க மொழி தனிச் சிங்களமே என்று பிரகடனம் செய்திருப்பார்.

ஃ

சுதந்திரவீரன், ஏழாலை மேற்கு.

கே: நிதிமந்திரி இலங்கரத்தின தற்பொழுது என்ன செய்துகொண்டு இருக்கிறார்?

ப: தரகு வேலை இன்னும் பயனளிக்கவில்லையே என்று கவலைப்படுகிறாராம். அடுத்த பட்ஜட் வேறு தலையிடியைக் கொடுத்துள்ளதாம்.

**திருவாளர் குயுக்தியார்**

மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

# திளைப்பு

—மு. சடாட்சரன்—

"முன்னவ ராக்கிய முத்தமிழ்
  உண்டு முழுமையுற,
இன்புறு நெஞ்சத் திளமைக்
  கனவோ டெழில்தவழ,
என்று—மினித்திடு மேற்றம்
  விளைத்திடச் செந்தமிழைக்
கண்டுல கந்தொழும்!
  காசில்லை யாப்பினைக் கற்றிடுவீர்!"

என்றோர் விளம்பரங் கண்டேன்
  தினசரி முன்னிதழில்.
நன்றவன் தொண்டு நடத்துக
  என்றடி நோக்குகையில்;
குன்றி மணியுளங் காட்டும்
  முகவரி வேற்றுமொழி.
அன்னையிற் பற்றிலா அற்பனே
  நீயிரை ஆழ்கடற்கே!

நாலைந்து மாதமாய் வந்ததவ்
  விண்ணப்பம் நானறிவேன்.
ஏலுமட் டும்அவன்;
  பட்டினம், மாகாணம், ஏற்றதெரு;
பாலில் மிளகெனப்
  பாரறி மன்னர், பணிமனையும்
வேலை வினைக்கெட்டு நீட்டினான்
  யாரிங்கு வினாருண்டே?

இன்றதுங் கண்டு எரிந்தேன்,
  அடடோ............இனியதமிழ்!
உண்மை ஒளியுன்றன் உள்ளத்துள்
  வந்து உதித்ததுவோ?
சிந்தை பெருத்ததோ?
  சேவைசெய் வாயினிச் சீர்வளரும்!
புண்ணறு கண்ணனே
  நீடுவாழ் உச்சியில்! போற்றினனே!

"மாணவர் ஆயிரம்
  கற்றிடவந்தனர் மாநிலத்தீர்!
கோணாது நில்லுங்கள்.
  கூப்பிடு வோம்மறு கூட்டவையுள்!"
போன திரண்டுநாள்.
  பொன்னிலிவ் வாசகம்
              போட்டிருந்தார்!
தேனமு தத்தமிழ்
  அன்பர்கண் டுள்ளந் திளைக்கிறேனே!





மொண்ட் பிளாங்க்
இலங்கையின் பிரீதிகரமான
கட்டிப் பால்




அப்துல்ஹுசெய்ன் ஜவேர்ஜீ
192 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு
STR.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபைத் தலைவர் பதவி பீலிக்ஸுக்கு கிடைக்கும்?

## இரகசிய ஏற்பாடு

திரு. சி. பி. டி சில்வாவும், திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் மந்திரி சபையிலிருந்து வெளியேற்றப்பட்டால், தற்போதைய ஏற்பாட்டின்படி பாராளுமன்றத்தில் சபைத் தலைவர் பதவி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கே கிடைக்குமென்றும் அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே அந்தரங்கமாகச் செய்யப்பட்டுள்ளன என்றும், அப்படி நடைபெற்றால் இலங்கையில் முதன் முதலாக ஒரு பௌத்தரல்லாதவர் பிரதமராக வந்துவிடக்கூடுமென்றும் 'லங்காதீப்ப' பத்திரிகை எழுதியுள்ள ஓர் அரசியல் விமர்சனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'லங்காதீப்ப'வில் 2-5-64ல் 'சந்திரகுப்த' எழுதியுள்ள அரசியற் குறிப்பில், மக்களின் எதிர்ப்பையும் சட்டை செய்யாமல், புதிய கூட்டு மந்திரி சபை நிறுவப்பெற்றால், அது முதல்தர பணக்காரர்களைக் கொண்ட மந்திரி சபையாக இருக்கும் என்று கூறுகிறார்.

'டாக்டர் என்.எம். பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா, லெஸ்லி குணவர்த்தன, அனில் முனசிங்கா, திருமதி விவியன் குணவர்த்தன ஆகியோர் பற்றி யார் என்ன சொன்னபோதிலும், அவர்கள் பணக்காரர்களென்பதை இந்நாட்டு மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்தக் கோஷ்டி மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொள்ள முன்பு, தங்களின் சொத்து விபரங்களை (கம்பெனிகளிலுள்ள பங்குகள் உட்பட) பொது மக்களுக்குத் தெரிவித்தால் அது ஏனைய அரசியல்வாதிகளுக்கும் ஆதர்சமாக விளங்கும்' என்றும் சந்திரகுப்த குறிப்பிடுகிறார்.

### பிக்குகளிடம் ஆலோசனை பெறவில்லை

சந்திரகுப்த தொடர்ந்து எழுதுவதாவது:

'இடதுசாரிகளுடன் கூட்டாட்சி நிறுவ பிரதமருக்கு ஆலோசனை கூறிய தலைவர் யார்? இந்த முடிவைச் செய்ய முன்பு பிரதமர் பிக்குகளைக் கலந்துகொண்டாரா? இல்லை—நாட்டையும், மொழியையும், இனத்தையும், மதத்தையும் காட்டிக்கொடுக்கும்போது பிக்குகள் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

திரு. சி. பி. டி சில்வாவையும், திரு. மைத்திரிபால சேனநாயக்காவையும் மந்திரி பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று மார்க்ஸீயவாதிகள் கூறுவதில் ஒரு மர்மம் உண்டு.

என். எம். பெரேராவுக்கு அல்லது பிலிப் குணவர்த்தனவுக்குச் சபைத் தலைவர் பதவியைப் பெற்றுக்கொள்வதுதான் அந்த மர்மம்.

அது நிறைவேறிவிட்டால், பிரதமரை நீக்கி, பிரதமர் பதவியைப் பிடுங்கிக் கொள்வது 'லட்டு' சாப்பிடுவதைப் போல இலகுவாகும்.

சி பி டி சில்வா, மைத்திரிபால போய்விட்டால் சபைத் தலைவர் பதவி கிடைக்க வேண்டியவர் டி. பி. இலங்கரத்தினதான் என்று சிலர் கூறுகின்றனர். இது தவறு.

தற்போதைய ஏற்பாட்டின்படி சபாநாயகர் பதவி கிடைப்பது திரு. பீலிக்ஷ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கேயன்றி, திரு. இலங்கரத்தினவுக்கன்று.

அதற்கான அந்தரங்க ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டன. அப்படி நடைபெற்றால் இந்த நாட்டின் பிரதமர் பதவிக்கு வரும் முதலாவது பௌத்தரல்லாதவர் திரு. பீலிக்ஸ் தான்.

### சொல்லாமல் சொல்லுவார்

9-5-64ந்திகதி கூடும் சுதந்திரக் கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் பிரதமர் இதுவரை இடதுசாரிகளுடன் தான் நடத்திய பேச்சுவார்த்தைகளை விளக்கிக் கூறி, தான் இடதுசாரிகளுடன் கூட்டரசாங்கம் நிறுவ முடிவு செய்திருப்பதால், அதனை விரும்பாத மந்திரிகளும், எம். பி களும் கட்சியிலிருந்து விலகிவிடலாமென்று கூறக்கூடும்.

திரு. சி. பி. டி சில்வாவையும் திரு. மைத்திரிபாலாவையும், 'போ' என்றுசொல்லாமல் சொல்லி அனுப்பும் நடவடிக்கையை எடுத்த பின்னர், மந்திரிசபையில் ஆறு ஸ்தானங்கள் இடதுசாரித் தலைவர்களுக்கு வழங்கப்படலாமென்று அரசியற் பார்வையாளர்கள்கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## சிங்கள இதழ்களில்...

# மொழி வழக்குத் தீர்ப்பு: சிங்கள ஊழியர் அதிர்ச்சி

சட்டத்திலுள்ள குறைபாடுகளால் குற்றுயிராகிவிட்ட சிங்களம்மட்டும் சட்டத்தை உடனடியாகத் தேவையான சட்டத் திருத்தங்களைச் செய்து அமுல் நடத்தவேண்டும் என்று 'தவஸ' பத்திரிகையில் 4-5-64ந் திகதி வெளியான ஒருகட்டுரையில் அரசாங்கம் வற்புறுத்தப்பட்டுள்ளது.

இக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

'சிங்களத்தை அரசாங்க மொழியாக அமுல் நடத்துவதை ஆண்டாண்டுகளாக ஒத்திப்போட்டுவந்து கடைசியாக அமுல்நடத்தத் தயாராகும்போதே கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அளித்த ஒரு தீர்ப்பின் விளைவாக அது வெடிப்பு கண்டுள்ளது.

கோடீசுவரன் வழக்குத் தீர்ப்பால் அரசாங்க ஊழியர்களிடையேயும், அரசியல் வட்டாரங்களிலும் குழப்பமான நிலைமை நிலவுகிறது.

மிக முக்கியமான மொழிச்சட்டத்தை இவ்வாறு வலுவற்ற நிலையில் வைத்திருந்ததற்கு யார் பொறுப்பு? இந்த நிலைமையால் அரசாங்க இலாகாகளில் சிங்களமொழியில் ஆர்வம் கொண்டவர்கள் தங்களின் தன்மானத்தைக் காத்துக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. சிங்கள சங்கங்கள் நிறுவி, சிங்கள அமுலுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துவந்த அதிகாரிகள் அதிர்ச்சியடைந்துவியப்பிலாழ்ந்துள்ளனர். இன்று அவர்கள் பைபலாவதைத் தவிர வேறு வழியில்லை.

அரசாங்கம்சிங்களத்தைத் திட்டவட்டமாக அமுல் நடத்தாதிருப்பது வேதனைக்குரியது.

சிங்களத்தின் மீது அனுதாபமற்ற சில தொழிற் சங்கங்கள் அரசாங்க மொழிக் கொள்கையைக் கொண்டு அரசாங்க ஊழியர்களுக்கு இடைஞ்சல் செய்ய வேண்டாமென்றும் சம்பள உயர்வை நிறுத்தக் கூடாதென்றும் அரசாங்கத்தை வற்புறுத்தியுள்ளன'.

### புதிதாகத் தோன்றும் கிராமங்கள்

கல் ஓயா பள்ளத்தாக்கைச் சுற்றியுள்ள காடுகளில் புதிது புதிதாகத் தோன்றும் கிராமங்கள் பற்றி கல் ஓயா 'நாம் சிங்களவர்' இயக்கம் பிரதமமந்திரிக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளது என்று 3-5-64 ந் திகதி 'ரிவிதின' ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்தக் கிராமம் ஒவ்வொன்றும் கத்தோலிக்கத் தேவாலயத்துக்குத் தெரிந்தே நிறுவப்படுகிறதென்றும், அக் கிராமங்களில் கள்ளக் குடியேற்றக்காரர்களும் வசிக்கின்றனரென்றும், இக் கிராமங்களை நிறுவும் பாதிரிமார்களுக்குக் கத்தோலிக்கர்களான உயர்தர அரசாங்க அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கிறதென்றும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழரசார் வெற்றி

அண்மையில் நடைபெற்ற கொக்குவில் கிராம சபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் பெரும்பாலான வட்டாரங்களில்வெற்றியீட்டியுள்ளார்கள்.

தமிழரசு வாலிப முன்னணியின் பொதுச்செயலாளராகப் பத்து ஆண்டுகள் பதவி வகித்த தமிழன், பாசறை ந. அருணாசலம்முதலாம் வட்டாரத்தில் வெற்றி பெற்றுள்ளார். தமிழரசுக் கட்சி கொக்குவில்—கோண்டாவில் கிளைச் செயலாளர் திரு. சி. பொ. வேலாயுதபிள்ளை ஆறும் வட்டாரத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

—

### பாரதிதாசன் மறைவுக்கு செயலாளர் அனுதாபம்

பாரதிதாசன் இழப்பையொட்டி, அப்புத்தளை வள்ளுவர் மன்றச் செயலாளர் செல்வி நயீமா-ஏ. பசீர், பாரதிதாசன் குடும்பத்தினருக்கு ஓர் அனுதாபச் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.

## சந்தியில்

அண்மையில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளை வந்து பார்க்குமாறு மருமக்கள் அம்மானை அழைத்துக்கொண்டு போனார்கள். அந்தக் காலத்தில் நடக்கிற விளையாட்டுகளுக்கும் இந்தக்காலத்தில் நடக்கிற விளையாட்டுகளுக்கும் பெரிய வித்தியாசம்!

மாட்டுவண்டிச் சவாரி நடந்தது. 'நீதிபதிகளின் தீர்ப்பே முடிவானது' என்று அழுத்தந் திருத்தமாகப் பறை அறைந்திருந்தார்கள். எல்லா விளையாட்டுகளிலும் நீதிபதிகள் நல்லவகையில் தீர்ப்பளித்தார்கள் தான். ஆனால் மாட்டுவண்டிச் சவாரியில் வழங்கப்பட்ட தீர்ப்பு சரிதானா என்பதைத்தான் அம்மானால் மட்டுமல்ல அங்கு வந்திருந்த ஆயிரக்கணக்கானவர்களாலும்தெளிவுபடுத்திக்கொள்ள முடியாது போய்விட்டது.

முதலாவது வந்த வண்டிக்குத்தான் முதலாவது பரிசு கொடுக்கவேண்டும். ஆனால் 'நீதிபதிகளின்தீர்ப்புப்படி' இரண்டாவது வந்த வண்டிக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. அங்கே திரண்டிருந்த ஆயிரக்கணக்கான பார்வையாளர்களின் கண்கள் குருடாகிவிட்டன என்ற நினைப்போ என்னவோ!

மாட்டுவண்டிச் சவாரிக்கு முதல் பரிசு நீர் இறைக்கும் இயந்திரம் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் கொடுக்கப்பட்ட பரிசு என்ன தெரியுமா? ஒரு அரிக்கேன் விளக்கும் ஒரு போத்தல் சாராயமும். ஏன் இந்த மோசடி? இத்தகைய மோசடிக்குக் காரணம் என்ன? பொறுப்பாளிகள் யார்?

ஃ ஃ ஃ

பிழைக்கும் வழிகள் பல உள. அதில் ஒரு வழி இல்லாதது பொல்லாதது களையெல்லாம் இழித்துப் பழித்து எழுதுவது. சிலரிடம் 'எழுதப் போகிறேன் உன்னைப்பற்றி' என்று, எச்சரிக்கை செய்துவிட்டு 'ஏதாவது' இரந்து கேட்டு வாங்கி வயிறு வளர்ப்பது. இத்தகைய கீழ்த் தொழிலில் கைகண்ட பேர்வழிக்கு இப்பொழுது சிண்டு முடியும் வேலை கிடைத்திருக்கிறது.

மூதூர் தொகுதியை தன்னுடைய பகடைக்காய் விளையாட்டுக்கு உபயோகப்படுத்த ஆரம்பித்துள்ளார் அவர். தமிழரசுக் கட்சிக்காரர் எவருமே சிந்திக்காத ஒரு விடயத்தை இந்த மகானுபாவர் கண்டுபிடித்து அலச ஆரம்பித்திருக்கிறார்.

இதெல்லாம் எதற்காகத் தெரியுமா?—எல்லாம் பிழைக்கும் வழிதான்.

அம்மான்

### 'சுதந்திரன்' விற்பனையாளர்கள்

**பண்டத்தரிப்பு**
கி. சுந்தரம்பிள்ளை,
பத்திரிகை விற்பனையாளர்,
பண்டத்தரிப்பு.

**சித்தன்கேணி**
எஸ். திருச்சிற்றம்பலம்,
பத்திரிகை விற்பனையாளர்,
சித்தன்கேணி.

**சங்கானை**
எஸ். கணபதிப்பிள்ளை,
பிரதான வீதி,
சங்கானை.

**மானிப்பாய்**
செ. துரைசிங்கம்,
பத்திரிகை விற்பனையாளர்,
மானிப்பாய்.

**உரும்பராய்**
நீ. மு. தம்பிதுரை,
காளிகோவிலடி,
உரும்பராய்.

**இணுவில்**
ந. சுந்தரலிங்கம்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK 174 SEA STREET, COLOMBO-11

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
**ஆனந்தா வைத்தியசாலை,**
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிவழி பிரிந்தோம், தனிவழி கண்டோம்

## சங்கத்தை அழிக்க முனைந்தன தேசிய தொழிற் சங்கங்கள்

### கட்டிக் காத்தனர் நமது வாலிபர்

மொழி வழக்கின் வரலாறு பற்றி எழுத முற்பட்ட அ. எ. வி. ச. தலைவர் திரு. செ. கோடீசுவரன், மொழிவழித் தொழிற் சங்கம் தோற்ற வேண்டிய சூழ் நிலை உருவாகியது பற்றிக் கடந்த வாரம் விபரித்திருந்தார். மொழிவழித் தொழிற் சங்கம் தோன்றியதற்குக் காரண கர்த்தாவான, மொழிவழித் தொழிற் சங்கங்களின் தந்தை என்று அழைக்கப்படும் திரு. க. சிவானந்த சுந்தரம் பற்றியும் சங்கத்தின் வளர்ச்சியில் துணை நின்ற சிலரைப் பற்றியும் இக் கட்டுரையில் விபரிக்கிறார்.

எழுது வினைஞர் சங்கம் என்ற ஒரு புதிய தொழிற் சங்கம் தோன்றி இந்த நாட்டின் வரலாற்றிலேயே ஒரு முக்கிய இடத்தைப் பெற்று விட்ட தென்றால் அதற்குமுழுமூலகர்த்தா இன்று தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளராகவிருக்கும் திரு. சிவானந்த சுந்தரம்தான்.

திரு. சிவானந்தசுந்தரம் 1947ல் நடைபெற்ற வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து தொழிற் சங்கத் துறையிலே அதிக அக்கறை காட்டி நாங்கள் முன்பு அங்கம் வகித்த அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்திலே விரைவாக முன்னுக்கு வந்தவர். தர்க்க ரீதியாக ஆராய்வதிலும் தான் சரியானது எனக் கண்ட எந்தக் கருத்தையும் எத்தகைய எதிர்ப்புக்கும் அஞ்சாது எடுத்துச்சொல்பவருமாவர்.

#### கொம்யூனிஸ்டுகளுக்கு ஒரு பாடம்

அரசாங்க லிகிதர்சேவைச் சங்கத்திலே ஈடுபாடு



திரு. தர்மலிங்கம்

கொண்டவர்கள் அனைவருக்கும் திரு. சிவானந்தசுந்தரத்தைத் தெரிந்திருக்கும். நெடிதுயர்ந்து நின்றிருக்கும் திரு. சிவானந்தசுந்தரத்தின் உருவம் லிகிதர் சேவைச் சங்கத்திலே எழுந்து நின்று வாதிடும் திறமை எவரையும் கவரும். திரு. சிவானந்தசுந்தரம் திறமை, ஆற்றல் இவற்றின் துணைகொண்டு லிகிதர் சேவைச் சங்கத்தின் துணைத் தலைவராகப் பதவி வகித்தவர்.

1958ம் ஆண்டு வரை அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் துணைத் தலைவராக திரு. சிவானந்தசுந்தரம் பதவி வகித்த வேளை அச்சங்கத்தின் தலைமைப் பீடம் பெருமளவு கம்யூனிட்ஸ் கட்சியின் சார்புடையவர்களாலேயே நிரப்பப்பட்டிருந்தது.

கம்யூனிட்ஸ் கட்சி மொழிக் கொள்கையில் அடித்த குத்துக் கரணம் காரணமாக திரு. சிவானந்தசுந்தரத்துக்கும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் இதர தலைவர்களுக்குமிடையே இருந்த கருத்து வேற்றுமை வெளிக்காட்டிற்று.

1958ம் ஆண்டு நடைபெற்ற வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து அப்பொழுது லிகிதர் சேவைச் சங்கத்தின் தலைமைப் பீடத்தை அலங்கரித்த கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர்களுக்



திரு. க. சிவானந்தசுந்தரம்

கெதிராக உறுப்பினரின் ஆவேசம் வளர்ந்தது. அதே வேளை கம்யூனிஸ்ட் கட்சியின் மொழிக் கொள்கை மாற்றத்தால், லிகிதர் சேவைச் சங்கத்தின் கம்யூனிஸ்ட் தலைவர்களைத் தோற்கடித்து அதன் மூலம் கம்யூ

**செ. கோடீசுவரன்**
**அ. எ. வி. ச. தலைவர்**

னிஸ்ட் கட்சிக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென்ற எண்ணம் தமிழ் உறுப்பினர்களிடையே வளர்ந்தது. இந்த எண்ணத்தை உருவாக்கி நடைமுறையில் செய்து காட்டியவர் திரு. சிவானந்தசுந்தரம்..

#### எழுது வினைஞர் சங்க உதயம்

திரு. சிவானந்தசுந்தரத்தின் துணிவும், உரிமைக்காக வாதிடும் திறனும் அவர் லிகிதர் சேவைச் சங்கத்திலிருக்கும் பொழுதே அச் சங்கத்தின் தமிழ் பேசும் உறுப்பினரிடையே அவருக்கு நல்ல மதிப்பையும் அன்பையும் தேடித் தந்தன.

லிகிதர் சேவைச் சங்கத்தின் கழுத்தறுப்பினால் மனங் கசந்து வெளியேறிய தமிழ் ஊழியர்களுக்கு திரு. சிவானந்தசுந்தரம் நல்ல வழி காட்டியாக விளங்கினார். தமிழ் ஊழியர் தமக்கென தொழிற் சங்கத்தை அமைக்கவேண்டுமென்ற கருத்தை திரு. சிவானந்த சுந்தரம் வெளியிட்டார். இப்பிரச்சினையில் வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று இறுதியில் 1961ம் ஆண்டு மேமாதம் 29ந்திகதி அரசாங்க எழுது வினைஞர் சங்கம் உதயமாயிற்று. சுமார் 30 உறுப்பினர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட எழுது வினைஞர் சங்கம் இன்றைக்கு ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேர் ஊன்றி, தமிழ் பேசும் அரசாங்க ஊழியரின் ஏகப் பிரதிநிதியாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது.

#### நமது செயலாளர்

எழுது வினைஞர் சங்கத்தின் முதலாவது ஆண்டு மிகக் கஷ்டமான ஒரு காலமாக அமைந்திருந்தது. அரசாங்கச் சுற்றறிக்கைகள் அடிக்கடி வெளிவந்து தமிழ் ஊழியர்களைப் பயமுறுத்திக்

கொண்டிருந்தன. 'தேசியத் தொழிற் சங்கங்கள்' என்ற பெயர் தாங்கி தமிழ் உறுப்பினர்களின் உரிமைகளுக்கு வேட்டு வைத்துவரும் இடதுசாரித் தொழிற் சங்கங்கள் அனைத்தும் எழுது வினைஞர் சங்கத்தை நசுக்கிவிட முயன்றன.

குறிப்பாக அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் எப்படியெல்லாமோ எழுது வினைஞர் சங்கத்தை அழிக்க முயன்றது. ஆயினும் திரு. சிவானத்தசுந்தரத்தின் தலைமையில் இயங்கிய எழுதுவினைஞர் சங்கத்தின் வாலிபர்கள் இயன்றவரை பாடுபட்டு சங்கத்தைக் கட்டி எழுப்பி வந்தார்கள். இவர்களில் சங்கச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியத்தின் பணி குறிப்பிடத்தக்கது.

பல உறுப்பினர்களின் விடா முயற்சியாலே சங்கத்தின் வளர்ச்சி முன்னேறி வந்ததைப் போலவே சங்கத்தின் செயலாற்றலும் உரி



திரு இ. பாலசுப்பிரமணியம்

மைக்கு உழைக்கும் உத்வேகமும் வளர்ந்து கொண்டே வந்தன.

#### 'எழுச்சி'

சங்கம் தோன்றிய முதலாண்டிலேயே "எழுச்சி" என்ற சங்கத் திங்கள் வெளியீட்டை எழுதுவினைஞர் சங்கம் வெளியிடத் தொடங்கியது. 1962-ம் ஆண்டு தைத் திங்களில் இவ்வேடு முதன் முறையாக வெளியிடப்பட்டது என் நல்ல நண்பர் தங்கவேலு பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றினர்.

"எழுச்சி" உண்மையில் எழுச்சி நடைபோட்டது. நல்ல தூய தமிழில் சங்கத்தின் கருத்துக்களை ஆணித்தரமாக வெளியிட்டு வந்தது "எழுச்சி".

இதே நேரத்தில் எழுது வினைஞர் சங்கம் தமிழ் பேசும் ஊழியர் கோரிக்கைகளை அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லி வந்தது. ஆயினும் அரசாங்கம் சங்கத்தின் கோரிக்கைகளுக்குச் செவிமடுக்க மறுத்துவந்தது. இந்த நிலையிலே அரசாங்கத்துக்கு வெறுமனே விண்ணப்பங்கள் செய்து கொண்டிருந்தால் எதுவித பலனுமில்லை என்பதை உணர்ந்த எழுதுவினைஞர் சங்கம் அரசாங்கத்தின் [illegible] களுக்கெதிராகவும் இச் சுற்று நிருபங்களுக்குக் காரணமான சிங்கள மொழிச்

இலங்கை

## வசு தொழிலாளர் கழகம்

### புதிய மொழிவழித் தொழிற் சங்கம்

இ. போ. ச. தமிழ் பேசும் தொழிலாளர்களின் புதிய மொழி வழித் தொழிற் சங்கம் ஒன்று சென்ற 30-4-64 வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக் கூட்டத்தில் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன், வட்டுக் கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். கீழ்க் கண்டோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: டாக்டர் இ. மு. வி நாகநாதன், பா. உ. துணைத் தலைவர்கள்: திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், (பா உ.) நீ. ஞானப்பிரகாசம். பொதுச் செயலாளர்: திரு. நீ. அந்தோனிப்பிள்ளை, துணைச் செயலாளர் திரு சோ. பாலசிங்கம். பொருளாளர் திரு. சி. கதிரவேற்பிள்ளை. துணைப் பொருளாளர்: திரு. என். இராசையா. செயற் குழு: திருவாளர்கள் சு. கார்திகேசு, நா. ஆறுமுகம், செ. குமாரசாமி, த. தங்கவடிவேலு க. பொன்னுத்துரை, சி. தியாகராசா, ப. பீதாம்பரம், இ. முருகையா, மு. ச. கந்தையா, என். சின்னதுரை, செ. திருநாவுக்கரசு, க. நாகமணி, க. வயிரமுத்து, சி. கிறிஸ்தோபர்.

சட்டத்தையும் எதிர்த்து வழக்கு தாக்கல் செய்வது என்ற முடிவை எடுத்தது.

#### வழக்குத் தாக்கல்

திறைசேரி சுற்று நிருபம் (இல: 555) திறைசேரி சுற்று நிருபம் (இல:560) ஆகியவை செல்லுபடியாகா வென்றும் அவை இலங்கை அரசியல் திட்டத்தின் 29-ம் பிரிவுக்கு முரணுகவுள்ள தனிச் சிங்கள சட்டத்தினால் இயற்றப்பட்டவையாதலால் இச் சட்டம் செல்லுபடியாகாதெனவும் தீர்ப்பளிக்கக் கோரி இரண்டு வழக்குகள் சங்கத்தின் பெயரில் தாக்கல் செய்யப்பட்டன.

#### தமிழரசுத் தந்தையின் பணி

சங்கம் சட்டப் போர் நடத்துவதெனத் தீர்மானித்தபோது தந்தை செல்வநாயகமவர்களை நாடி ஆலோசனை கேட்டது. தந்தையவர்கள் வேண்டிய ஆலோசனைகளை அளித்து இவ்வழக்கை நடத்துவதற்கு திரு. மு. திருச்செல்வம் கியூ சி. அவர்கள் ஏற்ற வழக்குரைஞர் என்று கூறி அவரை எமது சார்பில் வாதிடுவதற்கு அமர்த்த வேண்டிய ஒழுங்குகளையும் செய்து தந்தார்.

தந்தைக்குச் சங்கம் என்றென்றும் நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. சங்கத்தின் முதலாவது ஆண்டுக் கூட்டத்திலே செயலாளர் பாலசுப்பிரமணியம் பலத்த கரகோஷத்துக்கிடையே சங்கம் சட்ட மூலம் நடவடிக்கை எடுக்க மேற்கொண்டுள்ள முயற்சியை வெளியிட்டார்.

#### மொழி வழி பிரிவோம்

தமிழ் ஊழியர் உரிமைப் போராட்டத்தின் ஒரு அங்கமாகச் சங்கம் சட்ட நடவடிக்கை எடுத்த அதே வேளையிலே தொழிற் சங்க வளர்ச்சியிலே சங்கம் அதிக கவனம் எடுத்து வந்தது. 1962ம் ஆண்டு மே தினச் செய்தியாக எழுதுவினைஞர் சங்கம் ஒரு புரட்சிகரமான தத்துவத்தைவெளியிட்டது. வர்க்கப் போராட்டம் பற்றியே போதிக்கப்பட்டுவந்த தமிழ் பேசும் தொழிலாளர்களுக்குச் சங்கம் மேதினச் செய்தியாக வெளியிட்ட கருத்து தமிழ் பேசும் தொழிலாளர் மொழி வழி பிரிய வேண்டுமென்பதுதான்.

சங்கம் வெளியிட்ட மேதினச் செய்தி (மொழிவழி) பிரிந்தால் வாழ்வோம்—இன்றேல் வீழ்வோம்!' என்ற இயற்கையோடு இயைந்த தத்துவம். இந்த மேதினச் செய்தி இடதுசாரித் தொழிற் சங்கங்களுக்கு ஒரு மரண அடியாக இருந்தது.

1962ம் ஆண்டு சங்கம் வெளியிட்ட செய்தி இன்று தமிழ் பேசும் தொழிலாளர் உள்ளமெல்லாம் ஒலித்து நிற்கிறது. எமது எழுதுவினைஞர் சங்கத்தின் தத்துவமும், தோற்றமும், பணியும் முதற் கவர்ந்தது-அஞ்சல் பகுதி எழுது வினைஞர்களைத்தான். மொழி வழித் தொழிற் சங்கங்களின் வரலாற்றிலே இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றுள்ளது அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம்தான். இரண்டு சங்கங்களும் தனித்தனியாக இயங்கினாலும் உள்ளத்தாலும்—

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்கான
(G. C. E. Ord. Lev.)

புதுமுறையாகவும், இலகுவில் விளங்கக் கூடிய நடையிலும்

★ எண் கணிதம் ★ சரித்திரம் ★ பூமிசாஸ்திரம்
★ தமிழ் பாஷை ★ குடியியல் ★ இஸ்லாம்
★ 101 தமிழ் கட்டுரைகள் ★ உடநலவியல்

என்பனவற்றிற்கான, பரீட்சைப் பத்திரப் பயிற்சிக் கோவைகள் வெளியாகி உள்ளன.

இலவச விபரங்களுக்கு எழுதவும்.

சர்வகலாசாலை போதனு கழகம்.

540, மருதானை வீதி, த. பெ. 1079. கொழும்பு.
தொலைபேசி: 91699

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்றைய பிரதிநிதிகள் உண்மைத் தியாகிகள்

## காட்டிக் கொடுத்தவர்கள் விரட்டப்பட்டு விட்டனர்

## இலங்கைத் தொழிலாளர் கழக மேதினக் கூட்டத்தில் மட்டு நகர் பிரதிநிதி முழக்கம்

மலையகமக்களை அன்று காட்டிக் கொடுத்த தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் அதனைச் சேர்ந்தவர்களும் இன்று மக்கள் மத்தியில் இருந்து விரட்டியடிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களில் யாரும் இன்று மக்கள் பிரதிநிதியாகவோ அல்லது அரசியல் பிரமுகர்களாகவோ இல்லை. இன்று தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கக் கூடியவர்கள் உண்மை உழைப்பாளிகள்—தமிழ் பேசும் மக்களின் வாழ்விலும் தாழ்விலும் இரண்டறக் கலக்கக் கூடியவர்களே. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய இவர்கள், தமிழ் பேசும் மக்கள் இந்நாட்டில் சகல உரிமைகளும் பெற்று ஏனையவர்களுடன் சரிநிகர் சமானமாக வாழவேண்டுமென்று ஆசை கொண்டு கருமமாற்றும் தியாகிகளாவர்.

இவ்வாறு மட்டுநகர் முதல் பிரதிநிதி திரு. செ. இராசதுரை அட்டன் டன்பார் மைதானத்தில் நடைபெற்ற இ. தொ. கழகத்தின் மேநாள் விழாவில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

### எம். பி.கள் தலைமையில் ஊர்வலம்

மலையகத்தில் கழகம் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியும்வளர்ந்து வருவதைப் பூரணமாகப் பிரதிபலிக்கும் வண்ணம் கழகத்தின் மே நாள் ஊர்வலமும்—பொதுக்கூட்டமும் அமைந்திருந்தது. அட்டன் பிறின்சஸ் தியேட்டர் சந்தியிலிருந்து காலை 10 மணிக்குப் புறப்பட்ட கழக ஊர்வலத்தில் கழக உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டார்கள். கால் மைல் நீளத்துக்கு ஊர்வலம் இருந்தது. கழகத் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன், திரு. செ. இராசதுரை பா. உ. மட்டக்களப்பு, திரு. க. துரைரத்தினம் பா.உ. பருத்தித்துறை, ரெ. ம. ராமய்யா துணைத் தலைவர் இ.தொ. க. ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கிச் சென்றனர்.

### மே தினக் கோஷங்கள்

இலங்கைத் தொழிலாளர் கழகம் வாழ்க!

இலங்கைத் தமிழரசுக் கட்சி வாழ்க!

மலையக வாலிபர்களே ஒன்று சேருங்கள்!

எமது கொடி மூவர்ணக் கொடி!

எமது போர் உரிமைப் போர்!

உயிரைக் கொடுத்தும் மொழியைக் காப்போம்! என்ற போர்க் கோஷங்கள் வானைப் பிளந்தது.

'குடியுரிமை, வாக்குரிமை எமது பிறப்புரிமை, ஆயிரம் ரூபா எங்களுக்கு வேண்டாம். தமிழ் மொழி, எங்கள் விழி.' போன்ற அட்டைகளைக் கழகத் தொண்டர்கள் நூற்றுக்கணக்கில் ஏந்திச் சென்றனர்.



திரு. செ. இராசதுரை.

கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய கழகத் தலைவர் டாக்டர் நாகநாதன் கூறியதாவது:

### காங்கிரஸுக்கு அக்கறையில்லை

'தொழிலாளர் தினமான மேநாளை உலகெங்குமுள்ள தொழிலாளர்களால் இன்று கொண்டாடப்படுகிறது. ஆனால் அடிப்படை உரிமைகளை இழந்து நிற்கும் மலையகத்துத் தொழிலாளர்களுக்கு இது கொட்டாட்ட நாள் அல்ல. மலையக மக்கள் வாக்குரிமை, பிரஜாஉரிமை, கல்வியுரிமை, வேலையுரிமை எல்லாவற்றையுமே இழந்துவிட்டார்கள். பிரஜாஉரிமை இல்லாவிட்டால் வேலை இருக்காது. பிள்ளைகளுக்குப் பள்ளியில் படிக்க இடமில்லை. எனவேதான் கழகம் இந்த அடிப்படை உரிமைகளுக்குப் போராட உங்களை அழைக்கிறது. தொண்டமான் காங்கிரசுக்கோ, அசீஸ் காங்கிரசுக்கோ இந்தப் பிரச்சினைகள் பற்றி அக்கறையில்லை. அவர்கள் இவற்றிற்குப் போராடவும் மாட்டார்கள்.

### மலையகப் பிரச்சினையில் தோன்றிய கட்சி

மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு. செ. இராசதுரை பேசியதாவது:

தமிழரசுக் கட்சி மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்கள் மத்தியில் ஏன் வர வேண்டும் என்ற கேள்வியை சுயநலத்தை முதலாவதாகக் கொண்டு தொழிற்சங்க வியாபாரம் நடாத்துபவர்கள் கேட்கிறார்கள்.

1948ம் ஆண்டு பிரஜாவுரிமைச் சட்டம் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்டபொழுது, அதற்குச் சில தமிழ்த் தலைவர்கள் ஆதரவு கொடுத்து மலைநாட்டுத் தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்த பொழுது அந்த அரசியல் துரோகத்தைத் தந்தை செல்வா மறைந்த கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் ஆகியோர் எதிர்

(13-ம் பக்கம் பார்க்க)

### அவர்களும் சேர்ந்தனர்

கடந்த 26-4-64 முதல் சாமிமலையைச் சேர்ந்த கவரவலைத் தோட்டத்தின் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் (250 தொழிலாளர்கள்) கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை பிடிக்காமல் அக் கட்சியின் தொழிற் சங்கத்தை விட்டு விலகி "இலங்கைத் தொழிலாளர் கழகத்தில்" சேர்ந்துள்ளனர்.

கூடிய விரைவில் மற்றக் கோஷ்டியினரும் இ.தொ. கவில் சேர்ந்து செயலாற்றுவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. இதற்கான பூர்வாங்க பேச்சு வார்த்தைகள் கவரவலைத் தோட்டத் தொழிலாளர்களின் முக்கியஸ்தர்களுக்கும் மஸ்கெலியா இலங்கைத் தொழிலாளர் கழக கிளை அலுவலகத்திற்குமிடையில் நடைபெற்றுவருவதாக அறியப்படுகிறது.

## சமூக சமவுடமை

### அரசு நிறுவ முன்வருக

அட்டனில் நடைபெற்ற இ.தொ.கழக மேதினக் கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது:

இந் நாட்டில் இனவெறி பிடித்த வகுப்புவாதக் கொள்கையை முதலாகக் கொண்டவர்கள் அரசபீடம் ஏறிவிட்டதாலும், அடுத்தடுத்து வந்த சிங்கள அரசாங்கங்கள் தமது பிற்போக்கு வகுப்புவாதச் சட்டங்கள் மூலமும் நடவடிக்கைகள் மூலமும் தமிழ்ப் பேசும் மக்களின் கலாச்சார பொருளாதார, அரசியல் அழிவை உண்டு பண்ணும் எண்ணத்தோடு நடந்து வருவதாலும், இந்த நோக்கத்தின் முதற்படியாக மலையகம் வாழ் தமிழ் பேசும் மக்களது அரசியல், மனித உரிமைகள் மறுக்கப்பட்டு பலியாக்கப்பட்டதாலும், தமிழ் பேசும் தொழிலாளர் மலைநாட்டில் வாழ்ந்தாலும் சரி, அரசாங்க, தனியார் துறையில் இருந்தாலும் சரி அவர்களுக்கெதிராகக் கொண்டுவரப்படும் அநீதியான, அக்கிரமமான சட்டங்களுக்கு எதிராக போராடவோ தமது தார்மீக ஆதரவையாகுதல் நல்கவோ ஏனைய இடது சாரி, பொதுத்துறைத் தொழிற்சங்கங்கள் முன் வராததாலும்,

மே நாளாகிய இன்று அட்டன் டன்பார் மைதானத்தில் கூடிய தமிழ் பேசும் தொழிலாளரினது மாபெரும் பொதுக் கூட்டம்,

இலங்கை வாழ் தமிழ் பேசும் தொழிலாளர் அனைவரும் மொழிவழி பிரிந்து தமிழ் பேசும் தொழிலாளர் அணி திரட்டி தமது மொழி பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாத்து இந்நாட்டில் ஓர் தனித்த தேசிய இனமாக வாழ்வதற்காக உரிமைப் போரை பரந்த அடிப்படையில் நடத்தி, சமூகசமவுடமை அரசொன்றை முழு நாட்டிலும் நிறுவ முன்வர வேண்டுமெனத் தீர்மானிக்கிறது.

## கல்வியறிவை வளர்க்க எடுக்கும் நடவடிக்கை

"ஈழநாட்டில் 65 சத வீத வருமானத்தைக் கொடுக்கும் மலையக மக்களுக்குக் கல்வி வசதியைத் தக்கவாறு பெற, முன் தோன்றிய சங்கங்கள் நடவடிக்கை எடுத்திருக்குமேயானால் மொழியுரிமை, வாக்குரிமை, குடியுரிமையற்று அரசியல் அனாதைக் கூட்டங்களாக, கள்ளத்தோணிகளெனப் பிறரால் நகைக்கப்படுபவர்களாக இன்று இருக்க மாட்டார்கள். பதிலாக சிங்கள அரசை தங்கள் காலடியில் விழச் செய்திருப்பார்கள்."




இவ்வாறு இ. தொ. கழக நிர்வாகச் செயலாளர் திரு. இ. நாகேந்திரம் 26-4-64ம் திகதி நடைபெற்ற சாமிமலை கொழும்புத் தோட்டம் இ. தொ. கழகத் தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

கூட்டத்துக்கு மஸ்கெலியா மாவட்டத் துணைப் பிரதிநிதி திரு. கே. பி. செல்லத்துரை தலைமை வகித்தார்.

திரு. நாகேந்திரம் தொடர்ந்து பேசியதாவது:-


"இ. தொ. கழகம் கல்வியில் பின் தங்கிக் கிடக்கும் மலையகச் சமுதாயத்தினருக்குப் பாகுபாடற்ற முறையில் கல்விச் சகாயத்தைக் கண்டிப்பாக தந்துதவ வேண்டுமென்று ஆட்சியாளர்களிடம் வற்புறுத்தி வருகிறது.

தோட்டத்துரைமார் சம்மேளனத்தைத் தோட்டப் பிள்ளைகளுக்கு 8ம் வகுப்புவரை கல்வி கற்க வசதி செய்து தரும்படி மேலும் எமது ஸ்தாபனம் வற்புறுத்தி வருகிறது"


அடுத்துப் பேசிய மஸ்கெலியா மாவட்டச் செயலாளர் திரு. தை. கருப்பையா பிள்ளை, மலையக மக்களை இந்நாட்டைவிட்டு வெளியேற்றி விடலாமென்ற சூழ்ச்சியின் எதிரொலிதான் 1000 ரூபாய் திட்டம் என்றும். இப்படிப்பட்ட ஆட்சியாளர்களின் சூழ்ச்சிக்கு மலையகம் இரையாகாமல் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அ. எ. வி. சங்க முன்னாள் தலைவர் திரு. தம்பிமுத்து, பேசுகையில் கோடீசுவர

(13-ம் பக்கம் பார்க்க)


இன்றைய அதிசயமான பைப் எஸ்-லொன்



உங்கள் வீட்டில், ஸ்டோரில், அல்லது தொழிற்சாலையில் தண்ணீர் வசதி அமைத்துக்கொள்ளும் உத்தேசம் உங்களுக்கு உண்டானால் எஸ்-லொன் பைப்புகள் மிகக் குறைந்த செலவில் மேலானபயன் தரவல்லவை என்பதை மறந்து விடாதீர்கள். இவை வளையக்கூடியவை, கனக்குறைவானவை, நேரத்தையும் கூலியையும் மிச்சப்படுத்தும் - இணைப்பதும் வெகு சுலபம்-நீங்களே செய்யலாம். எஸ்-லொன் உக்காது கறையானை அண்டவிடாது, அரிப்பு ஏற்படுத்தாது, கிருமி, கறள், அழுக்குப்படல் எதிர்ப்புடையது.
ஆகவே பணத்தை மிச்சம் பிடிக்க வேண்டுமானால், உங்கள் எஸ்-லொன் பைப் தேவைகளை எந்த பெரிய ஹார்ட்வெயர் ஸ்டோரிலிருந்தாகிலும் இன்றே வாங்குங்கள்.

நாகேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம், பேங்ஷால் வீதி, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாம்பன் சந்தியில் சாப்பாட்டுச் சண்டை

## உணவு கிடையாது
## வெறும் இலைதான் கிட்டியது

## குமரி முதல் சென்னை வரை-5

குறை நித்திரையோடு பொலிசாரின் தயவால் வெளியேற்றப்பட்ட எங்களை காப்பி ஹோட்டல் வரவேற்றது. இராமேஸ்வரம் புறப்படுகிறோம். பாம்பனில் வைத்து சினிமா நடிகர் விடை பெற்று விடுகிறார். உணவூட்டுவதாக அழைத்துச் சென்ற 'உத்தமர்' வெறும் இலையை மட்டும் போட்டுவிட்டு ஓடிவிடுகிறார். எங்கே சாப்பாடு ஏங்கித் தவிக்கிறோம்:

ரெயில்வே நிலையத் தங்குமறையில் படுத்திருந்த எல்லா ஆண்களையும் பாதி இராத்திரியில் தட்டி எழுப்பிய அந்தப் புதிய பொலீஸ்காரர், ஒரே ஓர் ஆணை மட்டும் வெளியேற்றாமல் விட்டு வைத்தாரல்லவா? அதனால் அந்தப் பொலீஸ்காரருக்கும் கண் பார்வை கம்மியோ என்றும் நாம் ஐயம் கொண்டோமல்லவா?

அவருக்குக் கண் பார்வையில் அப்படியொன்றும் கோளாறு இல்லை; கவனக் குறைவுதான் காரணம்!

மற்ற ஆண்களைப் போல் இடை நடுவிலே நித்திரைக் குழப்பம் ஏற்படாது தப்பித்துக் கொண்ட எங்கள் யாத்திரைக் குழுவைச் சேர்ந்த அவர், தாம் படுக்கும்போது செய்த ஒரு காரியத்தால், பொலீஸ் புலியின் கண்களிலிருந்து தப்பும் அதிர்ஷ்டத்தைப் பெற்றார்.

படுக்கும் போதே அவர் தலையிலிருந்து கால் வரை நீண்ட 'பெட்ஷீட்' டால் போர்த்துக்கொண்டு படுத்ததால், மற்றவர்களை எழுப்பிய பொலீஸ்காரர், இவர் பக்கம் போகாமலிருந்து விட்டார். 'பெண்' என்று முடிவுகட்டிவிட்ட அந்தப் பொலீஸ்காரரின் 'புத்திசாலித்தனத்தை' அடியோடு வாழ்த்திக்கொண்டோம்.

'விஷயம் இப்படி முடியும் என்று ஏற்கனவே தெரிந்திருந்தால், 'பெட்ஷீட்' என்ன, சேலையையே கட்டிக் கொண்டு "ஜாம் ஜாம்' என்று தூங்கியிருக்கலாமே!' என்று அங்கலாய்த்தான் 'நித்திரைதாச'னான கோபால்.

ரூமிலிருந்து குறை நித்திரையோடு வெளியேற்றப்பட்ட நாம், மேற்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் விழிக்கின்றோம். வெளியில் படுக்கலாம் என்றால் 'ஐஸ்' போன்ற வாடையும், 'மச மச' என்ற பனியும் நம்மைப் பயமுறுத்துகின்றன.

'கொட்டுக் கொட்டெ'ன்று விடிய விடிய விழிப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்ற முடிவுக்கு வரும் நம் மூளையில் ஒன்று தட்டுப்படுகின்றது.

'மொட்டு மொட்டெ'ன்று கண் விழிப்பதென்றால் இலேசா? பொழுது போக்க ஏதாவது செய்யவேண்டும். அந்த 'ஏதாவது' காப்பி ரூபத்தில் நம்மைக் கூவி அழைக்கின்றது.

சில்லறையை எடுத்துக் கொண்டு, எதிர்த்தாற் போல் சற்றுத் தொலைவிலிருக்கும் காப்பி ஹோட்டலுக்குள் நுழைகின்றோம்.

மணக்க மணக்க-கொதிக்கக் கொதிக்க ஒரு கப் காப்பியைக் குடித்து வைக்கின்றோம். 'பனாமா' சிகரெட் ஒன்றை 4 பைசா கொடுத்து (பாக்கட்டாக வாங்குவதானால் மூன்றரை பைசா முடியும். நம் நாட்டு திறிரோஸின் தரத்துக்கு இருக்கின்றது) வாங்கிப் பற்றவைத்துக் கொள்ளுகின்றோம்.

இந்தக் கட்டத்தில் இந்தப் 'பனாமா' சிகரெட்டால் அடிக்கடி நமக்கு ஏற்படும் சங்கடமொன்றையும் கூற வேண்டும்.

'பார்க்ளி', 'எலிபன்ற்', 'ஸ்டார்', 'வில்ஸ்', 'லண்டன் நெவிகட்', 'கூல்', 'எடின்பரோ', 'சிசர்' (சீசரல்ல!) என்று ஏராளமான சிகரெட்டுகள் தமிழ் நாட்டில் இரண்டு பைசாவிலிருந்தே பெறக்கூடியதாக இருந்தாலும், 'திறிரோஸ்' பழகிய எம் வாய்க்கு அவற்றாலெல்லாம் இன்பம் தர இயலவில்லை. ஏதோ கடதாசியைச் சுற்றிப் புகைப்பது போல் 'பச்சைத்தண்ணி' யாகவே இருந்தன.

இப்படி அவஸ்தைப்பட்ட நமக்கு—

கடைசியில் கைதந்து உதவியது 'பனாமா!' மிகச் சமீபத்தில் உற்பத்தியாக்க ஆரம்பித்த இந்தப் புதிய சிகரெட் 20 கொண்ட 'பக்கட்'டுகளாக 70 பைசாவுக்குத் தரப்படுகின்றன.

இந்த சிகரெட்டை வாங்குவதில் நமக்கு அடிக்கடி சங்கடம் ஏற்பட்ட சீராகவே இருந்தது.

ஒரோரு சமயம் கடையில் போய் நாம் 'இந்தாப்பா! 'பனாமா' ஒன்றுகொடு'என்று கேட்டால், கடைக்காரர் முன் பின் யோசிக்காமல் 'க்ஷவர பிளேட்டை'த் தூக்கி நம் முன் நீட்டுகிறார்! விஷயம் என்னடா என்றால், அந்தப் 'பிளேட்டின்' பெயரும் 'பனாமா' என்று இருக்கின்றது!

ஆரம்பக் கட்டத்தில் இந்தச் சிக்கலால் தாக்கப்பட்ட நாம், இப்பொழுதெல்லாம், 'சிகரெட்' வாங்கும்போது வெறுமனே மொட்டையாக 'பனாமா கொடு' என்று சொல்லாமல், 'பனாமா சிகரெட் கொடு' என்று சிகரெட்டையும் சேர்த்துக் கொள்ளுகின்றோம்.

என்ன சொன்னோம்? 'காப்பியைக் குடித்துச் சிகரெட்டை இழுக்க ஆரம்பித்தோம்' என்றோமா?

### இராமேஸ்வரம் நோக்கி

அதன் பின்னர் தூக்கக் கலக்கம் தெளிகின்றது. அந்தத் தெளிவில், நம்மை விட்டுப் பிரிந்த அந்த சுவீடன் நாட்டு மூதாட்டியின் நினைப்பு வருகின்றது. கூடவே, அவருக்கு நாம் கூறிக் கொண்டு வந்த நமது 'பிரயாணக் கதை'யின் நினைப்பும் வருகின்றது.

இடை நடுவே இப்படி அனுதரவாய் நிற்கும் நம்மைப்போல அந்தக் கதையும் குற்றுயிரும், குலையுயிருமாய் இராமேஸ்வரம் நோக்கி ரெயிலில் பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கும் சோகக் காட்சியும் தெரிகின்றது. போதாக்குறைக்கு, நம்மை அழைத்துச் செல்ல, தனுஷ்கோடிக்கே வந்துவிட்ட அந்தப் பிரபல சினிமா நடிகரின் வதங்கிய முகமும் காட்சி தருகின்றது. நிமிஷத்துக்கு நிமிஷம் அவர் விடுகின்ற பெருமூச்சும் நமக்கு என்னவோ செய்கிறது.

நவம்

நேரத்தைப் போக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நாம் விடிவதற்குள் அந்த இராமேஸ்வரம் வண்டியில் ஏறிச் சிறிது நேரம் பிரயாணம் செய்துவிட்டு வந்தால் நலமாக இருக்கும். மேற்கொண்டு இந்தத் திருச்சியில் நாம் பார்க்க வேண்டியனவற்றைப் பார்ப்பதற்கும் உற்சாகம் பிறக்கும்.

'கட கட' என்ற பேரிரைச்சலோடு இராமேஸ்வரம் நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் வண்டியில் இதோ நாம் தாவி ஏறி இடம்பிடித்துக்கொள்ளுகின்றோம்.

'பாம்பன்' ஸ்டேசனில் நமது வண்டி வந்து நிற்கின்றது. நாம் இறங்கிறோம்.

### நடிகருக்கு 'தாங்ஸ்'

'இனி அப்படி ஒன்றும் உங்களுக்குக் கஷ்டம் இல்லை. 9 மணி சுமாருக்கு வரும் வண்டியில் ஏறிக்கொண்டு, நேரே இராமேஸ்வரம் போய்ச் சேருங்கள்' என்று சொல்லிவிட்டு நம்மைவிட்டுப் பிரிந்துவிடுகின்றார் அந்தச் சினிமா நடிகர். பாவம்; அவருக்கு எத்தனை தொல்லையோ? எத்தனை 'ஷூட்டிங்'கோ? 'தாங்ஸ்' சொல்லி அவரை அனுப்பிவைக்கின்றோம்.

பாம்பன் ஸ்டேஷனில் எல்லாருமே நல்லவர்களாகத்தான் இருக்கின்றார்கள். நம் நிலை அறிந்து, நம் பசி அறிந்து நான்முந்தி நீ முந்தி என்று சண்டைபோட்டுக் கொண்டு நம்மைச் சாப்பிட அழைக்கின்றார்கள்!

அப்படி நம்மை அழைத்த ஒரு விடாக் கண்டரின் பின்னால் நாம் இழுபடுகின்றோம். குச்சுக் குச்சுக் கடைகளெல்லாம் வரிசையாக இருக்கும் 'டவுனுக்கு' நாம் வருகின்றோம். அங்கும் நம்மை விடுகின்றார்களா? ஒவ்வொரு கடைக்காரரும் 'இங்கு வாங்கோ! இங்குவாங்கோ!' என்று நம்மை இழுக்கின்றார்கள்.

ஏற்கனவே பசிப்பிணியால் களைப்படைந்த நாம், அவர் 'பிடுங்கலால்' மேலும் கஷ்டமுறுகின்றோம். நம்மை அழைத்துச்சென்றவர் இலேசுப்பட்ட ஆசாமி இல்லை. அத்தனை கடைக்காரர்களையும் 'விலத்தி'க்கொண்டு, 'சிலரோடு சண்டையே போட்டுக்கொண்டு சாப்பாடு தருவதாகக் கூறி எம்மை அழைத்துச்செல்கின்றார். 'ஆகா! உபசரிப்பென்றால் இதுவல்லவோ உபசரிப்பு!' என்று வியந்துகொண்டு, அந்தநபர் காட்டிய ஒரு சிறு கடைக்குள் நுழைகின்றோம்.

### சாப்பாடெங்கே?

இதோ மேசைக்கு எதிரில் உட்கார்ந்து கொள்கின்றோம். இலையும் போட்டாயிற்று. இலையைக் கண்ட மாத்திரத்திலேயே வாயில் ஜலம் ஊறத் தொடங்குகின்றது. அத்தனை பசி!

ஐந்து நிமிஷம், பத்து நிமிஷம் என்று நேரம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. சாப்பாடுமட்டும் இலையில் விழுவதாய் இல்லை.

இரண்டு மூன்று முறை குரல் கொடுக்கின்றோம். நம்மை அழைத்து வந்த அந்த 'வள்ளலை'த் தேடுகின்றோம். ஆசாமியின் நிழல்கூட அகப்படவில்லை.

நம் 'அக்ஷனை'ப் பார்த்து இரக்கம்கொண்ட கடைக்காரர் நமது அருகில்வந்து, 'ஸார்! மன்னிக்கவேண்டும். இன்னும் கால்மணி நேரத்தில் சுடச்சுட மீன் குழம்போடு சாதம் பரிமாறுகின்றோம். இப்பத்தான் உலை போட்டிருக்கின்றோம். இப்படியே இருங்கள்' என்கின்றார்.

நமக்கு வந்த ஆத்திரத்தில் நமக்கு முன்கிடந்த இலையை எடுத்து வீசி விட்டு, 'உன் சாதமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம்' என்று இரைந்துவிட்டு வெளியேறுகின்றோம்.

'இப்படியும் ஒரு கொடுமையா?' என்று 'கறுவி'க் கொண்டு பச்சைத்தண்ணீரை 'மடக் மடக்' என்று அள்ளிப் பருகிக்கொண்டு ஸ்டேஷனுக்குவருகின்றோம்.

அப்படி வந்த நம்மை நோக்கி—

நீண்டு நெடிதுயர்ந்த ஒரு மனிதன் வருகின்றான்.

கரிய திருமேனிகொண்ட அந்த மனிதனை நாம் கூர்ந்து பார்க்கின்றோம்.

அவனும் நம்மை உற்றுப் பார்க்கின்றான்.

நமக்குப் பின்னால் குமுறும் வயிற்றோடு வந்துகொண்டிருந்த நமது பிரயாணக் கோஷ்டியைச் சேர்ந்த கோபால், நம் காதோடு, 'இவனை ஏற்கனவே உங்களுக்குத் தெரியுமா? நானும் தனுஷ்கோடியிலிருந்து பார்த்து வருகின்றேன். இந்த இனந் தெரியாத ஆசாமி நம்மையே 'பலோ' பண்ணிக் கொண்டு வருகின்றான்!' என்றான்.

அதற்குள் அந்த மனிதன் நம்மை முற்றாக நெருங்கி விட்டான்!...

(வளரும்)


---

### அகில இலங்கை அருந்ததியர் சங்கம்

அகில இலங்கை அருந்ததியர் சங்க 32-வது ஆண்டு விழாவின் போது, புத்தாண்டு நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு. தி. பெ. வேலு, பொதுச்செயலாளர் திரு. கு. யா. திராவிடக் கழல், பொருளாளர்: திரு. ஆ. பெ. முனுசாமி, இணைச் செயலாளர்கள்: திரு. சுப. சிவம், திரு. பெ. கதிரேசன், துணைப் பொருளாளர்: திரு. ஈ. மா. அருமைதாஸ்.

விழாவின் போது, பாரதிதாசன் மறைவையொட்டிப் ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி

கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1964 மே மாதம் 10-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


# வெற்றி பெறுமா?

அடுத்து வருவது கூட்டரசாங்கமா? பொதுத் தேர்தலா? கூட்டாட்சி முயற்சி பலிக்கவில்லையேல், தேர்தலை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். காரணம், இனி பிறரின் துணையின்றி ஆட்சி செலுத்த முடியாத நிலை சுதந்திரக் கட்சிக்கு ஏற்பட்டிருப்பதுதான்.

இடதுசாரிகள் அரசாங்கத்தில் சேர்ந்தால் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் தீருமா? மொழிச் சிக்கலுக்கு முடிவு ஏற்படுமா? என்று கேட்கப்படுகிறது.

தமிழ் பேசும் இனத்தின் ஒத்துழைப்பைப் பெறத் தவறியதே இன்றைய ஆட்சியின் தோல்விக்குக் காரணம். கூட்டரசாங்கம் ஏற்பட்டாலும் இதே நிலைமை தான். 35 இலட்சம் சிறுபான்மை மக்களின் பூரண ஒத்துழைப்பும் பெற்ருலன்றி, எந்தக் கூட்டு அரசாங்கமும் இலங்கையில் வெற்றி பெற முடியாதென்பது இன்றைய அரசாங்கத்தின் தோல்வியிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினையாகும்.

ஆட்சியாளரின் மொழி வெறியும், சிங்களத் திணிப்பும், பாரபட்சமான நடவடிக்கைகளும், அநீதியான சட்டங்களும் சேர்ந்து நாட்டைப் பிளவுபடுத்தி, இரு பெரும் சமூகங்களிடையே பகைமையை வளர்த்து, தேசிய ஐக்கியத்தைச் சிதைத்துவிட்டன. தேசிய ஐக்கியம் சீர்குலைந்ததின் நிகர விளைவுதான் இன்றைய நெருக்கடிகள்.

அரசியல், பொருளாதார நெருக்கடிகள் இன்று ஆட்சியாளரின் மென்னியைப் பிடித்து நெரிக்கின்றன. இதிலிருந்து தப்பிப் பிழைக்கவே இடதுசாரிகளைத் தேடி ஓடுகின்றனர். கூட்டாட்சி நிறுவி நெருக்கடிகளைத் தவிர்க்கலாமென்று எண்ணுகின்றனர்.

வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற அவர்களின் வாக்குகள் பயன்பெறக்கூடும். இதைத் தவிர இன்றைய நெருக்கடிகளைத் தீர்க்கும் மந்திரக் கோலொன்று அவர்களிடமிருப்பதாகத் தெரியவில்லை. இடதுசாரிகளாயிருந்தாலும் சரி, வலதுசாரிகளாயிருந்தாலும் சரி, இரு பக்கத்திலும் இடி வாங்கும் "நடுவழி" சாரிகளாயிருந்தாலும் சரி, நெருக்கடிகளைத் தீர்க்க ஒரேயொரு வழிதானுண்டு.

மீண்டும் தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டுவதே அந்த வழி. சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்புக் கிடைக்காத வரை தேசிய ஐக்கியம் ஏற்படவே முடியாது. அந்த ஒத்துழைப்பைப் பெற என்ன செய்ய வேண்டும்? இதுதான் இன்றைய பிரச்சினை.

தமிழ் பேசும் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் வழங்கினுலன்றி அவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்காது. இதில் ஐயம் வேணடாம்! இதனை உத்தேச கூட்டு அரசாங்கம் செய்ய முடியுமா? ஆட்சியாளரிடம் அதற்கான மனமாற்றம் ஏற்படுமா?

இடதுசாரிகளுடன் கூட்டுச் சேருவதால் தற்போதைய ஆட்சியாளருக்கு அத்தகைய மனமாற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகளைக் காணேம். தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களை வஞ்சம்தீர்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படுவதே அதற்குச் சான்று.

மொழிப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கமிருந்தால், மனமாற்றத்துக்கான அறிகுறிகள் இருந்தால், 'கட்டாய ஓய்வு'க் கட்டளைகள் தற்காலிகமாகவாவது நிறுத்திவைக்கப்பட்டிருக்குமல்லவா? மொழிவழக்குத் தீர்ப்பினைப் பிரச்சினையைத் தீர்க்கும் கருவியாகப் பயன்படுத்தியிருப்பார்களல்லவா?

மொழிச்சிக்கலைத் தீர்க்க 'சர்வகட்சி மகாநாடு' கூட்டப் போவதாகக் கூறப்பட்டதெனினும், அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. தமிழரசுக்கட்சி சுமுகச் சூழ்நிலையை தோற்றுவிக்க உதவியதெனினும் அதனை ஆட்சியாளர் இதுவரை பயன்படுத்திக்கொள்ள வில்லை. தமிழ் பேசும் மக்களின் அடிப்படைஉரிமைகளை அலட்சியம்செய்து அவர்களுக்கு ஆத்திரமூட்டக்கூடியதாக அதற்குப் பிறகும் நடவடிக்கை எடுக்கப்படுகிறதே!

ஆகவே இதே ஆட்சியாளர் ஒரு சில இடதுசாரிகளைச் சேர்த்து ஒரு புதிய அமைச்சரவை அமைத்தஅளவில் அவர்களின் போக்கு முற்ருக மாறி விடுமென்று கருத இடமில்லை.

குறைந்த பட்சம் மொழியுரிமையேனும் வழங்கப்படாவிட்டால் சிறுபான்மையோரின் ஒத்துழைப்பு எந்த அரசாங்கத்துக்கும் இம்மியும் கிடைக்காது என்று மீண்டும் கூறுகின்ருேம். எனவே இந்தப் பிரச்சினையில் உத்தேச கூட்டாட்சிக்கும் ஒரு சோதனை காத்திருக்கிறது.

கூட்டாட்சிக்கு இரு வழிகளுண்டு. ஒன்று சிங்கள பௌத்த வகுப்புவாத நெருக்குதலுக்கு விட்டுக்கொடுத்து, சிறுபான்மை மக்களின் உரிமைகளை நசுக்கி, அவர்களை அடக்கி ஒடுக்கி எதேச்சாதிகாரம் செலுத்துவது—மற்றது உரிமைகளை வழங்கி தமிழ்பேசும் மக்களின் முழு ஒத்துழைப்பையும்பெற்று நெருக்கடிகளைத் தீர்த்து நாட்டைச்சுபீட்சப் பாதையில் கொண்டு செலுத்துவது. இந்தச் சோதனையில் கூட்டாட்சி வெற்றிபெறுமா?

சோஷலிஸக் கொள்கைகளைக் கடைப்பிடித்து சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்க மறுத்தால், உத்தேச கூட்டாட்சியும் இறுதியில் படுதோல்வி அடையுமென்பதையும், அவர்களின் சோஷலிஸம் பாசிஸத்தில்தான் முடிவடையும் என்பதையும் திட்டவட்டமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்ருேம்.

# மே தினம்: இரு கோணங்கள்

## மொழிவழித் தொழிற் சங்க மேடையில் தொழிலாளியின் குரல்

—0—

## இதர மேடைகளில் பதவி பற்றிய பேச்சு

மே தின விழா நாடெங்கும் நடைபெற்றது. போராட்டம், புரட்சி என்று கூறிவந்தவர்கள் தொழிலாளர் தினத்தில் அவற்றை மறந்தும் கூடப் பேசவில்லை. அவர்களின் பேச்சில் பதவிப் பசியும் அதிகார ஆசையுமே தொனித்தது. ஆனல் மொழிவழித் தொழிற் சங்கங்களின் மே தினக் கூட்டங்களிலும், அக் கூட்டங்களில் உரை நிகழ்த்திய தமிழரசுத் தலைவர்களின் பேச்சிலும் தொழிலாளர்களின் குரல் ஒலித்தது.

ஏனைய ஆண்டுகளை விட இவ்வாண்டு மேதினக் கூட்டங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்கின. இதிலும் இரண்டுவகை. மேதினத்தோடு ஒட்டிய மூலக் கருத்தைப் பிரதிபலிக்கும் முறையில் அமைந்த கூட்டங்கள் பிரகடனங்கள்—பதவி மோகத்தின் கிறுகிறுப்பில் அரசியல் அரங்கில் முக்கியத்துவம்பெற்று விளங்கியவை; என இரு கூறுகளாகப் பிரிக்கலாம்.

தென்னிலங்கையில் இருக்கக் கூடிய முக்கியமான அரசியல் கட்சிகள் அத்தனையும் தலைநகரில் மேதின விழாக் கொண்டாடினுர்கள். ஊர்வலங்கள் அத்தனையிலும் தொழிலாளர்கள் அணி வகுத்தனர்.

ஆனல் மேடையில் மட்டும் அவர்களின் குரல் ஒலிக்கவில்லை. மாருக ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்களின் பதவிப் பசியையும் அதிகார வேட்கையையும் ஒலிக்கச் செய்தனர்.

### சுதந்திரக் கட்சி

நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் சுதந்திரக் கட்சியினர் சுதந்திர சதுக்கத்தில் கூட்டம் நடத்தினுர்கள். ஐக்கிய தேசியக் கட்சியைச் சாடினுர்கள். ஆட்சியை தொடர்ந்து நடாத்துவதற்காக இடதுசாரி ஐக்கிய முன்னணியினருக்கு நற்சான்றிதழ் வழங்கினுர்கள், வரவேற்புக்கீதம் பாடினுர்கள். நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் மலைநாட்டுத் தொழிலாளரை மறந்து சோஷலிசம் பற்றியும் பேசினுர்கள்.

### ஐ. தே. கட்சி

ஐக்கிய தேசியக் கட்சியினரும் கைப்பார்க்கில் மேதினத்திற்கு விழா எடுத்தார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளாக நாட்டில் நடக்கும் புதுமைகளில் இதுவும் ஒன்று. சுதந்திரக் கட்சியையும், இ. ஐ. முன்னணியையும் கண்டித்தார்கள். கூட்டு அரசாங்கம் பற்றிய முயற்சியைச் சாடினுர்கள்.

### புதிய கொம்யூனிஸ்டுகள்

புதிய கொம்யூனிஸ்டுக் கட்சியினர் டி. மெல் பாக்கில் கூட்டம் நடத்தினுர்கள். பழைய கொம்யூனிஸ்டுத் தோழர்களையும் இ. ஐ. முன்னணியினரையும் கேலியும் கிண்டலும் செய்தார்கள். சுதந்திரக் கட்சி அரசாங்கத்தைக் கண்டித்தார்கள். ஐ. தே. கட்சியைச் சாடினுர்கள். 21 கோரிக்கை பற்றியும் இடையில் பேசினுர்கள். புரட்சி பற்றிக் கதைத்தார்கள். கொம்யூனிஸ்டுச் சீனவைப் புகழ்ந்தார்கள். நாட்டின் பெரும்பான்மைத் தொழிலாளர்களான தமிழ் பேசும் தொழிலாளர் பிரச்சினையை மறந்துவிட்டார்கள்.

### இ. ஐ. மு.

இ. ஐ. முன்னணியினர் [illegible] பெரும் வெற்றி விழாவாக மே தினக் கூட்டத்தைத் நடாத்தினுர்கள். இ. ஐ. முன்னணியின் 'முப்பெரும் தலைவர்க'ளும் முழங்கினுர்கள். முழங்கிய கருத்துக்கள். சுதந்திரக் கட்சியில் இருந்து எத்தனை மந்திரிகளை வெளியேற்றலாம்; எம்மைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் மந்திரிப் பதவி பெறலாம் என்பதேயாகும். சிறுபான்மையினருக்காக வக்காலத்து வாங்குவதாக வட-கிழக்கு இலங்கையில் இரு வாரங்களுக்கு முன்னர் கூறிய கருத்துக்களை மறந்துவிட்டார்கள். போராட்டம் புரட்சி என்ற சொற்களை மறந்தும் கூட உபயோகிக்கவில்லை.

சுதந்திரன் அரசியல் நிருபர்

இந்த அரசியல் கட்சிகள் சிலவற்றின் கிளைகளாக வட-கிழக்கு இலங்கையில் பெயரளவில் இயங்கும் சில இயக்கங்களும் மேதினக் கூட்டங்கள் நடாத்தினுர்கள். அவர்களின் மேடைகளில்; தலைநகரில் தலைவர்கள் பேசிய கூட்டங்களில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கியின் ஒவ்வொரு குழல் பொருத்தப்பட்டிருந்தது.

சில சமயங்களில் ஒலிபெருக்கிக் குழல்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவோ அல்லது வேறு தவிர்க்க முடியாத சூழ்நிலையாலோ தென்னிலங்கையிலிருந்து இக் கூட்டங்களில் கலந்து கொள்ள வந்தவர்கள் ஆளும் கட்சியையும், கூட்டு அரசாங்க முயற்சியையும் கண்டித்தும் உள்ளார்கள். ஆனல், அடிப்படை உரிமைகள் அத்தனையையும் இழந்து வாடும் தமிழ்த் தொழிலாளர் பற்றி இவர்களில் யாரும் மறந்தும் கூட ஒரு வார்த்தை கூற முற்படவில்லை.

### மலைநாட்டில்

மலைநாட்டில் முப்பெரும் தொழிற்சங்கங்கள் மேதினக் கூட்டங்களை நடாத்தினுர்கள்.

ஜ. தொ. கா. நாவலப்பிட்டியில் கூட்டம் நடாத்தியது. இக் கூட்டத்தில் ஜனப் அஸீஸ் முதன் முறையாகத் தோட்டக் குழந்தைகளின் கல்வி பற்றிப் பேசியுள்ளார்.

### இ தொ. காங்கி ,ஸ்

திரு. தொண்டைமான் தலைமையில் இயங்கும் இ. தொ. காங்கிரஸ் தலவாக்கொல்லையில் கூட்டம் நடாத்தினுர்கள். இக் கூட்டத்தில் திரு. தொண்டைமான் பேசுகையில் 'இ. ஐ முன்னணியின் மேதினச் செய்தியில் தென்கிழக்காசியாவிலிருந்து தென் அமெரிக்காவரை குறிப்பிட்டுள்ளனரெனினும் இந் நாட்டுத் தோட்டத் தொழிலாளரின் பிரச்சினையைச் சேர்க்கத் தவறிவிட்டனர்,என்றும், 'ஒரு பகுதித் தொழிலாளர்கள் மறு பகுதியினர் மீது ஆதிக்கம் செலுத்துகிறவரை சோஷலிஸ ஆட்சியைத் தோற்றுவிக்க முடியாது' என்றும் கூறியுள்ளார்.

### இ. தொ. கழகம்

இலங்கைத் தொழிலாளர் கழகம் அட்டன் டன்பார் மைதானத்தில் மேதினக் கூட்டம் நடாத்தியது.

மலையகத் தொழிலாளரின் நலிவு நிலைபற்றி எடுத்துக் கூறினுர்கள். அந்த நிலைக்குக் காரணமாக இருக்கும் சட்டங்களை எதிர்ப்போம்என்று முடிவெடுத்தார்கள், உண்மையான சமூகசமவுடைமை அரசு நிறுவ தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுத்தார்கள்.

இ. தொ. கழகம் 'மொழிவழி பிரிந்தால் வாழ்வோம் அன்றேல் வீழ்வோம்' என்ற கோட்பாட்டை ஏற்று இயங்கும் கழகம். தமிழ்பேசும் தேசியத்தொழிலாளர்களின் உரிமைக்கு மாற்று இயக்கங்கள் போராட மாட்டா என்று ஆரம்பகாலம் முதல் கூறிவருகிறது. தொழிலாளர் மத்தியிலும் இனப் பாகுபாடு உண்டு என்பதையும் தொடர்ந்து கூறிவருகிறது.

மலையகச் சிருர்களுக்கு நல்ல முறையில் கல்வி வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கூறி, வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறது இ. தொ. கழகம்.

இ. தொ. கா., ஜ. தோ. கா. தலைவர்களுக்குஇவற்றை உணர இத்தனை ஆண்டுகள் எடுத்திருக்கிறது.

தமிழரசுத் தலைவர்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே மொழிவழிபிரியவேண்டும் தொழிலாளர்கள் என்று கூறினுர்கள். 61-ம் ஆண்டு ஆரம்பத்திலேயே மொழிவழித் தொழிற்சங்கங்களும் உருவாகின.

ஆனல் இ. தொ. கா. தலைவர் அந்த உண்மையை காலங்கழித்தே உணர்ந்திருக்கிருர்.

வட—கிழக்கு மாகாணங்களில் மொழிவழித் தொழிற் சங்கங்களின் மேதினக் கூட்டம் முக்கியமான இடங்களிலெல்லாம் நடைபெற்றன. இருபதிற்கு மேற்பட்ட மொழிவழித் தொழிற்சங்கங்கள் கலந்துகொண்டன.

### தமிழரசார்

தமிழரசுத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் இக் கூட்டங்கள் எல்லாவற்றிலும் கலந்து உரை நிகழ்த்தினுர்கள். அநீதிகளைக் கண்டித்தனர். தமிழ் பேசும் தொழிலாளர்களைப் பாதிக்கும் சட்டங்களைப் பற்றியும் அவற்றினுல் தொழிலாளர் படப்போகும் இன்னல் பற்றியும் எடுத்துக் கூறினுர்கள். தொழிலாளர்களுக்கு வேண்டாத அரசியல் எதுவுமே பேசவில்லை.

### உணர்த்தும் உண்மை

நாட்டில் நடைபெற்ற மேதினக் கூட்டங்கள் ஒன்றை தெளிவாக உணர்த்துகின்றன. மொழிவழித் தொழிற் சங்கங்கள் நடாத்திய மேதினக் கூட்டங்களே மேதினத்தின் மூலக் கருத்தைப் பிரதிபலித்தன. அக்கூட்டங்களில் பேசிய அரசியல் தலைவர்கள் மக்களின் உண்மைப் பிரதிநிதிகள்; தொழிலாளர்களின் தலைவர்கள்.

ஏனைய மேதினக் கூட்டங்களில் ஒலித்த குரல்கள் அத்தனையும்மேதினத்தின் மூலக் கருத்தை மறந்து, மறைத்து ஒலித்தன. அதில் பேசிய அரசியல் தலைவர்கள் தங்களின் சொந்த விருப்பு வெறுப்புக்களையே கூறினுர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழியர் மனமாற்றம்: சிங்களம் பின்வாங்குகிறது

9-5-64ந் திகதி நடைபெறும் சிங்களத் தேர்வுப் பரீட்சைக்கு மனுச் செய்திருந்த அரசாங்க ஊழியர்களில் பெரும்பாலோர் பரீட்சைக்குத் தோற்றமாட்டார்களென்றும், அதில் அவர்களுக்கிருந்த அக்கறை பெருமளவு குறைந்துவிட்டதென்றும் அறியப்படுகிறது. அவர்களில் அநேகர் இனி சிங்களம் படிப்பதில்லையென்று முடிவு செய்து விட்டனராம். கோடீசுவரன் வழக்குத் தீர்ப்பின் எதிரொலியே இந்த மாற்றத்துக்குக் காரணம்.

சம்பளப் பட்டியல், விடுமுறை மனு, கடிதங்கள், பரீட்சை முடிவுகள், பொது மக்களுடன் தொடர்பு ஆகியவை இப்பொழுது முன்பு நடைபெற்றதைவிட அதிகமாக ஆங்கிலத்திலும், தமிழிலுமே நடைபெறுவதாகத் திறைசேரி அதிகாரி ஒருவர் கூறினர்.

## மொழி வழி பிரிந்தாலன்றி விமோசனமில்லை

மொழி வழி பிரிந்து நின்று ஒன்றுபட்டு உரிமைகளுக்காகப் பாடுபட்டாலன்றித் தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்தாருக்கு எந்த விதமான விமோசனமும் கிடைக்க வழியில்லை என்பதை, மட்டக்களப்பில், அரசாங்க எழுதுவினைஞர் சங்க மட்டுநகர்க் கிளையின் ஆதரவில் நடைபெற்ற மே தின விழாவில் பேசிய அனைவரும் வலியுறுத்தினர்.

சுமார் இருபது மொழி வழி பிரிந்த தொழிற் சங்கங்கள் இவ் விழாவில் பங்கெடுத்துக்கொண்டன. அரசாங்க எழுதுவினைஞர் சங்க முன்னாள் தலைவர் திரு. மு. தம்பிமுத்து தலைமை தாங்கினர்.

### பிரமாண்டமான ஊர்வலம்

மொழி வழித் தொழிற் சங்க மேதின விழாவை முன்னிட்டுக் கிழக்கிலங்கை கூட்டுத்தாபன ஊழியர் சங்கமும், காகிதத் தொழிற்சாலை தமிழ் பேசும் ஊழியர் சங்கமும் கூட்டாகச் சேர்ந்து சைக்கிள் ஊர்வலமொன்றினை நடாத்தினர். கல்குடா எம். பி. திரு. பொ. மாணிக்கவாசகர் தலைமையிலான இந்த ஊர்வலம் மட்டக்களப்பை அடைந்ததும், மொழி வழித் தொழிற்சங்க மேதின விழாக்குழுவின் சார்பில் திரு. அ. புவநேசன், திரு. டொ. சை. க. வணசிங்கா ஆகியோர் வரவேற்றனர். அதேபோல மட்டக்களப்பின் கிழக்குப் பகுதியான அமிர்தகளியிலிருந்தும், தென் பகுதியைச் சேர்ந்த செட்டிபாளையம், கிரான்குளம், குருக்கல்மடம், ஆரயம்பதி ஆகிய பகுதிகளிலிருந்தும் தமிழ்த் தொழிலாளர்கள் சைக்கிள்களில் ஊர்வலமாக வந்து சேர்ந்தனர்.

பிற்பகல் மூன்று மணிக்கு அரிசி ஆலைச் சந்தியிலிருந்து மட்டக்களப்பின் சரித்திரத்தில் இதற்கு முதல் எந்தத் தொழிற் சங்கத்தினாலும் நடாத்தப்படாத மிகப் பிரமாண்டமானதொரு ஊர்வலம் ஆரம்பமாகி நகர வீதிகளினூடாக பலத்த கோஷங்களையிட்ட வண்ணம் சந்தை மைதானத்தை வந்தடைந்தது.

தமிழ் ஆசிரிய சங்க சார்பில் திரு. டொ. சை. க. வணசிங்கா, அரசாங்க எழுதுவினைஞர் சங்க மட்டுநகர் கிளைத் தலைவர் திரு. வை. சொக்கலிங்கம், தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம், துறைமுக நாவாய் இயக்குனர் கழகத்தின் சார்பில் திரு. எஸ். நாகலிங்கம், இலங்கைத் தொழிலாளர் கழக மஸ்கெலியா மாவட்டப் பிரதிநிதி திரு. கே. பி. செல்லத்துரை, அஞ்சல் எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு. ச. மு. செபரத்தினம், காகிதத் தொழிற்சாலை தமிழ் ஊழியர் சங்கத்தின் சார்பில் திரு. கே. நல்லதம்பி, திரு. வ. கோவிந்தசாமி, கிழக்கிலங்கை கூட்டுத்தாபன ஊழியர் சங்கச் சார்பில் திரு. எஸ். ரி. செல்வரத்தினம், திரு. அற்புதராசா குரூஸ், நெல் அரிசி அளவைத் தொழிலாளர் சங்கச் சார்பில் திரு. வ. பாலசிங்கம், இலங்கைத் தொழிலாளர் கழக உப தலைவரும் மேற்சபை உறுப்பினருமான செனட்டர் மு. மாணிக்கம், காந்திஜி கழகத்தின் சார்பில் திரு. அ. அந்தோனிமுத்து (முத்தழகு) ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

தொழிலாளர் பாதுகாப்பு முன்னணியின் இசை நிகழ்ச்சியும், இசைக்குமரன்-முழக்கம் முருகப்பாவின் இசை விருந்தும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெற்றன. இறுதியில் அரசாங்க எழுதுவினைஞர் சங்க மட்டுநகர்க் கிளையின் செயலாளர் திரு அ. புவநேசன் நன்றியுரை கூறினர்.

## மொழிவழி....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்வாலும் ஒன்றுகவே கடமையாற்றின. அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் தோற்றம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தொழிற்சங்கத் துறைப் பணிக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியது.

### கோடீசுவரன் வழக்கு

சட்ட நடவடிக்கை, தொழிற்சங்க வளர்ச்சி ஆகிய இரண்டு துறைகளிலும் சங்கத்தின் சார்பில் பணியாற்றிய செயற்குழு-சுமார் 30 பேரால் நியமிக்கப்பட்ட செயற்குழு-அதன் முதலாண்டுப் பணியை உறுப்பினர் முன் வைக்க வந்த பொழுது சுமார் ஆயிரம் உறுப்பினர்களைச் சந்திக்கக் கூடியதாக விருந்தது. அந்த அளவுக்கு வெற்றிகரமாகப் பணியாற்றிய செயற்குழுவை யார்தான் விட்டு வைப்பார்கள்? உறுப்பினர்கள் மீண்டும் பழைய செயற்குழுவினரையே தெரிந்தெடுத்தனர். திரு. சிவானந்தசுந்தரம் தலைவராகவும், திரு. பாலசுப்பிரமணியம் செயலாளராகவும், திரு. தர்மலிங்கம் பொருளாளராகவும், பெருமளவு சென்ற ஆண்டின் செயற்குழுவினரே இவ்வாண்டும் தெரிந்தெடுக்கப்பட்டனர். இந்த இரண்டாம் ஆண்டிலே சங்கம் மேலும் பலம் பெற்று வளர்ந்தது. புதிய தொழிற் சங்கங்கள் எழுதுவினைஞர் சங்கத்தின் வழியிலே தோன்றின. இன்று வரலாற்றுப்பெருமை பெற்றுவிட்ட 'கோடீசுவரன் வழக்கு' இந்த ஆண்டு தான் ஆரம்பிக்கப்பட்டது.

(வளரும்)

## தியாகத்தின் மூலமே உரிமை பெற முடியும்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தலைவர் திரு. செ. கோடீசுவரன் பி. ஏ. தலைமையில் மொழிவழித் தொழிற்சங்கங்களின் மேதின விழா யாழ்ப்பாணம் நகரசபை முன்றலில் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம் பா. உ., இ. பாலசுப்பிரமணியம், திருமதி. மங்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் தலைமையில் யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியிலிருந்து ஒரு மாபெரும் தமிழ் பேசும் தொழிலாளர் அணியும், திருவாளர்கள் வி. தர்மலிங்கம் பா. உ., செ. கோடீசுவரன் பி. ஏ., ஆகியோர் தலைமையில் கச்சேரியடியிலிருந்து ஒரு தமிழ்பேசும் மாபெரும் தொழிலாளர் அணியும் ஊர்வலமாக வந்து கூட்ட மைதானத்தை அடைந்தன.

திரு. கோடீசுவரன் தனது தலைமை உரையில் கூறியதாவது:-

இந்த நாட்டில் இயங்கி வரும் இரு தேசிய இனங்களுக்கிடையேயும் எந்தவிதமான ஒற்றுமையும் இல்லை. சிறுவெற்றிகளைக் கண்டு நாம் பெருமைப்படக்கூடாது. நீதிமன்றத்தினால் மட்டும் நாம் உரிமைகளைப் பெற்றுவிட முடியாது. தியாகத்தின் மூலமே நமது இழந்த உரிமைகளைப் பெறமுடியும்.

### கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள்

பின்னர் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கமும் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கமும் பேசினர்கள்.

அ. எ. வி. ச. பொதுச்செயலாளர் திரு. இ. ப[illegible]மணியம், அ. எ. வி. ச. [illegible] ஞர் கிளையைச் சேர்ந்த திரு. க. கந்தசாமி, தமிழ்பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கப் பிரதிநிதி திரு. பொ. நாகராசா, அஞ்சல் எ. வி. ச. பிரதிநிதி திரு. த. சோமசுந்தரம், துறைமுக நாவாய்இயக்குனர் கழகப் பிரதிநிதி திரு. அ. பஸ்தியாம்பிள்ளை, இ. தொ. கழகப் பிரதிநிதி திரு. செ. கலியபெருமாள், இலங்கை வசு தொழிலாளர் கழகப் பிரதிநிதி திரு. பீதாம்பரம், கூட்டுத்தாபன ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் திருவாளர்கள் ஆ. ஜேசுதாசன், சத்தியபாலன், அரசாங்க சுக சேவைத் தமிழ் பேசும் தொழிற்சங்கப் பிரதிநிதி திரு. வ. பண்டிதர், பரந்தன் இரசாயன தொ. ச. பிரதிநிதி திரு. வேலாயுதபிள்ளை, யாழ் வர்த்தக ஊ. ச. பிரதிநிதி திரு. க. சுந்தரலிங்கம், அ. இ. அ. பா. தமிழ் [illegible] திரு. வ. மகாலிங்கம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள்.

## நமது சாதனை கண்டு அவர்கள் வேதனை

'மொழிவழி பிரிந்த தொழிற் சங்கங்களினால் எதையும் சாதிக்க முடியாது' என்று வாய்புலம்பி வந்த வகுப்பு வாதிகளான தேசியத் தொழிற் சங்க வாதிகள், இன்று கோடீசுவரன் வழக்கு முடிவு கண்டு வாயடைத்து நிற்கிறார்கள்' என்று திருமலைப் பெரிய முற்ற வெளி மைதானத்தில் நடைபெற்ற மொழிவழித் தொழிற் சங்கங்களின் மேதின விழாவில் அ. எ. வி. ச. பிரதிநிதியாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய திரு. க. இராமநாதன் குறிப்பிட்டார்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் முத்துக்குமாரசாமி கோவிலிலிருந்து மாபெரும் ஊர்வலம் ஒன்று திருவாளர்கள் எஸ். எம். மாணிக்கராசா, எம். ஈ. எச். முகம்மதலி, டாக்டர் சித்திரவேலு, வே. கனகசபை முதலி, க. இராமநாதன், செ. சிவலிங்கம் ஆகியோர் தலைமையில் முற்றவெளியை வந்து அடைந்தது. ஊர்வலத்தில் அருந்ததியர் சங்க உறுப்பினர்களின் சிலம்படி, கம்படி போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

வழி நெடுகிலும் பொது மக்கள் பெருந்திரளாகக் கூடி நின்று ஊர்வலத்தினரை வரவேற்றனர். ஊர்வலத்தில் 'கோடீசுவரன் அண்ணு வாழ்க', 'சிங்களக் குடியேற்றத்தைத் தடுப்போம்' போன்ற சுலோக அட்டைகள் பெருமளவில் காணப்பட்டன.

அஞ்சல் எ. வி. ச. தலைவரும் மொழிவழித் தொழிற் சங்கங்களின் கூட்டணித் தலைவருமான திரு. வே. கனகசபை முதலி, கூட்டுத்தாபன ஊழியர் சங்கப் பிரதிநிதி திரு. ஐ. தி. சம்பந்தன் அ. எ. வி. ச. தலைமை நிலையப் பிரதிநிதி திரு க. இராமநாதன் ஆகியோர் விசேட பிரதிநிதிகளாகக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். பத்தொன்பது மொழி வழித் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் உட்பட திருகோணமலைப் பிரதிநிதி திரு. எஸ். எம். மாணிக்கராசா, மூதூர் முதல் பிரதிநிதி ஜனப் எம். ஈ. எச். முகம்மதலி ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்கள்.



ஜி. ஸி. ஈ. உயர்தரத் தேர்வும்
பல்கலைக் கழகப் புதுமுக தேர்வும்

இலங்கையின் மிகப் பிரசித்தி வாய்ந்த இன்ஸ்டிடியூட். இலங்கையிலேயே சிறந்த அஞ்சல் மூலம் கல்வி, விவேக மீட்டல் பாடங்கள், பரீட்சை வழிகாட்டிகள், வழங்குகிறது.

யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,
நெல்லியடி கரவெட்டி
கிளைகள்:
107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
13, முதலாவது சப்பெல் ஒழுங்கை, கொழும்பு-6.



புதுவருடப் பண்டிகையில் பூவையர்க் கேற்ற
மினேர்வா
சிறப்பும் வனப்புமிக்க
தையல் மெஷின்
இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



126

நுண்ணிய தயாரிப்பு, நாசூக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும் அழகாகவும் தைத்துக் கொள்ளலாம்.
3 லாச்சிகள் கொண்ட கெபினட்
வழக்கமான விலை ரூபா 540/-
புதிய வரி விகிதத்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.
இப்பொழுது விற்கப்படும் விலை ரூபா 420/-
சோல் ஏஜெண்டுகள்:
சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,
516, ஸ்கினர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 4261-2, 3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# உள்ளத் தூய்மை

அன்ன நடை, மின்னல் இடை, காந்தமெனக் கவரும் கயல்விழிகள். கண்டவர் மயங்கும் கட்டான எழிலுடல், இவை அனைத்துக்கும் சொந்தமான அழகுப் பொற்சித்திரம் அவள். வயது இருபத்தைந்துக்கு மேலிருக்காது. பார்ப்பவர்கள் பதினெட்டு வயது வாலைக் குமரி என்றுதான் வர்ணிப்பார்கள்.

ஒழுக்கமும், அமைதியும் ஒருங்கே உறைந்து விளங்கும் பாண்டியூர்க் கிராமத்திலே புதிதாக வந்து குடியேறியிருக்கிறாள். பதினைந்து வயதுடைய ஒரு தம்பி, வயது சென்ற தாய், இதுதான் அவள் குடும்பம். அவள் ஒரு தையல் ஆசிரியை. கல்முனையில் உள்ள 'சிங்கர் மெஷின் ஸ்தாபனத்தில்' தையல்படிக்கும் பெண்களுக்கு தையல் சொல்லிக் கொடுப்பதுதான் இத்தையலளின் வேலை. இவையெல்லாம் அவள் கடைக்கண்பார்வைக்கு வட்டமிட்டுத் திரியும் இளம் வாலிப வெட்டுகள் நன்றாக அறிந்திருந்தனர்.

அவள் பெயர் குமுதா. குமுதா கல்முனைக்குச் செல்லும்போதும், வரும்போதும் பல கண்கள் அவளை வட்டமிட்டும், பின்தொடர்ந்து கொண்டுமிருந்தன.

இக்காலத்தில் மேல் மினுக்கி, பகட்டுடன் பிறர் தங்களைப் பார்க்கவேண்டும். வாளிப்பான தங்கள் உடலழகை அள்ளிப் பருகவேண்டுமென்றும் அரைகுறை ஆடைகளுடன் வீதிகளிலே விசுக், விசுக் என்று வளைய வரும் நவநாரீக யுவதிகளைப் போலல்லாமல் அடக்கமும் அமைதியும் உருவமாகத் தானுண்டு, தன் வேலையுண்டு என்பதற்கேற்ப வாழ்ந்து கொண்டு வந்தாள்.

பலரின் கண்களுக்குத் தான் விருந்தாகி வருவதை அவளும் அறியாமலில்லை. என்ன செய்வாள்? அவளோ பெண்; இடமோ புதிது. பார்ப்பவர் பார்க்கட்டுமென அசட்டையாக இருந்தாள். எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி இருக்க முடியும்?

அத்தனை கண்கள் மத்தியிலும் அவளை அனுதாபத்தோடும், அமைதி கலந்த அன்போடும் பார்க்கும் இரு கண்களை அவள் சந்திக்கும் போது; என்னவோ செய்தது. தாமாகவே அவள் கண்கள் நிலத்தை நாடி, மீண்டும் அக்கண்களை நாடும்.

அக் கண்களுக்குச் சொந்தமானவன் ஒரு வாலிபன். வயது இருபத்தாறு இருக்கும். சற்று ஒல்லியான தேகம். சாந்தமான முகம். சுருண்ட கேசம். அழகைக் கூட்டும் இள மீசை. நீட்டுக் காற்சட்டையும், சேட்டும் அணிந்திருந்தான். நல்ல அழகன் என்று சொல்ல முடியாவிட்டாலும், எவரையும் தன் பக்கம் கவரக்கூடிய ஒருவித கவர்ச்சி அவனிடம் காணப்பட்டது. அவன் ஒரு ஆசிரியன். பெயர் தயாளன், பாத்திமாக் கல்லூரியில் படிப்பித்துக் கொண்டிருக்கிறான். கல்முனை அவன் சொந்த ஊர். சைக்கிளில் தான் கல்லூரிக்கு வருவது வழக்கம்.

ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் குமுதாவும், தயாளனும் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும். ஆரம்பத்தில் இருவரும் சாதாரணமாகத்தான் பார்த்துக் கொண்டார்கள். நாட்கள் செல்லச் செல்ல அவன் பார்வையிலே ஒருவித துடிப்பும், ஏக்கமும் காண வாரம்பித்தது. அவளுக்கும் அவளை அறியாமலே ஒருவித பாசம்; அவன் பால் படரத் தொடங்கியது. அது காதலா?... அல்லது சகோதர பாசமா என எண்ணி அவன் பல தடவை குழம்பியிருக்கிறான். அவளின் கருத்தைக் கவரும் காந்தப் பார்வையால் மது வருந்திய வண்டானான். தன்னை மறந்து ஒவ்வொரு நிமிடமும் அவளுக்காகத் தவித்தான். அவளைப் பரிசோதிப்பதற்காகப் பார்க்காதது போல் கடைக்கண்ணால் கவனித்தான். அவளுடன் பேசி அவள் மனதை அறிந்துவிட வேண்டுமென்று துடியாகத் துடித்தான்.

தயாளனின் ஏக்கத்தையும், அதனால் அவன் தாக்குண்டதை அறிந்து கொண்டும் சமுதாயத்தின் சந்தேகக் கண்களுக்குப் பயந்து தன்னை அடக்கிக் கொண்டாள். எப்படித்தான் பார்த்தாலும், சிரித்தாலும். அவள் மனதை அறிய வேண்டுமென்று நான்கு மாதங்களையே கடத்திவிட்டான் தயாளன். மேலும், அவனால் பொறுக்க முடியவில்லை. கல்லூரிக் கோடை விடுமுறைக்கு இன்னும் ஒரு வாரமேயிருந்தது. எப்படியும் அவள் மனதை அறிய வேண்டும் அல்லது அவளை மறந்துவிட வேண்டும். இதுதான் அவன் இறுதித் தீர்மானம். ஆனால்... அவளை அவனால் மறக்க முடியவில்லை.

அன்று காலை 7-45 மணியிருக்கும் தயாளன் தன்னை அழகுபடுத்திக் கொண்டு நேரத்தோடு பாடசாலைக்கு வெளிக்கிட்டான். வீட்டிலும், வீதியிலும் நண்பர்கள் நேரத்தோடு செல்வதின் காரணம் கேட்டபோது; எதையோ சொல்லித் தப்பித்துக் கொண்டு நேரே பாண்டியூரை நோக்கி சைக்கிளை விடுகிறான். அதோ, பாண்டியூர் அரசடியம்மன் கோயிலின் அருகாமையில் குமுதா வந்து கொண்டிருக்கிறாள். இருவர் கண்களும் சந்திக்கின்றன. அவன் பார்வையைத் தாங்காது அவள்

**பாண்டியூர் இராகி**

பார்வை நிலம் நோக்கித் தாழ்கிறது. சைக்கிள் போய் விடுகிறது. அவனும் திரும்பிப் பார்க்கிறான். அவளும் திரும்பிப் பார்க்கிறாள். இருவர் இதயமும் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது. சிறிது தூரம் சென்று சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வருகிறான் தயாளன். அவளும் நடையின் வேகத்தைத் தளர்த்துகிறாள். பாதையிலே சன நடமாட்டம் அதிகமில்லை. அவள் அருகே மெல்லச் சைக்கிளை விடுகிறான். அவள் நாணிப் பாதையோரம் நகருகிறாள். ஏதோ ஒரு சக்தியால் உந்தப்பட்டு.

'உங்களைத்தான்' திடீரென அழைத்துவிட்ட தயாளன் மீண்டும் 'உங்களோடு தனிமையில் பேச வேண்டும்' அவன் குரலில் நடுக்கம் காணப்பட்டது.

'..........'

அவள் கண்கள் யாரும் கவனிக்கிறார்களோவென நாலாபுறமும் சுழலுகின்றன. முகம் குப்பெனச் சிவந்து உடல் ஒடி வேர்க்கிறது.

'நாளைக்கு இதே இடத்தில் சந்திக்கலாமா?' எதையோ பேச வந்தவன் இடையில் பேச்சை இப்படித் துண்டித்துவிட்டான். 'ஆம்' என்றதற்குப் பதிலாகத் தலையை ஆட்டினாளே தவிர அவள் நா அசையவில்லை. அவள் மனோ வேகத்தைப் போன்று அவன் சைக்கிளின் வேகமும் கூடுகிறது. தயாளன் போய்விட்டான். குமுதா யோசனையில் ஆழ்ந்தவாறு நடக்கவாரம்பித்தாள்.

தான் நடந்துகொண்ட முறை சரிதானா என அன்று முழுவதும் அவள் மனதைக் குழப்பிக் கொண்டிருந்தாள். எதிர்மாறாக தயாளன் ஒருவித இன்பக் கிளுகிளுப்பில் மூழ்கிக்கிடந்தான். பாடமும் படிப்பிக்கவியலாது சிவந்து வியர்த்து அவள் நின்ற காட்சி அவன் கண்முன்னே நிழலாடியது. அவள் ஒயிலான நடையும், 'ஆம்' எனத் தலையாட்டிய விதமும் அவன் உள்ளத்தே ஊர்ந்துகொண்டிருந்தது.

நாட்கள் நகர்ந்தன. தயாளன் குமுதா காதலும் வளர்ந்தது. அவன் அளவிற்கு மீறி அவளை நேசித்தான். அவள் அளவோடுதான் உறவாடினாள். நாட்செல்லச், செல்ல குமுதா எதையோ நினைந்து வேதனைப்பட ஆரம்பித்தாள். ஏதோ ஒன்று தயாளன் மேல் பூரண அன்பைக்காட்ட முடியாது தடுப்பதைத் தவிர்க்க முடியாது தவித்தாள். அதை அவனிடம் கூறிவிடத் துணிந்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. தயாளனைத் தன் வீட்டுக்கு வரும்படி அழைத்திருந்தாள். சாயங்காலம் நாலு மணியாகப் போய்விட்டது. மூன்று மணிக்கே தன்னை அலங்கரித்துக்கொண்டு அழகுப் பொற்சித்திரமாக நின்றிருந்தாள். ஆயினும், தான் விரும்பிய பொருள் தன் கைக்குக் கிடைக்காமல் போய் விடுமோ என்ற வேதனைத் துடிப்புடன்தான் வழி பார்த்திருந்தாள். குறிப்பிட்ட நேரத்தில் அவன் வரவில்லை. வீட்டுக்குள் ஓடி நேரத்தைப் பார்ப்பதும், வீதிக்கு ஓடிவந்து தயாளனைப் பார்ப்பதுமாக இருந்து கொண்டிருந்தாள். எங்கே தன்னைப்பற்றிய உண்மையினை அறிந்து வராமல் விடுவானோ என்ற வேதனையும் அவளை வாட்டி வதைத்தது. அதோ அவனும் வந்துவிட்டான்.

இவ்வளவு நேரமும் காணாது துடித்துக்கொண்டிருந்தவள் தயாளன் வந்ததும் மௌனமாகவே வளவினுள் சென்றாள். மௌனத்தின் காரணத்தைப் புரிந்து கொண்டவள்போல குறுநகையுடன் அவளைப் பின் தொடர்ந்தான் தயாளன். இவர்களுடைய தொடர்பை ஏற்கனவே அறிந்திருந்ததால் வெளியில் நின்ற குமுதாவின் தாய் சமயலறையினுள் சென்றுவிட்டாள். தம்பிக்காரனைக் காணவில்லை. குமுதா வீட்டு முன் மண்டபத்தினுள் வந்து தயாளனுக்கு ஒரு கதிரையை எடுத்துப் போட்டுவிட்டு, சுவரில் சாய்ந்து கைகளை முன்னால் கட்டிக்கொண்டு சலனமான முகத்தோடு அவனைப் பார்த்துக்கொண்டிருந்தாள். தயாளனுக்கு இந்த மௌனம் என்னவோ செய்தது.

'குமுதா' அவனாகவே மௌனத்தைக் கலைக்க முயன்றான்.

'உம்' அவள் இதயத்திலிருந்து பெருமூச்சோடு எழுந்தது

'என் மீது கோபித்துவிட்டாயா'? குழந்தைப்பிள்ளை போல கேட்டான்.

'உங்களைக் கோபிக்குமளவிற்கு எனக்கு உரிமை இருக்கிறதா என்றுதான் குழம்புகிறேன்.' வேதனையை வெளியிட ஆரம்பித்தாள்.

'குமுதா, உன்னை என் உயிரிலும் மேலாக நேசிக்கிறேன்' தன் காதலின் வேகத்தை விளக்கினான்.

'நான் சொல்வதைக் கேட்டால் நீங்களே என்னை வெறுக்கக்கூடும்' என அவனை ஊடுருவி நோக்கினாள்.

'எது எப்படி இருப்பினும் இனி உன்னை வெறுக்க இடமேயில்லை' அதை வெட்டி அவளுக்குத் தெம்பளித்தான்.

'அது உங்களுக்கு ஆத்திரத்தைமூட்டும்' தன்னிலமையின் தன்மையை விளக்க முயன்றாள்.

'ஆத்திரத்துக்கு நான் என்றுமே அறிவிழந்ததில்லை குமுதா. உன் மனதிலுள்ளதை வெளிப்படையாகவே சொல்லலாம்' எதையும் தாங்குமியல்பினன் என்பதை எடுத்துக்காட்டினான்.

'நான் யாரையும் ஏமாற்ற விரும்பவில்லை. அதற்காகத் திருமணமே செய்துகொள்வதில்லைஎன்றிருந்தேன்' அவள் பார்வை எங்கோ சென்றது.

'ஏன் குமுதா?'? அவனையறியாமலே அச்சம் படர்ந்தது.

'நான் ஏற்கனவே திருமணமானவள்' அவனை நோக்கினாள்.

'என்ன?' சற்று அயரவே செய்தான்.

'ஆம். நோயுற்றிருந்த என் தந்தையின் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய என் விருப்பமின்றியே ஒருவரின் வாழ்க்கைத் துணைவியானேன். ஆனால் தந்தையும் பிழைக்கவில்லை. மனமின்றி நான் புரிந்த மணமும் நிலைக்கவில்லை. எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கார்விபத்தில் கணவரை இழந்தேன். அதன் பிறகுதான் இவ்வூருக்கு வந்தேன். ஆயினும், தாங்கள் காட்டும் அன்பு வெள்ளம் அதைத் தத்தளிக்கச் செய்துகொண்டிருக்கிறது. இதுவரையிலும் இதைச் சொல்லாமல் வைத்திருந்ததற்கு மன்னியுங்கள். உங்களை மணந்து மகிழவேண்டுமென்பதற்காக ஒரு உண்மையை என்னால் மறைக்க முடியவில்லை' அவளையறியாமலே அவள் கண்கள் கலங்குகின்றன.

'இப்போதுதான் உன்னை அதிகமாக விரும்புகிறேன் குமுதா' அமைதியாகக் கூறினான்.

'என்ன!—உண்மையாகவா'? ஆனந்த மிகுதியால் தன்னை மீறியே கூவிவிட்டாள்.

'ஆம் குமுதா, நீ விரும்பியிருந்தால் இன்றுமட்டுமல்ல என்றுமே சொல்லாமல் மறைத்திருக்கலாம். இதையறிந்தவர்களும் இங்குயாருமில்லை. ஆனால், நீ அப்படிச் செய்யவில்லை. இங்குதான் உள்ளத் தூய்மையை உணருகிறேன். உண்மையும், தூய்மையும்தான் வாழ்க்கைக்கு ஒளிதருவன. அப்படிப்பட்ட செல்வத்தை நான் இழக்க விரும்பவில்லைக் குமுதா'. எழுந்து அவள் கைகளைப் பற்றுகிறான்.

'அத்தான்' அவன் மார்பிலே சாய்கிறாள்.

(யாவும் கற்பனை)





பாட்டாளி முதல் பணக்காரன் வரை

எல்லோரும் புகைப்பது

**கமலா பீடி**

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

**கமலா ஸ்டோர்ஸ்**

தந்தி தாமரை

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி 3597—6522

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் பாடசாலைகளும் போதனு மொழியும்

## அ. இ. அ. இ. ஆ. சங்க வெளியீடு தரும் விபரம்

அகில இலங்கை அரசினர் இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தால் முஸ்லிம் கல்வி மாநாடு ஏப்ரல் மாத இறுதியில் கொழும்பு சாஹிருக் கல்லூரியில் நடைபெற்றது. தமிழே இஸ்லாமியர் களின் போதனு மொழியாக இருக்க வேண்டுமென்று மாநாட்டுத் தீர்மானங்கள் கூறுகின்றன. ஆசிரியர் சங்க கல்வி மாநாட்டுக் குழுவினர் 12 அம்சங்களையிட்டு அலசி ஆராய்ந்து, அதற்கான முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

வினு விடை உருவத்தில் அமைந்துள்ள அந்த வெளியீட்டின் சுருக்கத்தை இங்கே தருகிறோம்:

கல்வி உளநூல் ஆரம்ப தத்துவங்களின்படி ஒரு மாணவனின் வீட்டு மொழி-தாய்மொழி போதனுமொழியாயிருப்பது அம் மாணவனுக்கு அநுகூலமாகும். தாய்மொழியோ வீட்டு மொழியோ அல்லாத ஒரு மொழியை மாணவன் படிப்பதால் இரண்டு வருடங்களால் அவனது முன்னேற்றம் தடைப்படுகிறது என்பதைக் கல்வி சம்பந்தமான பரிசிலனைகள் தெளிவாய்க் காட்டுகின்றன. ஆங்கிலம் படிக்கும் ஒரு சிங்கள மாணவன் ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட அதே திறனுள்ள மாணவனோடு போட்டியிட முடியாது. ஆங்கிலம் படிக்கும் அந்தப் பிற மாணவன் மொழியின் இயற்கை அமைப்பைப் படித்த பின்பே அதில் தனது உளக்கிடக்கையை வெளிப்படுத்த முடியுமாகிறது. அதனுல் அந்தப் பிற மாணவன் குறைந்தது இரண்டு வருடங்கள் பின் தங்குகிருன். ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக்கொண்ட பிள்ளைக்கு அப்பாஷையின் அமைப்பு இலகுவிலும் இயற்கையாகவும் புரியும். இதனுற்ருன் உலகெங்கிலுமுள்ள கல்விமான்கள் தாய் மொழி அல்லது வீட்டு மொழி பிள்ளைகளுக்குப் போதனு மொழியாயிருப்பதை ஏற்கின்றனர்.

### மதம் பாதிக்கப்படும்

எமது பாடசாலைகளை முற்ருகச் சிங்களமயமாக மாற்றுவதால் மத கலாச்சார சமூக அடிப்படையில் மிகவும் விபரீதமான பலாபலன்கள் ஏற்படலாம். கல்வியில் இரண்டு வருடம் பின் தங்குவதோடு மதக்கண் கொண்டு பார்க்கும்போது எமது பிள்ளைகள் மத, கலாச்சார சூழ்நிலையற்ற பாலைவன வாழ்க்கை அமைப்பொன்றில் தள்ளப்படுவர். சிங்கள மொழியில் இஸ்லாத்தைப் பற்றியோ இஸ்லாமிய பாடங்கள்—விடயங்கள் பற்றியோ எவ்வித புத்தகங்களும் இல்லை. இஸ்லாமிய இலக்கியங்கள் என்று கூறி இறுமாப்படைய அங்கொன்றுமேயில்லை. சிங்களப் பாடசாலையில் படிக்கும் ஒரு இளம் மாணவன் பௌத்த அல்லது சிங்கள கிறிஸ்துவ சூழ்நிலையில் தள்ளப்படுகிருன். இவர்கள் சூழ்நிலையின் கெடுதிகளாலும் சரியான மத சம்பந்தமான புத்தகங்கள் சிங்களத்தில் கிடைக்காததாலும் இலகுவாகவே பெரும்பான்மைச் சமூகத்தில் இணைந்துவிடுகின்றனர்.

இவ்விதமான மதம் மாறும் நடவடிக்கைகளுக்கு இஸ்லாமிய சூழ்நிலையைக் கைவிட்டு ஒதுக்கியவர்கள் ஏற்கனவே ஆளாகிக் கொண்டு இருக்கிருர்கள். தமது வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள், நடவடிக்கைகளெல்லாம் நாகரிகக் கொடியின் உச்சியிலேறி, இன்று அவர்கள் மதம் மாறி மணம் முடிக்கவும் விரும்புகின்றனர்.

இலங்கையில் வாழும் ஏழு இலட்சம் முஸ்லிம்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வசித்தாலும் ஒரே மதத்தாலும் மொழியாலும் ஒன்றுபட்டு இருக்கின்றனர். எமது மூதாதையர் சிங்கள அரசர்கள் காலத்திலும் 500 வருட போர்த்துக்கோய டச்சு ஆங்கில ஆட்சி காலத்திலும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு பேணி வளர்த்து வந்துள்ளனர். அவர்கள் இஸ்லாமிய இலக்கியங்களைத் தமிழில் இயற்றி முஸ்லிம்களுக்கு மத கலாச்சார ஈடுபாட்டை தமிழில் உண்டாக்கியுள்ளனர். இப்பொழுது வாழும் சந்ததியினர் இனி வரும் சந்ததியினருக்கு தமிழைப் பேணிக் கொடுக்க கடமைப்பட்டிருக்கின்றனர்.

தமிழால் மாத்திரமே எமது மத கலாச்சார சமூக தனித்துவத்தை பாதுகாக்க முடியும் என்பதை நமது மூதாதையர் நன்கு உணர்ந்து இருந்தார்கள். தென்னிந்திய முஸ்லிம்களின் தொடர்பே இதற்கு வழி அமைத்தது.

### ஒற்றுமை குலையும்

தமிழைப் புறக்கணித்து மாகாணவாரியாக சிங்களமும் தமிழும் படிக்க நாம் எப்போது எத்தனிக்கிருேமோ அப்போதே எமது இலங்கை முஸ்லிம் சகோதரர்களிடம் தவிர்க்க முடியாத நிரந்தரமான வேற்றுமை—பிரிவு ஏற்படும். வட கிழக்கு மாகாணத்திலுள்ளவர்கள் தமிழையும் மற்றைய மாகணங்களிலுள்ளவர்கள் சிங்களத்தையும் போதனு மொழியாக்க முற்படும் போது பாஷாவாரியான பிரிவினை, பிளவு, வேற்றுமை தலைகாட்டாதா? இவ்வித வேற்றுமைகளை சில சுயநல அரசியல்வாதிகள் தமது அரசியல் நலன்களுக்காக பயன்படுத்திக் கொள்வார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

தமக்குள்ளே மாகாணவாரியாகப்பிளவுபட்ட முஸ்லிம்கள் இன்றையைப்போல் ஒரு அரசியல் சக்தியாக விளங்க முடியுமா? நெருக்கடியான காலங்களில் பிளவுபட்ட முஸ்லிம்களின் குரல் அதிகார வர்க்கத்தினருக்கு எட்டாததாக இருக்கும். இவ்விதம் பாஷாவாரியாகப் பிரிவுண்டு பிளவுபட்ட முஸ்லிம்கள் பிரச்சினைக் காலங்களில் தமக்குத் தாமே உதவி செய்துகொள்ள முடியாமலும் தம்வால் ஏனைய மாகாணங்களில் வாழும் முஸ்லிம்களுக்கு உதவ முடியாமலும் ஒரு திண்டாட்ட நிலைக்குள்ளாக்கப்படுவார்கள்.

நாம் வீட்டில் தமிழில் பேசுவதையும் பாடசாலையில் தமிழில் போதிப்பதையும் புறக்கணித்தால் எவ்வித சந்தேகமுமின்றிநாம் சிங்களச்சமூகத்தினுள்சேர்க்கப்பட்டுவிடுவோம். நாம் சிங்கள சமூகததில் ஒரு புது வகுப்பாராக (அதாவது கொய்கம வகுப்பார், ஹலாகம வகுப்பார் போன்று முஸ்லிம்கள் 'யோனக வகுப்பாராக') விளங்க நேரிடும். இவ்விதமாக பெரும்பான்மை சமூகத்தினுள் சிறுபான்மையோர் மறைந்த நிகழ்ச்சிகள் சரித்திரத்தில் சான்ருக காணக்கிடக்கின்றன.

பல நூற்ருண்டுகளுக்கு முன்பதாக தென்னிந்திய சாலிப் பட்டனத்திலிருந்து தொழில்—வியாபார நோக்கங்கள் கருதி வந்து குடியேறிய மக்கள் இலங்கையின் தென்மேல் கரையோரத்தில் ஒரு சமூகமாக வாழ்ந்தனர். அவர்களது தாய்மொழி தமிழாக இருந்தது. மதத்தால் அவர்கள் இந்துக்கள். பாஷையை மாற்றி சிங்களம் பேசத் தொடங்கிய அவர்கள், காலவரையில் மதமும் மாறி தனித்துவம் அழிந்து பெரும்பான்மை 'சமூகத்தில்' 'ஹலாகம' வகுப்பினராக இணைந்துவிட்டனர். இன்று அவர்கள் பௌத்தர்களாகவும், சிங்களவர்களாகவும் இருக்கின்றனர்.

நாங்கள் சிங்களத்தைத் தாய்மொழியாகவோ, போதனுமொழியாகவோ கொள்வதால் எமது மூதாதையரின் தூரதிருஷ்டியை, கொள்கைகளைக் காட்டிக் கொடுப்பதோடு அல்லாமல், இலங்கையில் எமது மதம் கலாசாரம் முதலியவற்றை பேணக்கூடிய ஒரே சந்தர்ப்பத்தையும் இழந்து விடுகிறோம். அதனுல் எமது மூதாதையர் எம்மேல் பணித்துச் சென்ற கடமையை மறந்து அவர்களது நம்பிக்கைக்குத் துரோகம் செய்தவர்களாவோம்.

### ஆபத்து

முஸ்லிம் பாடசாலைகளில் சிங்களம் போதனு மொழியாக்கப்பட்டவுடனே சிங்கள மாணவர் பெருந்தொகையாக எமது பாடசாலைகளில் முற்றுகையிடுவர். ஏனென்ருல் தற்பொழுது ஏறக்குறைய ஆறு இலட்சம் சிங்கள மாணவர்கள் கல்வி வசதியின்றி வீதியில் அலைகின்றனர். எமது பள்ளிக்கூடங்களில் சிங்களம் போதனு மொழியாக்கப்படுவது இவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். இவ்வித ஆபத்துகளிலிருந்து எமது கல்விக்கூடங்களை காப்பாற்றிக்கொள்ள தமிழையே போதனுமொழியாகக் கொள்ளவேண்டும். முஸ்லிம் கொடைவள்ளல் ஒருவரின் தயாள சிந்தையினுல் கண்டி நகர மத்தியில் கண்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி கட்டப்பட்டது. ஆரம்ப நாட்கள் முதல் இப் பாடசாலையின் போதனு மொழி தமிழாகவும், சிங்களம், ஆங்கிலம் இரண்டும் இரண்டாவது பாஷையாகவும் படிப்பிக்கப்பட்டன. 1956-ல் சிங்களம் அரசகரும மொழியாகப் பிரகடனப் படுத்தப்பட்டவுடனே கல்லூரி பரிபாலன சபை முஸ்லிம் பிள்ளைகளுக்கு சிங்களம் மூலம் கல்வி போதிக்கும் நோக்கத்தோடு அக் கல்லூரியில் சிங்களத்தைப் போதனு மொழியாக அறிமுகப்படுத்தினர். காலகெதியில் சிங்கள மாணவர்கள் தொகையும் அதிகரித்து. சிங்கள மாணவர்கள் தொகை பெரும்பான்மையாயிற்று. முஸ்லிம் வள்ளல் ஒருவரின் நன்கொடையின் சின்னம், பள்ளித்தோட்டத்தில் முஸ்லிம்களுக்காக தாபிக்கப்பட்ட கல்லூரி, இன்று சிங்கள மாணவர்களுக்கு போதிக்கும் கூடமாகவும், சிங்கள ஆசிரியர் பலருக்கும், அதிபர் ஒருவருக்கும் தொழில் அளிக்கும் தாபனமாகவும் மாறியுள்ளது.

### கொழும்பில்

அழுத்காமம், கம்பளை ஆகிய இடங்களிலுள்ள முஸ்

(13-ம் பக்கம் பார்க்க)

## சங்கப் பலகை

### பூதத் தம்பி

ஆசிரியர்: த. சண்முகசுந்தரம்.

வெளியீடு: வித்துவான் கணேசையர் தமிழ்சங்கம், மாவிட்டபுரம்.

விலை ரூ. 1-00.

பழைமை இலக்கியத்திலென்ருல் என்ன, புதுமை இலக்கியத்திலென்ருல் என்ன, ஏனைய இலக்கிய வடிவங்கள் வளர்ந்திருக்கும் நிலைக்கு நாடக இலக்கியம் தமிழ் மொழியில் வளரவில்லை. ஆங்காங்கே தோன்றிய நாடகங்களும் இலக்கிய நிலையை எட்டிப் பிடிக்கத் தவறிவிட்டன.

பெரும்பாலும் நாடகம் என்ருல் அது நடிப்பதற்குரிய ஒன்று என்ற எண்ணமே விரவிநிற்கிறது. நாடகம் நடிப்பதற்கு மட்டுமல்ல படிப்பதற்கும் உரியது என்பதை ஏனே நமது ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் உணர மறுக்கிருர்கள். இந்நிலை நீடிப்பதாலேயே நாடகங்கள் இலக்கியத் தரத்தை எட்டிப் பிடிக்கத் தவறிவிடுகின்றன. வரலாற்று நிகழ்ச்சிகளையோ அல்லது பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து சில அம்சங்களையோ நாடகமாக்கும் பொழுதும் இந்நிலையே விரிந்து காணப்படுகிறது. ஆனுல் திரு. சண்முகசுந்தரம் எழுதிய பூதத்தம்பி என்னும் வரலாற்று நாடகம் நடிப்பதற்கு மட்டுமல்ல படித்துச் சுவைப்பதற்கும் உரிய ஒன்ருக அமைந்துள்ளது.

நாடகத்தின் கதை நாடறிந்தது. சில நிகழ்ச்சிகளை வரலாற்றுக்குப் புறம்பாக மாற்றம் செய்த பொழுதும் அம் மாற்றங்கள் கதையின் போக்கில் அதிகதிருப்பத்தை ஏற்படுத்தவில்லை. அம்மாற்றங்கள் பாத்திரங்களின் குணவியல்புகளை முழுமை பெறச் செய்துள்ளது.

நாடகத்தின் [illegible] நாயகனுக விருக்கும் பூதத்தம்பி நீதிமான்; பக்திமான்; தமிழ் அறிவும் மொழிப்பற்றும் மிக்கவர் என்பதும், அவரின் மனைவி அழகவல்லி அழகு மிக்கவள்; பேராசை பிடித்தவள் என்பதும்—அந்திராசி கோழை; பதவியாசை மிக்கவன்; காமுகன் என்பதும் பேச்சுக்களின் மூலம் நல்ல முறையில் எடுத்துக்காட்டப்படுகின்றன. [illegible] பாத்திரங்களின் [illegible] அதே போன்று [illegible] பேச்சுக்

(13-ம் பக்கம் பார்க்க)


முன்பை விட இன்னும் அதிக சக்தி வாய்ந்தது!



அதை ஒழியுங்கள்!

ப்ளெக் ப்ளேக்

பலஇயக்க கிருமிநாசினி உங்கள் குடும்ப சுகாதாரத்தைப் பாதுகாப்பு தோடு நோய் பரப்பும் விஷப் பூச்சிகளை உடனடியாக அழித்து விடுகிறது.

புதியதும் அதிக சக்தி வாய்ந்த மருந்து வகைகளையும் கொண்ட, பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" மூன்று வகைகளில் இயங்கக் கூடிய முதலாவது கிருமி நாசினியாகும்.

1. நேரடித்தாக்குதல் ஈக்கள், நுளம்புகள், கரப்பான், தெள்ளு, மூட்டைப் பூச்சிகள் போன்றவைகளை உடனடியாக அழித்து விடுகிறது.
2. பறந்து தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட பின் புகை போன்ற ஆவியாக மாறி, பல பகுதிகளுக்கும் பரவி மறைந்திருக்கும் கிருமிகளையும் அழித்து விடுகிறது.
3. தங்கித் தாக்குதல் "ப்ளெக் ப்ளேக்" பல இயக்க கிருமி நாசினி தெளிக்கப்பட்ட இடங்களில் எல்லாம் கண்ணுக்குத் தெரியாத, ஆனுல் கொல்லும் சக்தி வாய்ந்த ஒரு வகை மெல்லிய படலமாக தங்கியிருந்து அதனுடன் சந்திக்கும் சகல பறக்கும் பூச்சிகளையும், ஊர்ந்து செல்லும கிருமிகளையும் அழித்து விடுகிறது.




டிடிவிபியுடன் (DDVP) கூடிய பல இயக்க "ப்ளெக் ப்ளேக்" கிரும் நாசினியை வாங்கி ஊர்ந்து, பறந்து செல்லும் கிருமிகளை அழித்து விடுங்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஊதாரி பெற்ருேருக்கு வாய்த்த உத்தமியான பெண்

அப்பாவும் அம்மாவும் படாடோப வாழ்க்கையில் ஓரளவு பற்றுக் கொண்டவர்கள். அப்பாவுக்குப் பணத்தைத் தண்ணீர் இறைப்பது போன்று அள்ளி வழங்குவதில் அவா. அம்மாவுக்கோ ஆயிரம் புடவைகள் ஆனாலும் அத்தனையையும் உடைமையாக்குவதிலேயே பிரியம். இத்தகைய தம்பதிகளுக்கு வாய்த்த மகளோ முற்றிலும் மாறுபட்டவள். பெற்ருரின் உதவாத செலவுகளுக்கு மகள் கடிவாளமிட ஆரம்பித்து விட்டாள்.



மாதர்கள் சங்கம் ஒன்றுக்கு 500 ரூபாய் நன்கொடை வழங்குவதாகத் தகப்பஞர் வாக்குறுதி அளித்திருந்தார். தாயார் ஒரு பட்டுப்புடவையை வாங்கிவிட்டு ரூ. 100 கொடுக்க முடியாது திண்டாடிஞர். பெட்டிச் சாவிக்கொத்துடன் திரியும் மகளிடம் தங்கள் தேவையை எப்படிக் கூறுவது என்பதைத் தெரியாமல் தவித்தனர்.

இறுதியாக பல வருடங்களுக்கு முன்னர் ஆயிரம் ரூபாய் கடன்பட்டிருந்ததாகவும், அதை எவ்வகையிலும் அடைக்க வேண்டும் என்றும் மகளிடம் பொய் கூறினர். குறுக்கு விசாரணை செய்து குட்டை வெளிப்படுத்திய மகளிடம் இருவரும் திண்டாடித் தவிக்கும் வேளையில் 'கட்' என்று சப்தம் கொடுத்தார் டைரக்டர்.

முக்தா பிலிம்ஸ் தயாரிக்கும் 'பூஜைக்கு வந்த மலர்' என்ற படத்தில் சகஸ்ரநாமம் தகப்பஞகவும், சந்தியா தாயாகவும், சாவித்திரி மகளாகவும் தோன்றும் மேற்படி கட்டங்கள் படமாக்கப்பட்டன.

ஜெமினி கணேசன் பிரதம பாகத்தில் தோன்றும்



இப்படத்தில் முத்துராமன், நாகேஷ், மணிமாலா, சித்திராதேவி, மஞேரமா முதலியோர் நடிக்கின்றனர் சினிவாசன்தான் இப்படத்தின் இயக்குநர்.

# சிவசக்தி கலை அரங்கின் முத்தமிழ் கலை விழா

சிவசக்தி கலை அரங்கு அளிக்கும் முத்தமிழ் கலை விழா பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் மே மாதம் 8,9,10ம் திகதிகளில் நடைபெறுகிறது. திரு. சி. ரங்கநாதன், திரு. கே. சி. தங்கராசா. திரு. கணேசராசா ஆகியோர் முறையே ஒவ்வொரு நாள் நிகழ்ச்சிக்கும் தலைமை தாங்குகின்றனர்.

8ம்திகதி வெள்ளிக்கிழமை பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் 'தமிழ் இலக்கியத்தில் சிறந்து நிற்பது காதலா? வீரமா?' என்னும் பொருளில் பட்டி மன்றம் இடம்பெறுகிறது. காதலுக்கு திரு. செ. இராசதுரையும் (பா. உ.) வீரத்துக்கு திரு. அ. அமிர்தலிங்கமும் (பா. உ.) ஆரம்ப உரையாற்றுகிருர்கள்.

நாதஸ்வரம், இன்னிசை நிகழ்ச்சிகளுடன் 'பெட்டிப் பாம்பு' நாடகமும் இடம் பெறுகிறது.

அடுத்த நாள் சனியன்று தாளவாத்தியக் கச்சேரி, வாத்திய இசை, நடனம் முதலிய நிகழ்ச்சிகளுடன் 'பொருத்தமில்லை' என்ற நாடகமும் நடைபெறுகிறது.

கடைசி நாளன்று வாத்திய இசை, பரதநாட்டியம், மெல்லிசை அரங்கு முதலியவற்றுடன் 'நட்டசுடின்றி இளைப்பாறும் இயமன்' என்ற நகைச்சுவை நாடகமும் நடைபெறுகிறது.

இந் நிகழ்ச்சிகள் அனைத்தையும் திரு. ஆர். ஜெகசோதி தயாரித்தளிக்கிருர்.

## திருகோணமலையில் துரோகி

அண்மையில் வந்தாறுமூலையில் மேடையேற்றப்பட்ட 'நடமாடி' எழுதிய 'துரோகி' என்னும் நாடகத்தை விண்ணெளி மன்றத்தினர் எதிர்வரும் 30-5-64ல் திருகோணமலையில் "சிலம்பு ஒலியும்" சிறு கதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு நிதிக்சாக மேடையேற்றவிருக்கின்றனர்.

பெண்களே பெரும்பாலும் நடிக்கும் இந்நாடகத்தைத் தயாரித்தளிப்பவர் செல்வி. வி. விஜயலட்சுமி.

—

## நாயகம் செல்கிருர்

மலையகத் தொழிலாளர்களிடம் நன் மதிப்புப் பெற்ற தலைவராக விருந்து மறைந்த கே. கே. ஜி. எஸ். நாயரின் மகஞன திரு. எஸ். எஸ். சுரேந்திர மோகன் தமது குடும்பத்தாருடன் தமிழகம் செல்கிருர். சினிமாத் துறையில் ஈடுபடுவதே இவருடைய வருங்கால த் திட்டம் என்று தெரிவித்துள்ளார். இவர் இலங்கை தயாரான 'தோட்டக்காரி' யில் உதவி ஒளிப்பதிவாளராகக் கடமையாற்றியுள்ளார்.

——

## நாடக மன்றம்

மக்கள் தன்னை நாவலர் நாடக மன்ற 4வது ஆண்டுக்கான நிர்வாகிகள் பின்வருமாறு:-

தலைவர்: திரு. கே.பி. வேல்சாமி, செயலாளர்: திரு. ரி. பி. வெற்றிவேல், பொருளாளர்: திரு. பி. கந்தசாமி, நிர்வாகக் குழுத் தலைவர்: திரு. ஏ. பி. வீரப்பா மற்றும் திரு. ஏ. வி. நடராசா, திரு. இரா. பொன்னையா, திரு. ரி. வி. சின்னத்தம்பி, திரு. வி. ஆறுமுகம், திரு. தருமராசா ஆகியோர் நிர்வாகக் குழுவில் இடம் பெறுகின்றனர்.

# வட்டம் விளைவிக்கும் விஷமம்

## எம். ஜி. ஆர்-சிவாஜிக்கிடையில் பத்திரிகையாளர் 'ஸ்டண்ட்'

சமமான பெயரும், புகழும், பொருளும் உடைய இரு கலைஞர்களான புரட்சிநடிகரையும், நடிகர் திலகத்தையும் சுற்றி இரு வட்டங்கள் உண்டாகிவிடுகின்றன. இவ்வட்டங்களின் வம்பால் விளையும் வினையும், அந்நிலையில் சில பத்திரிகைகள் பண்ணும் விஷமமும் சேர்ந்து பெரும் போரையே உருவாக்கி விடுகிறது

பல பிரபல்யம் வாய்ந்த திரைப்படங்களைத் தயாரித்தளித்த நிறுவனம் ஒன்று புகழ்பெற்ற நாடகத்தை திரைப்படமாக்கமுனைந்தது. 'பராசக்தி'யை முடித்து விட்டு பெயருக்கும் புகழுக்கும் இலக்காஞலும் பொருளாதாரம் உயர்ச்சி பெருதிருந்த சிவாஜிக்கு அப்படத்தில் நடிக்க அழைப்புக் கிடைத்தது. அதே நிறுவனம் தயாரித்து வெற்றிகண்ட பல படங்களில் பிரதான பாகத்தில் தோன்றிய எம். ஜி. ஆரையோ அல்லது கே. ஆர். ராமசாமியையோ அப்படத்தில் நடிக்கவைக்க வேண்டுமென்று அந் நிறுவனத்தின் பங்குதாரர் வற்புறுத்திஞராம். பங்குதாரர்களுக்குள் மோதல் ஏற்பட்டு சுமுகமாக முடிவு ஏற்படப் போதும் போதுமென்ருகி விட்டது.

நிலைமையை உணர்ந்த எம். ஜி. ஆர். முதலாளிகளைக் கண்டு சிவாஜியையே அப்படத்தில் நடிக்கவைக்க வேண்டுமென்று கூறிஞராம். சிவாஜி அப்படத்தில் தோன்றி மேலும்புகழடைந்தார்.

சமமான பெயரும் புகழும் பொருளும் பெறும் இருவருக்கிடையில் பற்றும் பாசமும் ஒற்றுமையும் இருக்கவே செய்தன. ஆஞல்இந்த ஒருமைப்பாடை தகர்க்கஒரு கூட்டம் முண்டியடித்துக் கொண்டு முன்னேற ஆரம்பித்தது. புரட்சி நடிகரும் சிவாஜியும் சமமான பலத்துடன் வாழ்வதைக்கண்டு மேற்படி கூட்டம் பொருமியது. சிண்டு முடியும் வேலையை ஆரம்பித்து வைத்தது.

இருவரையும் சுற்றிக் கொண்டு ஒரு குழு வளர ஆரம்பித்தது. எம். ஜி. ஆரின் தயவைப் பெறுவதற்காக சிவாஜியைப்பற்றி எம். ஜி. ஆரிடம் இல்லாதது பொல்லாதது அனைத்தையும் பொரிந்து கொட்டுவது இதன் வேலை. இதே ரீதியில் சிவாஜியின் தயவை நாடி இன்ஞெரு கூட்டம் சதா புரட்சி நடிகரைப்பற்றி பொய்யையும் புஞகையும் பேசிவந்தது.

மனவளமும், பணவளமும், பண்புச் செறிவும் வள்ளல் தன்மையும் கொண்ட மேலோர்கள் தான் இருவரும். ஆஞல் அவர்களும் மனிதர்கள்தானே! அவர்களை அணுகும் கூட்டம் சதா ஒருவரையிட்டு ஏதாவது கூறும்போது வாளாவிருக்க முடியுமா? தப்பித் தவறி இருவரது வாயிலிருந்தும் சில கருத்துக்கள் வெடித்து விடும்.

ஒன்றுமில்லாமலே, 'ஆஹா......ஊகூ.. ...' என்று வம்பளக்கும் பத்திரிகைகள் மலிந்துள்ள இன்றைய உலகத்துக்கு இப்படி ஒரு 'சான்ஸ்' கிடைத்துவிட்டால் கேட்பானேன். வாய் தவறி ஒரு நடிகர் கூறிய வார்த்தை, விசித்திரமான வியாக்கியானமும் விளக்கமும் கொடுக்கப்பட்டு முன் பக்கத்து முதல் செய்தியாகி விடுவதுடன், இரசிகப் பிரமுகர்கள்மத்தியில் 'தாணி'ப் போரையே உருவாக்கி விடும்.

(தொடரும்)






சிலோன் தியேட்டர்ஸ் திரைகளின் மூலம் பல்லாயிரக் கணக்கான உள்ளங்களைக் கவர்ந்து வரும் 'குங்குமம்' தமிழ் படத்தில் சிவாஜி இப்படிக் காட்சி அளிக்கிருர்.

# நாடகப் போட்டி

திங்கட்கிழமையுடன் போட்டி முடிவடைகிறது. கடைசிச் சந்தர்ப்பமளிக்கும் பொருட்டு இம்முறை மட்டும் விண்ணப்பக் கட்டம் பிரசுரித்துள்ளோம். திங்கட்கிழமை மாலைக்கு பிந்தி வரும் விடைகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

மறு அறிவித்தல்கள் அடுத்த வாரம் வெளிவரும்.

## நாடகப் போட்டி

1963-ம் ஆண்டில்..............................................
(ஊரின் பெயர்)

நடைபெற்ற தமிழ் நாடகங்களில்

சிறந்த நாடகம்..............................................

சிறந்த நடிகர் ..............................................

சிறந்த நடிகை..............................................

சிறந்த நகைச்சுவையாளர்..............................

சிறந்த கதாசிரியர்.........................................

சிறந்த இயக்குநர் (டைரக்டர்)..........................

சிறந்த தயாரிப்பாளர்......................................

சிறந்த வெளியீட்டாளர்...................................

ஒப்பம்:........................

முகவரி.................................
.................................
.................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவரை கொண்டாடுக

## தமிழ் மறைக் கழக தலைவர் வேண்டுகோள்

தமிழ்மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் விடுக்கும் வேண்டுகோள்:

சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாகத் தமிழ் மறைக் கழகம் திருவள்ளுவர் திருநாளைத் தமிழ் மக்கள் வாழும் நாடு நகரங்கள் யாவற்றிலும் கொண்டாடச் செய்து வந்துளது. திருக்குறளின் அருமை பெருமைகளை நன்கு அறிந்த பெருமக்கள் யாவரும் சாதி சமய வேறுபாடுகளின்றி, அரசியற் கட்சிப் பிளவுகளைப் பொருட்படுத்தாமலும் ஒன்று பட்டு ஒரு நாளிலே திருவள்ளுவரைக் கொண்டாடி வருகின்றனர்.

### திருவள்ளுவர் திருநாள் — 26-5-64

இந்த ஆண்டுத் திருவள்ளுவர் திருநாள் 26-5-64 செவ்வாய்க்கிழமையாகும். இந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடுமாறு உலகமெங்கும் உள்ள தமிழ்ப் பெருமக்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம். திருவள்ளுவர் திருநாள் தமிழினத்தின் பொதுத் திருநாளாக ஒவ்வொருவர் வீட்டிலுங் கொண்டாடப்படல் வேண்டும். திருக்குறளும், திருவள்ளுவர் படமும் ஒவ்வொரு தமிழர் வீட்டையும் அணி செய்தல் வேண்டும்.

தமிழ் நாட்டரசினர் சென்னைச் சட்டமன்றத்தைத் திருவள்ளுவர் படத்தால் அண்மையில் அணியுறுத்தியுள்ளனர். எல்லாப் பொது நிலையங்களும், தமிழ் மன்றங்களும் திருவள்ளுவர் படத்தைத் தங்களுடைய மண்டபங்களில் வைத்துப் போற்றல் வேண்டும்.

காளிதாசர், தாகூர், பாரதியார் முதலிய புலவர் பெருமக்களின் திருநாள்களைக்கொண்டாடுதல் போலத் திருவள்ளுவரின் திருநாளையுங் கொண்டாடுமாறு தமிழ் நாட்டு அரசுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

முன்னைய ஆண்டுகளிற்போல இவ்வாண்டும் 26-5-64-ல் சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புமாறு எட்டு வானொலி நிலையங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

### திருவள்ளுவர் 2000 ஆண்டு:

திருவள்ளுவர் தொடராண்டை இப்பொழுது பலர் வழங்குகிறார்கள். எல்லாத் தமிழர்களும் வழங்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறோம். சென்ற சில ஆண்டுகளாக நாம் நினைவுறுத்திவரும் திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு நிறைவு விழாவை 1969-ல் மிகச் சிறப்பாகக் கொண்டாடுதற்கு இப்பொழுதே பற்பல திட்டங்களை வகுத்து முயலுமாறு மீண்டும் வலியுறுத்த விழைகிறோம்.

தமிழ் மறைக் கழகத்தின் 12-வது திருக்குறள் மாநாட்டை சிறப்புற நடத்துதற்கு கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் பெரு முயற்சி செய்து வருகின்றனர். மாநாடு மே மாதம் 24, 25, 26-ம் நாட்களாகிய ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில் கரணவாய் உப-அஞ்சல் நிலையத்துக் கருகாமையில் அமைக்கப்படும் பூதன் தேவனார் அரங்கில் நடைபெறும்.

தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களும் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்களும், சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களும் தலைமை தாங்குவாரர்கள்.

#### கருத்தரங்கு

வள்ளுவர் வைதிக நெறியைத் தழுவியவரா? தமிழ் நெறியைத் தழுவியவரா? என்பது பற்றி பத்து அறிஞர்கள் சொற்போர் நிகழ்த்துவர். முதலியார் சின்னத்தம்பி, வித்துவான் கார்த்திகேசு, திரு. புதுமைலோலன், செல்வி சற்சொருபவதி நாதன், திரு. நாவேந்தன், திரு. ஈழவேந்தன், திரு. இ. சங்கர், திருமதி சத்தியதேவி துரைசிங்கம் முதலானோர் மூன்றும் நாள் நடைபெறும் இக்கருத்தரங்கில் பங்கு பற்றுவர்.

#### கவியரங்கு

'வள்ளுவர் போற்றும் பண்புகள்' என்பது கவியரங்கின் பொருளாகும். இரண்டாம் நாள் நடைபெறும இக் கவியரங்கில் பங்கு கொள்ள திரு. இ. அம்பிகைபாகன், திரு. தில்லைச்சிவன், திரு. இ. நாகராசன், திரு. மு. செல்லையா, திரு. செ. கதிரேசபிள்ளை, திரு. யாழ்ப்பாணன், திரு. க. மாணிக்கம் முதலானோர் இசைந்துள்ளனர்.

#### உரை அரங்கு

பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. ச. தனஞ்சயராசசிங்கம் எம். ஏ., எம். லிற்., திரு. நீ. மே. யோ. வேதநாயகம், பண்டிதர் செ. துரைசிங்கம், பொன் கிருஷ்ணபிள்ளை முதலானோர் உரைவிருந்து நல்குவர்.

இவற்றைவிட இசை நிகழ்ச்சிகளும் நாடக நடன நிகழ்ச்சிகளும் மாநாட்டில் இடம் பெறும்.

# இன்றைய பிரதிநிதிகள்....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

த்ததன் விளைவாகத் தோன்றிய கட்சிதான் தமிழரசுக் கட்சி.

அப்படிப்பட்ட ஒரு கட்சிக்கு மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களை அணுக உரிமையில்லை என்றால், அவர்களைப்பற்றி பேச உரிமையில்லையென்றால் வேறு யாருக்கு அந்த யோக்கியதை இருக்கிறதென்று கேட்க விரும்புகிறேன்.

#### தொண்டமான் வந்ததெப்படி?

தமிழரசுக்கட்சி எந்தக் காலத்திலுமே மலைநாட்டு தமிழ் மக்களது பிரச்சினைகளை மறந்தது கிடையாது. 1960 தேர்தலில் கூட, சிறிலங்கா சுதந்திரக்கட்சியோடு நாம்பேச்சுவார்த்தைநடாத்தியபொழுதுமலையகத்தமிழ் மக்களது குரல் பாராளுமன்றத்தில் ஒலிக்க,அவர்களுக்கு பிரதிநிதித்துவம் அவசியம் என்று வற்புறுத்தினோம். அதன் பலன்தான் இன்று திருவாளர் தொண்டமான் நியமனஉறுப்பினராகபாராளுமன்றத்தில் வீற்றிருக்கிறார்.

#### இதுவா வகுப்புவாதம்?

தமிழ் தொழிலாளர்களது உரிமைகளுக்கு தமிழ்த் தலைவர்கள் தலைமைதாங்கவேண்டுமென்று நாம் கூறினால் அது வகுப்புவாதம் என்று மார்க்சிசக் கட்சிகள் அலறுகின்றன.

ஆனால் ருஷியா-சீன நாடுகளை எடுத்துக்கொண்டால், ருஷ்யாவுக்கு ருஷ்ய நாட்டவர்களது தலைமையும்-சீனவுக்கு சீனத் தலைமையும் தான் இருக்கிறது. இரண்டும் பொதுவுடமை நாடுகள் என்ற காரணத்தால் ருஷ்ய நாடு சீனத் தலைவர்களது தலைமையையும், சீனம் ருஷ்யத் தலைமையையும் ஏற்றுக் கொண்டுவிடவில்லை. அல்லது எல்லைக்கோட்டைத் தானும் அழித்துவிடவில்லை.

கூட்டத்தில்- திருவாளர்கள்: க. துரைரத்தினம், பா. உ., க. சிவானந்தசுந்தரம், இ. நாகேந்திரம், ரெ. ம. ராமையா, வே. தங்கவேல், வே. குமரகுரு, மு. எல்லாளன், ச. சிங்கராசா, க. அந்தோனிப்பிள்ளை, க. துரைராசசிங்கம் முதலியோரும் பேசினார்கள்.

அட்டன் நகரத்தில் கழ [illegible] யம் உதவியிருக்கும்.

# குமாரி ஏ. ஜெயகௌரி



**அறிமுகப்படுத்துகிறோம்**

(19)

மருதானை கப்பித்தாவத்தையிலுள்ள தொண்டர்வித்தியாலயத்தில் தமிழும் ஆங்கிலமும் படித்தவர் குமாரி ஜெயகௌரி. பள்ளிப்பருவத்திலேயே மேடைகளில் தோன்றி நடித்து பெரும் புகழீட்டியவர். எவரிடமும் கலகலப்பாகப் பேசவும், களங்கமற்றுப் பழகவும் பழகிக்கொண்டுள்ளார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக கொழும்பிலும் வெளியூர்களிலும் பல நாடகங்களில் சிறப்பாக நடித்துள்ளார்.

திரு. ஜோன் சுவாமிதாஸ் அவர்கள்தான் இவரை நாடகமேடைக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். இவருடைய முதல் மேடை நாடகம் 'நூதன வஞ்சம்' என்ற நாடகமாகும். 'தாய்நாட்டின் எல்லையிலே' என்ற நாடகமே இவருக்கு பெரும் புகழை ஈட்டிக்கொடுத்தது.

கௌரி கலைமன்றத்தின் உரிமையாளரான குமாரி ஜெயகௌரி இப்பொழுது 'யுகத்திருப்பம்', 'தெய்வத்தின் நீதி' ஆகிய இரு நாடகங்களைத் தயாரித்து வருகிறார். இவருக்கு ஓரளவு பாடத் தெரியும். சமூகச் சீர்திருத்த நாடகங்களையே பெரிதும்விரும்பும் குமாரி ஜெயகௌரி இரசிகர்களுக்குப் பிடித்தமான எந்தப் பாகத்திலும் தோன்றவும் ஆயத்தமுடையவர்.

கலைப் போர்வையில் நடமாடும் கலைக் கொலைஞர்களை ஒழிக்கவேண்டும் என்பது இவருடைய பேராசை.

ஃ ஃ ஃ

கலைத்துறையில் ஈடுபட்டு பெரும் புகழீட்டியுள்ள குமாரி ஜெயகௌரியைப் பின்பற்றுபவர் குமாரி ரத்னபிரபா. அக்காவைப் போன்ற இனிய சுபாவமுடையவராயினும் பெரும்பாலும் 'வில்லி' யாகவே மேடைகளில் தோன்றுவார். அதேபாகத்தையே பெரிதும்விரும்புகிறார். மேடையில் மட்டுமல்ல, வீட்டிலும் சண்டி என்ற பெயர்தான்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே இவர் மேடையில் தோன்றி வருகிறார். இவருடைய முதல் நாடகம் 'சந்தேகம்.' பெயரிடப்படாத இரு நாடகங்களில் இப்பொழுது நடித்துவருகிறார்.

முழுமைபெற்ற வில்லி வேடத்துக்காக குமாரிரத்னபிரபா சிலம்பம், வாள் வீச்சு, கத்திச்சண்டை முதலியவற்றைப் பயின்றுவருகிறார்.

மேடையில் நடிப்பதோடும் வீட்டிலுள்ள மூத்த தமக்கையாரின் குழந்தைகளுடன் விளையாடுவதோடும், துப்பறியும்கதைகளைப் படிப்பதோடும் நின்றுவிடாமல் நல்ல முறையில் சமையல் செய்யவும் கற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கையிலுள்ள கலைஞர்கள் பெரும்பாலும் பொறாமைக் காய்ச்சலால் தங்களையே அழித்து வருகிறார்கள். இதனாலேயே ஈழத்து நாடகக் கலை வளர்ச்சி குன்றி விட்டது என்று கருத்துத் தெரிவித்தார் குமாரி ரத்னபிரபா.

குமாரி ஜெயகௌரியும் குமாரி ரத்ன பிரபாவும் வளர்ந்து வரும் கலைஞர்கள். மென்மேலும் கலைத் துறையில் வளர்ந்தோங்க வேண்டும்.

விபரங்கள் சேகரித்தவர் :- வெற்றிவேந்தன்.



# குமாரி ஏ. ரத்னபிரபா

(20)

# முஸ்லிம் பாடசாலைகளும்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

லிம் பாடசாலைகளுக்கும் இக்கதியே ஏற்பட்டது.

கொழும்புப் பாடசாலைகளில் சிங்களம் போதனமொழியாக வேண்டுமென்ற பெற்றோரின் எண்ணம் இன்று அவர்களது கல்விக் கூடங்களுக்கு சொல்லும் தரமற்ற ஆபத்துகளை உண்டு பண்ணியுள்ளன. மருதானை முஸ்லிம் மகாவித்தியாலயம் சிங்கள மாணவர் முற்றுகைக்கு மிகவும் மோசமாக ஆளாகியுள்ளது. அப்பாடசாலைத் தோட்டத்தின் முற்பகுதியில் பாடசாலையின் முன் வாயிலை அடைத்துக்கொண்டு ஒரு அரச மரமும் நாட்டப்பட்டு ஒரு பிரார்த்தனை அறையொன்றையும் அமைத்து விட்டார்கள். பாடசாலைக்குச் செல்லும் தண்ணீர் குழாய் தடைசெய்யப்பட்டு பிரார்த்தனை அறை உபயோகங்களுக்காக பலாத்காரமாக மாற்றப்பட்டுள்ளது.

எமது பெற்றோர்கள் தமிழைப் புறக்கணித்து சிங்களத்தைப் போதனமொழியாகக் கொண்டால், அது தமது பிள்ளைகள் இஸ்லாமிய நம்பிக்கையை வேரூன்றச் செய்யும் சந்தர்ப்பத்தை வேரோடு குழிதோண்டிப் புதைக்கும் ஒரு செயலாகும். முஸ்லிம்கள் உலக ஆசாபாசங்களுக்காக, சுகங்களுக்காக மறுலோக வாழ்க்கையை புறக்கணிப்பவர் அல்லர். தமிழைப் போதனமொழியாகக் கொண்டு மதத்தையும் காத்து தொழிலும் பெறச் சந்தர்ப்பம் இருக்கும்பொழுது,நாம் ஏன் சிங்களத்தைப் போதனமொழியாகக் கொண்டுமதத்தை பலிகொடுக்கவேண்டும்.

# கல்வியறிவை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

னின் வெற்றி நம்மினத்தின் வெற்றியாகும் என்றும் நம்மிடையே வடக்குக், கிழக்கு மலையகம் என்ற பேதம் நீங்கி ஒருமைப்பாடு நம்மில் ஏற்பட வேண்டும் என்றும் கூறினார்.

மற்றும் பலரும் பேசிய பின் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இணைத் தலைவர்கள்: ஆர். துரைசாமி, எஸ். மாரிமுத்து, செயலாளர்: ஆறுமுகம் மேசன், துணைச் செயலாளர்: சவரிமுத்து, பொருளாளர்: அழகன் கங்காணி, செயற்குழு உறுப்பினர்கள்: எஸ். கருப்பையா, பி. வீரமலை, ஆர். ராமசாமி, கே. சுப்பையா, வி, கந்தையா, என். அன்னவி, வி. வடமலை.

# பூதத் தம்பி

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் மூலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

கற்பனைப் பாத்திரங்களான சபூரும், யேசனும் நாடகத்தின் முழுமைக்கு இன்றியமையாதன.

பாத்திரங்களின்பேச்சுவழக்குப் பற்றி ஆராயுமிடத்து இருதரப்பட்ட கருத்துக்களுக்கு இடமேற்படுகிறது. அபிரும், யேசன், சின்னொலாந்தேசு போன்ற பாத்திரங்கள் ஒல்லாந்தர்கள் என்பதை நாடகத்தைப் படிக்கின்றபோது உணரமுடியவில்லை. இதை நிலை நிறுத்த முற்பட்டிருந்தால் நாடகப் இலக்கியத் தரத்தை இழந்திருக்கும். இந்த இடத்தில் ஆசிரியர் நூலின் இலக்கியத் தரத்தைக் காப்பாற்றியது பாராட்டக் கூடியது.

நடிப்பதற்கென்றே நாடகம் எழுதப்பட்டுள்ளது. ஆனால் படிக்கும் பொழுதே காட்சிகள் கண்முன் நிற்கின்றன.

இத்தனை சிறப்புக்களும் உள்ள நாடகத்தில் சில குறைகள் இருக்கவே செய்கிறது. நாடகத்தின்நடுப்பகுதி வரை பூதத்தம்பி சிறந்த வீரனாகச் சித்தரிக்கப் படுகிறார். பிற்பகுதியிலோ பூதத் தம்பியின் பேச்சுக்கள் அவரைக் கோழையாக மாற்றிவிட்டாலும்; வீரனாக காட்டத் தவறிவிட்டது.

பண்டித மணி அவர்கள் கூறியது போல 'நெஞ்சை அள்ளும் நாடகம்' என்று கூறுவது சாலப்பொருந்தும்.

—தேமொழி

"மந்திர சக்தியை"
திருபிப்பதற்காக உங்கள் காரணம் எதுவானாலும் நிறைவேற்றித்தர முடியும். உங்கள் காரணத்தை விபரமாக எழுதி அனுப்பவும்.
கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்
பி. எம். திசாநாயக்க
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் தலைமை காரியாலயம்
கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எனது கிராமம்

## களுவாஞ்சிகுடி

[பரமானந்தன்]

மீன் பாடும் தேன் நாடான மட்டக்களப்பில் இருந்து சுமார் பதினுறு மைல்தொலைவில் இருக்கின்றது எங்கள் கிராமம். கலை வளமும், தொழில்வளமும்ஒருங்கே செறிந்து மிளிருகின்றது எங்கள் கிராமம். எங்கள் கிராமத்திற்குக் 'களுவாஞ்சிகுடி' என்னும் பெயர் வந்தது பற்றி மக்களிடையே பல சுவையான கதைகள் வழங்கி வருகின்றன.

கலை என்னும் ஆடவனும் வஞ்சி என்னும் மகளிரும் கலைநடம் புரிந்து--கவின் மிகு வனப்பூட்டி குடியாக வாழ்ந்து வந்ததினுல் கலைவஞ்சிகுடி என இருந்தது காலச்சூழலில் களுவாஞ்சிகுடியாக மருவிற்று எனச் சிலரும் களு என்னும் ஆணும் வஞ்சி என்னும் பெண்ணும் குடி குடியாக வாழ்ந்து வம்சம் தோற்றுவித்ததனுல் களுவாஞ்சிகுடி என்ருயிற்று எனச் சிலரும் கூறுகின்றனர்.

இங்கு வாழும் மக்களனை வரும் சுய முயற்சியினுல் முன்னேறியவர்களெனலாம். வீட்டுக்கு வீடு தோட்டமும் பயிர்வகைகளுமே காணப்படும். இதனுல் மக்கள் விவசாயத்தில் ஊக்கம் காட்டிப் பட்டினி என்ற அரக்கனின் கொடுமையினின்றும் விடுபட்டு விட்டனரெனலாம். இடையிடையே ஆசிரியர்களும், எழுதுவினைஞரும் இருக்கின்றனர்.

கிராமத்தின் முன்னேற்றம் கருதி கிராம முன்னேற்றச் சங்கம், சைவ மகாசபை, தொண்டர் சபை என்பன சிறப்பான சேவையாற்றி வருகின்றன. 'களுவாஞ்சிகுடி கவின்கலைமன்றம்' இளம் மாணவர்களின் ஆக்கத்திற்கு உறுதுணை புரிகின்றது. இன்னும் தபாற்கந்தோர், கிராமாதிகாரி அலுவலகம், பகிரங்கச் சந்தை, விவசாயக் கந்தோர், பெண்கள் பிரசவ ஆஸ்பத்திரி, ப. நோ. கூ. சங்கம், பட்டிருப்பு மா வித்தியாலயம் என்பன அமைந்து கிராம மக்களின் தேவைக்கு உதவி புரிந்தும் கிராமத்தின் முன்னேற்றத்திற்கு உதவி புரிந்தும்வருகின்றன.

விஷ்ணுகோவில், விநாயகர் கோவில், அம்மன் கோவில் உள்ளிட்ட ஆறு ஆலயங்கள் அமைந்து கிராமத்தின் சிறப்புக்கு வழி கோலுகின்றன. வைகாசி மாதத்தில் கண்ணகி தொடர்புடைய அம்மன் கோவிலில் படிக்கும் காவியம் மக்கள் மனதில் இடம்பெற்று விடுகின்றது. இவ்விழா மிக விமரிசையாக நடக்கும்.

மாதர் பணியில் 'மாதர் முன்னேற்றச் சங்கம்', இந்து மகளிர் மன்றம், மாதர் தும்பு நிலையம் என்பன அவர்கட்கு ஆக்கமளித்து வருகின்றன.

இன்னும் இரண்டுமாதத்தில் எங்கள் கிராமத்திற்குக் கிடைக்கும் மின்சார மூலம் கிராமம் சிறந்து விளங்கும் என்பதில் ஐயம் இல்லை.

# நாடும் ஏடும் போற்றும் ஆங்கில நாடக ஆசிரியர் வில்லியம் செகப்பிரியர்

—காவலூரர் க. சிவகாருண்யம் —

செகப்பிரியர் 1564ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி பிறந்தார். இவர் பிறந்த இடம் இங்கிலாந்திலுள்ள ஸ்ராட்போர்ட் நகரம் தான். இவரது தகப்பனுர் பெயர் யோண் செகப்பிரியர். செகப்பிரியர் வறுமையான குடும்பத்தில் மட்டும்பிறக்கவில்லை. ஒரு பணக்காரக் குடும்பத்தில் தான் பிறந்தார்.

இவர் லண்டனில் தங்கியிருந்தபோது பல நாடகங்களை எழுதினுர். இவருடைய நாடகங்களை ஆங்கில மக்கள் எல்லோரும் விரும்பிப் பார்த்தனர். செகப்பிரியர் நாடகங்களை எழுதியதோடல்லாமல் நடித்தும் காட்டினுர். இவரது நடிப்புத் திறமையைக் கண்ட மக்கள் இவரைப் பலவாறு புகழ்ந்தனர். இவர் கடல் போன்ற அறிவு உடையவராதலின் மொழி ஒரு புதிய வலிமையையும், புகழையும் அடைந்தது. இவர் தம் எண்ணத்தில் எழுந்தனவற்றையெல்லாம் எழுத்தில் வடித்து நாடகங்களாக்கினுர். இவ்வாங்கில நாடக ஆசிரியர் எழுதிய நாடகங்கள் 37. ஒவ்வொரு நாடகமும் முதன்மை பெற்றவை. குறிப்பாகக் கூறுமிடத்து ஆங்கில நாடகக் கலைக்கு அத்திவாரக் கல் இட்டவர் வில்லியம் செகப்பிரியரே. செகப்பிரியருடைய நாடகங்களையே இன்று ஆங்கில மக்கள் விரும்பிப் படிக்கின்ருர்கள். செகப்பிரியர் வாழ்வில் வறுமையென்பதே கிடையாது. எனவே இவர் ஆடம்பரமாக வாழ்க்கையை நடத்தினுர். ஆங்கில நாடகக் கலைக்கு இவர் செய்த நன்மைகள் அளப்பரியன.

பற்பல நாடகங்களை அக்காலத்து வழக்கத்தின்படி ஆங்கில மொழியில் மிகவும் இனிய எளிய முறையில் எழுதினுர். இதனுல் இவருடைய புகழ் இங்கிலாந்தில் மட்டுமல்ல அகிலம் முழுவதுமே பரவியது. இவருடைய கற்பனு சக்திவளர்ந்த இடம் லண்டன் நகரம். இங்கிருந்துதான் வில்லியம் செகப்பிரியர் நாடகங்களை எழுதி உலகிற்கு அளித்தார். தான் எழுதிய நாடகங்களை நடித்தும் காட்டினுர். அக்காலத்திலிருந்த ஆங்கில மக்கள் இவருடைய நாடகங்களைப் பார்த்தும் படித்தும் வந்தார்கள். இவருடைய நாடகங்கள் படிப்போர் மனதில்உற்சாகத்தையும் பார்ப்போர் மனதில் இன்பத்தையும் அளிப்பனவாக இருக்கின்றன. இவர் எழுதிய முதல் கவிதை வீனசும் அடோனிசம். இதையடுத்து ஆருவது கென்றி போன்ற நாடகங்களையும் எழுதினுர்.

### நாடகக் கலையும் சேவையும்

வில்லியம் செகப்பிரியர் ஒரு உலக மகாகவி, உலகம் போற்றும் உத்தமக் கவிஞர். இவருடைய ஆங்கில நாடகங்களினுல் ஆங்கில

### இறப்பு

வில்லியம் செகப்பிரியர் 1564ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி பிறந்து 1616ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் திகதி இறந்தார். இவர் பிறந்ததும் ஏப்ரல் மாதம் 23ம் திகதி தான் இறந்ததும் அதே மாதமும் அதே திகதியும் தான்.

### மகத்தான கொண்டாட்டம்

இம்மாதம் 23ம் திகதியுடன் செகப்பிரியரின் 400வது தின விழா கொண்டாடி முடிவடைந்தது. இவரின் நாடகங்களிலெல்லாம் பலவிதமான கொள்கைகள் அடங்கியிருக்கின்றபடியால் படிப்போர்களும் பார்ப்போர்களும் தங்கள் கொள்கைகளைத்தான் பின்பற்றுகின்ருர் என்று கருதுகின்றனர். இவரது தின விழா ஸ்ராட்போர்ட் நகரத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்தப் பெரிய உலக விழா உலகத்தில் பிறந்த எந்தப்பெரியமகான்களுக்கும் கிடைக்கவில்லை. ஆனுல் ஒரே ஒருவர் தான் பெற்ருர். அவர்தான் ஆங்கில நாடக ஆசிரியர் வில்லியம் செகப்பிரியர்.

# பிரிந்தா சென்ருர்?

—முதல்வனுர்—

கனியிடை ஏறிய சுளையை—முற்றல்
கழையின் சாற்றை விடவும்
இனியது உயிர்தமிழ் என்ருர்;—புலவர்
இன்றெமைப் பிரிந்தா சென்ருர்?

மனதிடை வாழும் பாக்கள்—இங்கு
வழங்கிய பாரதி தாசர்;
தனிநடை, நலன்தரு புதுமை—கொண்டு
தமிழுக் கழகிட நின்ருர்!

மறைந்தனர் என்றெரு சேதி—நாம்
மறந்தும் ஒப்புதல் ஏது?
உறைந்திடு வார்புவி மீது—தமிழ்
உளவரை என்றுநீ ஓது!

[பாரதிதாசன் மறைவை யொட்டி எழுதியது]

# புதுமைகள் பாரீர் பாரினிலே - (2)

(அன்ரனி பெர்னுண்டோ—கிரிலப்பனை)

## வருங்கால மாயக் கண்ணுடி!

நமது வீட்டின் வாசற் கதவு டொக்! டொக்! என்று தட்டப்படுகிறது. நாம் வீட்டின் மறு கோடியில் இருந்தாலும் வந்திருப்பவர் யாரென்பதை அறிவதற்கு உடனே வாசலை நோக்கி ஆவலுடன் ஓடுகின்ருேம். கதவைத் திறந்து பார்த்த பின்னர் தான் வந்தவர் யாரென அறிய முடிகிறது.

அமெரிக்காவில், நியூயோர்க் நகரில் வசிப்பவர்கள் இப்பொழுது வீட்டினுள் இருந்தவாறே வாசலில் வந்திருப்பவரைப் பார்க்க முடிகிறது. வீட்டினுள் சமையலறை, படுக்கையறை, மேல் மாடி அறைகள் ஒன்றையும் விடாமல் எல்லா அறைகளிலும் ஒவ்வொரு திரை பொருத்தப்பட்டிருக்கும். வாசலில் ஒருவர் வந்து மணியை அழுத்தியதும் வீட்டினுள் இருக்கும் திரைகளில் அவரது உருவம் தெரியும். வீட்டுக்காரர் வீட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் உடனே வந்திருப்பவர் யாரென்பதை அறிந்து கொள்கிருர்.

வந்திருப்பவர் அவரது நண்பராகவோ, அவருக்கு வேண்டியவராகவோ இருந்தால் உடனே அருகிலுள்ள பொத்தானை அமுக்குவார். அப்போது வாசற் கதவு மின்சாரத்தின் உதவியால் தாளுகவே திறந்து கொள்ளும். வந்தவர் உள்ளே வரவேண்டியதுதான்.

வாசலில் நிற்பவர் தனக்குப் பிடிக்காதவராய் இருந்தால் வீட்டுக்காரர் பேசாமல் இருந்துவிடலாம். வீட்டில் ஒருவரும் இல்லையென்று நினைத்து வந்தவர் திரும்பிப் போய்விடுவார்.

இந்தப் புதுமையான வேலைக்கு 'டெலிவிஷன்' பயன்படுத்தப்பட்டுள்ளது. வாசலில் பொருத்தப்பட்டுள்ள ஒரு 'டெலிவிஷன்' கண்தான் வாசலில் நிற்பவர்களின் உருவங்களைப் பதிவு செய்து வீட்டினுள் உள்ள திரைகளில் பிரதிபலிக்கிறது. ஆனுல் வாசலில் நிற்பவருக்கோ இந்த இரகசியங்கள் தெரியாது. உள்ளே இருப்பவர்களைப் பார்க்கவும் முடியாது.

சில வீடுகளில் 'வியூ போன்' (View Phone) எனப்படும் நவீன தொலைபேசி வாசலில் காணப்படும். வீட்டுக்காரர் வந்தவருடன் சுருக்கமாகப் பேசிவிட்டு அவரை அனுப்பிவிட நினைத்தால் இந்தத் தொலைபேசி மூலம் பேசி வாசலிலே வைத்தே வந்தவரை அனுப்பி விடுவார். இந்தத் தொலைபேசியிலும் 'டெலிவிஷன்' முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதனுல் பேசுபவர்கள் ஒரு சிறிய திரையில் ஒருவரை ஒருவர் பார்க்க முடியும். எனவே, இந்த 'வியூ போன்' மூலம் பேசுவது ஒருவரை நேரிலே கண்டு பேசுவதுபோல அமைந்து விடுகிறது.

ஒருவர் தனக்குத் தெரிந்த ஒருவரை மனதில் நினைத்துக் கொண்டதும், அவர் எந்த ஊரில், எந்த இடத்தில் என்ன செய்து கொண்டிருக்கிருர் என்பதைக் காட்டும் ஜாலக்கண்ணுடிகள் பல மாயா ஜாலக் கதைகளில் வருகின்றன. 'டெலிவிஷன்' கூட கிட்டத்தட்ட ஒரு ஜாலக் கண்ணுடியையே ஒத்திருக்கிறது எனலாம். இது இப்போது பயன்படுத்தப்படும் நவீன முறைகளைப் பார்க்கும்போது, வருங்காலத்தில் மனிதன் நினைத்த ஒன்றைக் காணக் கூடியதாகவும் இது அமைக்கப்படலாம் என்றே தோன்றுகிறது, இல்லையா?

## உங்களுடன்...... ......ஒரு வார்த்தை

வே. அரசரத்தினம், செட்டிபாளையம்.

உங்கள் தொடர் கதை பெற்றேன். பரிசிலனை செய்து முடிவை இப் பகுதியில் வெளியிடுவேன்.

கிருஷ்ணதாஸ்ராஜா, நுகேகொட.

உங்கள் தொடர் கதையைப் பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகிறேன். வேறு சிறுகதை, கட்டுரை, கவிதை எழுதி அனுப்பவும், பார்க்கலாம்.

பொன்மணி மயில்வாகனம், மல்லாகம்,

அங்கத்துவப் பத்திரங்களைப் பூர்த்திசெய்து அனுப்பியவுடனேயே பெயர்வெளியாகாது. அதற்குச் சிறிது காலம் எடுக்கலாம். ஆகையால், இன்னும் ஓரிரு வாரம் பொறுத்திரும், உங்கள்பெயரும், விலாசமும், அங்கத்துவ இலக்கமும் வெளியிடப்படும்.

சி. யோகேஸ்வரி, மூளாய்.

உங்கள் ஆலோசனைக்கு நன்றி. உங்கள் கதை நீண்டு விட்டது. பிரசுரத்திற்கு ஏற்றதல்ல. நல்ல கட்டுரைகள் எழுதி அனுப்பவும். பிரசுரிக்கிறேன்.

## நீங்கள் ஒரு கணக்குப் புலியா?

[26-4-64 இதழில் வெளியாகியிருந்த கேள்விக்கான விடை]

**8 பீடிகள் குடிப்பான்.**

49 துண்டு பீடிகளை, ஏழேழு துண்டுகளை ஒரு பீடியாகச் சேர்த்து, 7 பீடிகள் குடிப்பான். 7 பீடிகள் குடித்தால், 7 துண்டுகள் வீசுவான். அந்த 7 துண்டையும் வைத்து 1 பீடியாகக் குடிப்பான். ஆகவே, மொத்தம், 8 பீடி குடிக்கிருன்.

இக் கேள்விக்குச் சரியான விடை அனுப்பியவர் ஒருவர்தான். அவர் பெயர்: சி. யோகேஸ்வரி, மூளாய், சுழிபுரம். அவருக்கு எமது பாராட்டுகள்.

('நீங்கள் ஒரு கணக்குப் புலியா?' என்ற பகுதிக்கு கேள்வியும், பதிலும் அனுப்பி வைக்க விரும்பும் மருமக்களின் முயற்சிகள் வரவேற்கப்படும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### முஸ்லிம் எழுத்தாளர் சங்கம்

“போதனமொழிப் பிரச்சினை இத்நாட்டின் முஸ்லிம்களிடையே ஒரு நல்ல விழிப்புணர்ச்சியை உருவாக்கி வருகின்றது. மேலெழுந்தவாரியாக இப் பிரச்சினையை ஆராய்வதைவிட பொறுப்புணர்ச்சியோடும் தீர்க்கதரிசனத்தோடும் ஆராய்தல் அவசியமானது. இவ்வாருன ஆராய்ச்சி நம் சமுதாயத்தை எதிர் நோக்கியுள்ள ஏனைய பிரச்சினைகள் சம்பந்தமாகவும் தீர்க்கமான முடிவுக்கு வருவதற்கு ஒரு முன்னேடியாகத் திகழ வேண்டும்”- என நேற்று மாலை கூடிய இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தின் செயற் குழுவின் போதனமொழி பற்றிய விசேடக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய சங்கத் தலைவர் ஜனப் எம். பீ. எம். மாஹிர் அவர்கள் குறிப்பிட்டார்.

பலதரப்பட்ட முஸ்லிம் பெரியார்களின் கருத்துக்களை அலசி ஆராய்ந்த பின், “தமிழ் மொழியே ஈழத்து முஸ்லிம் மாணவர்களது போதன மொழியாகவும், சிங்களம் இரண்டாவது மொழியாகவும் இருப்பதுடன், இஸ்லாமிய நெறிமுறையினின்றும் பிறழாது வாழ்க்கை நடத்துவதற்காக அரபு மொழியும், சர்வதேசத் தொடர்புக்காக ஆங்கிலமும் உரிய முக்கியத்துவத்தோடு கற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என்று கூட்டம் தீர்மானித்தது.

---

### ஈழத் திராவிடர் முன்னணி அனுதாபம்

“அறியாமை இருளிலும் மூட நம்பிக்கைச் சேற்றிலும் மூழ்கிக் கிடந்த தமிழர்களை தனது புரட்சிக் கவிகளால் தட்டி எழுப்பி, பக்தி வெறி குடிகொண்டிருந்த நெஞ்சங்களில் பகுத்தறிவு ஒளி வீசச் செய்த கவிஞர் திலகம் பாரதிதாசன் அவர்களின் மறைவு, தமிழகத்திற்கு மட்டுமல்ல, தமிழ் கூறு நல்லுலகம் முழுமைக்கும் ஏற்பட்ட ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு” என முரசறைந்த கவியரசர் பாரதிதாசன் அவர்களின் பிரிவால் துயருறும் அன்னவரின் குடும்பத்திற்கும் குறிப்பாக தமிழ் இலக்கிய உலகிற்கும், ஈழத் திராவிடர் முன்னணி தனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு எம். ஏ. மணிமாறன், பொதுச் செயலாளர், ஈழத் திராவிடர் முன்னணி ‘சுதந்திரன்’க்கு விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### அப்புத்தளை வள்ளுவர் மன்ற ஆரம்பக் கூட்டம்

‘வள்ளுவனும் வள்ளுவமும் தமிழிற்கும் தமிழினத்திற்கும் தனியே சொந்தமான சொத்தல்ல. வள்ளுவம் உலக வழி. வள்ளுவர் உலகப் பொதுமகன்’ இவ்வாறு உணர்ச்சி ததும்பப் பேசியவர் அப்புத்தளை சிங்கள மகா வித்தியாலய அதிபர் திரு. எம். பி. உக்வத்த அவர்கள்.

வள்ளுவர் மன்ற ஆரம்பக் கூட்டம் 18-4-64 சனிக்கிழமை பி. ப. 3-00 மணியளவில் அப்புத்தளை அரசினர் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தினராகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. ந. க. பெரியசாமி, துணைத் தலைவர்: திரு. ந.சௌந்தரராஜன், செயலாளர்: செல்வி நயீமா-ஏ. டசீர், துணைச் செயலாளர்கள்: செல்வர்கள்: அ. அ. கரீம், மு. க. தியாகராஜன், பொருளாளர்: திரு. நடேசன், கணக்குப் பரிசோதகர்: செல்வன் மு. கார்த்திகேயன்.

நிர்வாகக் குழு அங்கத்தினர்கள்: திருவாளர்கள்: ஆ. கணேசபிள்ளை, எஸ்.சண்முகம், இரா. பாலகிருஷ்ணன், ஜே. பால்ராஜ், கரவைக் கந்தசாமி, எஸ். வடிவேலு.

பாதுகாவலர்கள்: திருவாளர்கள்: எம். பி. உக்வத்த, ஆர். ஏ. அஸீஸ்கான், டப்ளியூ. திஸநாயக்கா.

எதிர்வரும் வைகாசி மாதம் 25ம் திகதி வள்ளுவர் விழாவினை முழுநாளும் சிறப்பாகக் கொண்டாடுவதாகவும், ஒரு பேச்சுப் போட்டியினை நடாத்துவதாகவும், கலை நிகழ்ச்சிகளை ஏற்படுத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

---

### சென்னை மணவழகர் மன்றம்

கடந்த 29-3-54 அன்று மாலை 4.00 மணி அளவில் மன்றத் தலைவர் வழக்கறிஞர் பு. ரா. கோகுல கிருஷ்ணன் அவர்கள் இல்லத்தில் கூடிய சென்னை மணவழகர் மன்ற ஏழாம் முத்தமிழ் விழாக் குழு வருகிற மேத் திங்கள் 8, 9, 10 ஆகிய நாட்களில் சென்னை சேரகலே மண்டபத்தில் மணவழகர் மன்ற ஏழாம் முத்தமிழ் விழாவினைக் கீழ்க்காணும் தலைவர்களை அழைத்து நடத்துவதென ஒருமனதாக முடிவு செய்தது:

சென்னை நகரா முதல்வர் கிருஷ்ணமூர்த்தி, தலைவர் ராஜாஜி, சி. பி. சிற்றரசு, எம். எல். சி., நாவலர் நெடுஞ்செழியன், எம். ஏ., எம். எல். ஏ., கலைஞர் கருணாநிதி எம். எல். ஏ., எம். ஜி. இராமச்சந்திரன், டாக்டர் எ. சிதம்பரநாதன் செட்டியார் எம். ஏ., பேராசிரியர் அன்புகணபதி, பு. ரா. கோகுல கிருஷ்ணன், சோமசுந்தரம், கணபதியாபிள்ளை, நாஞ்சில் கி. மனோகரன் எம். ஏ., எம். பி., ஜெமினிகணேசன் பி. எஸ். ஸி, ம. பொ. சிவஞானம், எஸ். எஸ். இராசேந்திரன் எம்.எல்.ஏ., ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம். எல். சி., திருமதி, சௌந்தரநாம் கைலாசம், பேராசிரியர் அ. கி. பரந்தாமனார் எம். ஏ., பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் எம்.ஏ., அப்துல் ஸமத் எம். ஏ., கி. வா. ஜகன்னாதன், எஸ். எஸ். மாரிசாமி எம். பி.

---

### கூத்தியவத்தை கிராம முன்னேற்றச் சங்கம்

---

#### அடிக்கல் நாட்டு விழா

“புனிதமான இவ்விடத்திலே, புனித தினமாகிய வெள்ளிக்கிழமைத் தினத்தில் ஒரு புனித கைங்கரியத்தை ஆரம்பித்து வைக்கும் பாக்கியம் பெற்றமைக்கிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன். என்னிலும் பார்க்க இவ்லூர் மக்களாகிய நீங்களே அதிக மகிழ்ச்சியடைய வேண்டும்.”

கூத்தியவத்தை கிராமச் சங்கத்தின் மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில், வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. தி. முருகேசபிள்ளை மேற்கண்டவாறு கூறினர்.

அடிக்கல் நாட்டுவதற்கு முன்பு கூத்தியாவத்தைப் பிள்ளையார் கோவிலில் விசேட அபிசேகமும் ஆராதனைகளும் நடாத்தப் பெற்றன. அடிக்கல் கோவிலில் பூஜையில் வைக்கப்பட்டு, சங்கு சேமக்கலம் முழங்க, சங்கத்தின் சமயப் பிரிவாகிய இந்து இளைஞர் மன்றத்தினர் வேதம் ஓத ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அடிக்கல் நாட்டும் சடங்கின் போதுமன்றத்தினரால் சிவபுராணம் ஓதப்பட்டது.

பொது மக்கள் பலர் தமது நன்கொடைகளை வழங்கினர் மற்றும் பலர் நன்கொடை தருவதாகப் பதிவு செய்து கொண்டனர்.

நன்கொடைகளை திருவாளர்கள் க. காசிவிசுவநாதன் (பொருளாளர்) ச. சுப்பிரமணியம் (துணைத் தலைவர்) இராசரத்தினம், ஆ. கு. சிவபாலசுந்தரம்பிள்ளை (இணைச் செயலாளர்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

---

### உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலை பிரிவுபசார விழா

‘மாணவர்கள் கல்வி உயர்ச்சிக்குப் பெற்றோர்கள் முயற்சிமட்டும் போதாது. ஆசிரியர்களது கையிலே தான் எதிர்கால இளைஞர் சமுதாயம் தங்கியுள்ளது. ஆசிரியர்கள் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். அவ்வாறு உயர்ந்த சமுதாயப்பணிபுரியும் ஆசிரியர்களைக் கௌரவிப்பது நமது கடனாகும்’ என்று, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் இருந்து மாறிச் சென்ற ஆசிரியர்களான பண்டிதர் இ. நவரத்தினம், பண்டிதர் ஆ. சின்னத்தம்பி, திருவாளர்கள்; வீ. ஆறுமுகம் இ. ஜெகசோதி, கா. காசிப்பிள்ளை ஆகியோர்களுக்குப் பிரஸ்தாபபாடசாலைப் பெற்றோராசிரியர் சங்கம் நடாத்திய பாராட்டுபசார விழாவுக்குத் தலைமை தாங்கிய பெற்றோராசிரியர் சங்கத் தலைவர் திரு. அ. இளையதம்பி தமது தலைமையுரையின்போது கூறினர். திரு. சு. சேனாதிராசா சகலரையும் வரவேற்றுப் பேசினர்.

சைவத் தமிழ் வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. சி. பொன்னுத்துரை, ஆசிரியர்கள் அ. பஞ்சாட்சரம், இ. சரவணமுத்து ஆகியோர்கள் பாராட்டுரை வழங்கினர். பண்டிதர் இ. நவரத்தினம் பண்டிதர் ஆ. சின்னத்தம்பி, வீ. ஆறுமுகம் இ. ஜெகசோதி வடபிரதேச ஆசிரியர்சங்கச் செயலாளர் கா. காசிப்பிள்ளை ஆகியோர் தமக்களிக்கப்பட்ட உபசாரங்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

பெற்றோராசிரியர் சங்கச் செயலாளர் ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை பாராட்டுபசாரம் பெற்ற ஆசிரியர்களைப் பாராட்டியதோடு, உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நீண்ட கால சேவையாற்றி ஆசிரியப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் திரு. ஆ. கந்தையா அவர்களுக்கு, அடுத்த தவணையில் பிரிவுபசார விழா ஒன்று நடைபெறுமென்றும், அவ்விழா சிறந்து ஓங்குவதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசியம் என்றும் சபையோர்களைக் கேட்டுக்கொண்டார்.

---

### அனுதாபச் செய்தி

ஞாயிற்றுக் கிழமை 12-4-64 மாலை 4.30 க்கு அமரகவி பாரதியார் நாடக மன்றப் பணிமனையில் இராண்டுநிமிடம் அனுதாபம் தெரிவித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு:-

மதுரை மணிநகர் சரஸ்வதி உயர்நிலைப் பள்ளி இடிந்து விழுந்ததால் உயிரிழந்த மாணவி, ஆசிரியைகள் பற்றிய செய்தியும், நாதசுர மேதையான காருக்குறிச்சி திரு. அருணசலம் அவர்கள் அகால மரணத்தின் செய்தியையும் அறிந்து கண்ணீர் விடாதோரில்லை.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும் எமது அனுதாபங்கள்.

---

# இயற்கை தந்த ஆற்றல்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனந்தமாக வாழ்வைத் தொடங்க இவர்களால் எப்படி முடிந்தது?

நான்?

### முதற்கதையின் கதி

எனது மனச் சுமையை இறக்கிவைக்க ஒரு சுமைதாங்கி தேவைப்பட்டது. ஒரே வழிதான் தெரிந்தது. காகிதத்தில் இறக்கி வைத்து, “சாவிலே சாந்தி” என்று பெயர் சூட்டி ‘ஈழகேசரி’க்கு அனுப்பி வைத்தேன். கதை அடுத்த வாரமே வந்துவிட்டது—திரும்பி! அத்துடன் வழவழப்பான தடித்த அட்டையில் அழகாக அச்சிடப்பட்ட ஒரு குறிப்பும் வந்தது: ‘உங்கள் கதையைப் பிரசுரிக்க இயலாமைக்கு வருந்துகின்றோம்’.

எனது கதையைப் பிரசுரிக்க முடியாமல் போனதால் ‘ஈழகேசரி’ ஸ்தாபனத்தில் உள்ள அத்தனை பேரும் துக்க சாகரத்தில் மூழ்கியிருக்கிறார்கள் என்றும், அந்தத் துயரத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக் கொள்ளும் முயற்சியில்தான் ஒரு—ஒரேயொரு—அட்டையை அச்சகத்திற்குக் கொண்டோடிப் போய் இந்தக் கடிதக் குறிப்பை அச்சிட்டுஅனுப்பியிருக்கிறார்கள் என்றும் எனக்கு ஒரு ‘நினைப்பு’! அந்த நினைவோடு விட்டேனு பார் என்று அதே கதையைச் சுருட்டிச் சுதந்திரனுக்கு அனுப்பி வைத்தேன். அது பற்றிய தகவல் இதுவரை இல்லை. அப்போது, சுதந்திரன் அலுவலகக் குப்பைக் கூடையைச் சுத்தம் செய்த சிப்பந்திகளே! கொழும்பு முனிசிப்பாலிட்டி லாரியில் வேலை பார்த்த தொழிலாளர்களே! எனது கன்னிக் கதையை எங்காவது கண்டீர்களா?

### விடுதலை

‘ஓஹோ! எனக்குக் கதைகள் சரிவராது போலிருக்கிறது. கவிதைகள்தான் வருமோ?’

எனக்குத் தெரிந்தவரை நாலைந்து கவிதைகள் எழுதி வஞ்சகமில்லாமல் எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பிவிட்டு அடுத்த—ஆமாம், அடுத்த—வாரப் பத்திரிகைகளை ஆவலோடுபார்த்தேன். ஒன்றும் வரவில்லை. எழுத்தாவது மண்ணாங்கட்டியாவது ஒன்றுமே வேண்டாம்.

இன்று எழுத்துலகில் இருக்கும் எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் அன்று இருக்கவில்லை. இன்றைக்கு இளம் எழுத்தாளர்களுக்கு இருக்கும் ஆதரவும் ஊக்கமும் அன்றைக்கு இருக்கவில்லை. அதனால் எனக்குள் ஒரு நீதிமன்றக் காட்சியை நடத்திப் பார்த்தேன். நான் நான் வழக்காளி, எதிரி, நீதிபதி எல்லாம். விசாரணைக்குப் பின் ‘பண்டிதர்களும் பட்டதாரிகளும் பண்ண வேண்டியதை நீ பண்ண முயற்சிக்கலாமா?’ என்ற எச்சரிக்கையோடு எதிரி விடுதலை செய்யப்பட்டான்.

### தியாகி

‘எல்லாவற்றையும் மறந்துவிட்டு தொழில் நிமித்தம் மலை நாட்டிற்குப் போய்விட்டேன். திடுமென்று ஒரு நாள் பழைய கவிதைகளில் ஒன்று’ ‘வீரகேசரி’யில் தரிசனம் தந்து நீறு பூத்திருந்த நெருப்பைக் கனிய வைத்தது. மீண்டும் எழுத முயற்சிக்கலாமா என்று எண்ணினேன். சென்ற யுகத்தைச் சேர்ந்த சிலர் என்னை நகைத்தார்கள். இந்த யுகத்தைச் சேர்ந்த சிலர் என்னைத் தாங்கினார்க்ள். எப்போதுமே இளமைக்கு வீறு அதிகம். அதனால் தலையைக் கொஞ்சம் தூக்க முடிந்தது. “அவள்” என்ற முதற் சிறுகதை நண்பர் வ. ச. சேகரனின் நிர்வாகத்திலிருந்த ஒருகையெழுத்துப் பத்திரிகையில் வெளிவந்தது. இந்தக் கதையே இன்றைக்கு நினைவில்லை. அதனால் இதை ஏன், எப்படி, எதற்காக எழுதினேன் என்று சொல்ல இயலவில்லை.

அச்சேறிய முதற் கதை என்று சொல்வதனால் வீரகேசரியில் வெளியாகிய ‘தியாகி’ என்ற கதையைக் குறிப்பிட வேண்டும். இது முழுக்க முழுக்கக் கற்பனையே. இதைப் பற்றியும் இப்பொழுது எதையும் சொல்வதற்கில்லை.

### பழைய கதை

நான் வந்த பாதையைக் கொஞ்சம் திரும்பிப் பார்த்தால்—எத்தனை பரந்த மனம் படைத்த பெரியவர்கள்! எத்தனை பண்புள்ளம் படைத்த பத்திரிகையாசிரியர்கள்!! எத்தனை அன்புள்ளம் கொண்ட வாசகர்கள்!!!

அதே நேரத்தில் மாரிக்கு மாரி குரலெடுக்கும் தவளைகள் எத்தனை? ‘நான் கடித்தால் அவன் பிணமாவான்’ என்று மனப்பால் குடித்த கறையான்கள் எத்தனை? மனச்சாட்சியை இழந்து மிருகத் தன்மை பெற்ற ஜவமங்கள் எத்தனை?

வீட்டைவிட்டுப் புறப்பட்டேன். தெரு நாய் ஒன்று என்னைப் பார்த்துக் குரைத்தது. அது ஏன் குரைக்கிறது, எப்படிக் குரைக்கிறது, என்ன ராகத்தில் என்ன தாளத்தில் குரைக்கிறது, அதனுடைய நோக்கம் என்ன என்றெல்லாம் கணக்குப் பார்க்க எனக்கு நேரமில்லை. உபயோகமான எத்தனையோ கருமங்கள் காத்திருக்கின்றன. அதனால் நான் போய்கொண்டே இருக்கிறேன். அதற்கு, நெஞ்சில் நீர் உள்ளவரை குரைத்துக் கொண்டே இருக்கட்டும்; களைப்பு வந்தால் போய்ச் சுருண்டு படுக்கட்டும்......!

(இக் கட்டுரையில் குறிப்பிடப்பட்ட மாதவன், கனகம் ஆகிய இரண்டும் கற்பனைப் பெயர்கள். சம்பந்தப்பட்ட நண்பனும் சகோதரியும் மன்னிப்பார்களாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனத்திரள் நிறைந்த தியேட்டர்களில்
## இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது!

கெயிட்டி (கொழும்பு) வேல்ஸ் (கண்டி) இம்பீரியல் (மட்டக்களப்பு) அசோகா (புத்தளம்) இம்பீரியல் (இரத்தினபுரி) நெல்சன் (திருமலை)

குளிர்சாதனம் பொருந்திய (வெள்ளவத்தை) சவோய் தியேட்டரில்
கிழமை நாட்களில் காலை 10 மணிக்கு மட்டும்



சிவாஜி கணேசன், எஸ்.எஸ்.ராஜேந்திரன்,
விஜயகுமாரி, முத்துராமன், நாகேஷ்,
எஸ். வி. சகஸ்ரநாமம், ஓ. ஏ. கே. தேவர்,
மனோரமா, எம். வி. ராஜம்மா
மற்றும் பலர் நடித்த

# குங்குமம்

டைரக்ஷன்: கிருஷ்ணன்—பஞ்சு
இசை: கே. வி.மகாதேவன்
பாடல்கள்: கண்ணதாசன்—அருணசலம்

பின்னணி : சௌந்தரராஜன்—சுசிலா—ஜானகி—ராஜலட்சுமி

## 5வது வெற்றி வாரம்!

செல்லமஹால்
மற்றும் திரைகளில்!
எம். ஜி. ராமச்சந்திரன்—சரோஜாதேவி
அசோகன்—எம். ஆர். ராதா—எம். வி. ராஜம்மா
நடித்த




# தர்மம் தலை காக்கும்

எதிர்பாருங்கள்!
சிவாஜி கணேசன்—எஸ். வி. ரங்கராவ்
சந்திரபாபு—வி. கே. ராமசாமி—சாவித்திரி
தேவிகா—எம். வி. ராஜம்மா—சந்திரகாந்தா
நடித்த

# பந்த பாசம்

## 14வது வெற்றி. வாரம் !

சென்ட்ரல் (மருதானை) மற்றும் எண்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளில்!



சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, பாலாஜி
ரங்கராவ், பத்மினி பிரியதர்சினி, கருணாநிதி
மற்றும் பலர் நடித்த

பிரசாத் மூவிசாரின்

# இருவர் உள்ளம்

இளமைத் துடுக்கில் இன்ப போதையேறி உல்லாச வாழ்வு வாழ்ந்த பணக்கார வாலிபன், கன்னி ஒருத்தியின் காதலைப் பெற தனது இளமை அத்தனையையுமே பலியிட முன் வந்தான்.

கெட்டவன் என்றும் கெட்டவனகவே வாழ்வானா—அவன் திருந்தவே முடியாதா?

திரைதான் பதில் கூறும்

எதிர்பாருங்கள்!
ஜெமினி கணேசன்,
ராகினி
நடிக்கும்
'ஏழைப் பங்காளன்'



விரைவில் எதிர்பாருங்கள்!
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
எம். ஆர். ராதா
புஷ்பலதா
ரங்கராவ்
நாகேஷ்
நடித்த



# நானும் ஒரு பெண்

## 7வது புகழ் வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சென்ட்ரல் (மாத்தளை)
வசந்தா (புசல்லாவ)
ஜோதி (கலகா)
தாஜ்மஹால் (கல்முனை)
நிந்தவூர் சினிமா (நிந்தவூர்)
சரசாவி (அக்கரபத்தனை)
சாந்தி (உடபுசல்லாவ)
காமினி (மத்துக்கம)
விஜிதா (மஸ்கெலியா)



புரட்சி நடிகர்
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நடித்த

# பெரிய இடத்துப் பெண்

## 5வது வாரம்!

மைலன் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் 5 திரைகளில்!
எஸ். எஸ். ராஜேந்திரன்
விஜயகுமாரி
எம். ஆர். ராதா
புஷ்பலதா
(மற்றும் பலர் நடித்த)

# பணம் பந்தியிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ப் வருடம் மே மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.